பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

ஞானப் புகழ்ச்சி.

தற்கலை

மெய்ஞ்ஞான சொரூபராகிய காமிலொலி ஆரிபு பில்லாஹ்

பீர் முஹம்மது ஸாஹிபு ஒலியுல்லா அவர்கள்

திருவாய் மலர்ந்தருளியது.

இதில்

ஞானப் பால், ஞானப் பூட்டு, ஞானப் புகழ்ச்சி

ஆக இம்மூன்றும் சேர்ந்திருக்கின்றன.

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களுடைய முயற்சியால்,

சுத்தமான பழைய பிரதிக்கிணங்க சீர்திருத்தி,

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

இதன் விலை] 1966 [ரூ. 3-00

இந்தப் புத்தகம் கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

ஹமீதிய்யா பில்டிங்ஸ்,

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

ஹா மீம்

பிஸ்மில்லாஹி.

ஞானப் பால்.

காப்பு

நேரிசை வெண்பா.

முப்பொருளு மொன்றாய் முடிந்திருக்கும் வேதாந்தச
சொற்பொருளான் மாலை தனைச் சூட்டவே-விற்பருவ
மையமே காப்பா மறைநாலு மேகாப்பரம்
பையனெளி யேனுரைத்த பால்

நூல்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பாலது வெள்ளை யெங்கும் பரந்தநம் மிறஸூல்பாதம்
காலது மவுத்துக் கப்பால் நடுவில் நின்றிலங்குஞ் சோதி
காலது மூச்சி னூடாய்க் கலந்ததைக் காண நம்மிற்
கோலது அலிபாம் பீடங் குதறத்தைப்பொருந்து வோர்க்கே (1)

அலிபென்ன வாதி யென்ன வதினுடைக் கலிமா வென்ன
மெலிவென்ன அலிபினாலே விண்ணதி லாட்ட மென்னத்
தெளிவென்னக் கனிதா னென்னத் திருக்கோலுவான தென்ன
முழுதென்ன முக்காலென்ன முறைமறை யோர்கள் சொல்லும் 2

வெண்பா.

சொல்லெங்கே நம்மிறஸூல் தோற்றுத் தலமெங்கே
வில்லெங்கே நாணின் விசையெங்கே-வெல்லெரிய
அம்பெங்கே வன்னியுரு வான தெங்கே வேதமுடி
யும்பொனிலை யெங்கே யுரை (3)

பிறப்பெங்கே வானிற் புகுதலெங்கே தானொடுங்கி
இறப்பெங்கே நின்றநிலை யெங்கே-வரப்பிரமந்
தந்ததெங்கே யாருயத் தாய்ப்பால் குடித்ததெங்கே
விந்தமறை யோரேவிள் வீர் (4)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இல்லல்லா காலி லொன்றை யிருத்தியே யெட்டின் மீதே
சொல்லெல்லா மிரண்டுங் கூட்டிச் சுருதியோர் வழியி னின்று
கல்லெலா முருகச் சாடுங் கனிக்கவோர் கனியை யுண்டால்
வெல்லெலா மனத்தை யெல்லாம் விண்ணொளி காண லாமே (5)

விண்ணொளி காண வேண்டின் மெய்யிறை யருளினாலே
கண்ணொளி யுருகச் சேர்த்துக் கருத்தொளி நடுவில் நோக்கிப்
பொன்னொளி மேவும் வாலைப் பொருள்ரச மருந்தி மேலாக்
தன்னொளி கண்டு ஞானத் தானவ னாக லாமே (6)

கலித்துறை.

இருட்டுமிருட்டு மிருட்டினிற் கூடி யிருட்டதனில்
இருட்டுப் பிறந்த வகையேது சொல்லவ் விருட்டதுசென்
றிருட்டு பவள மரகதம் வெள்ளை யிலங்குமொளி
இருட்டினிற் காண வெளிதோன்றி நின்றங் கிலங்கியதே (7)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆதியோ டனாதி யாகி யறிவதிற் சொரூப மாகிச்
சோதியாய் மதியு மாகிச் சொல்லொணாப் பொருளு மாகி
நீதியாய்ச் சாதி யெல்லா நிறைந்ததோர் ஹக்கு மாகி
ஓதிய கலிமாத் தன்னி லுதிப்புகம் மிறஸூ லாமே (8)

வெண்பா.

தண்ணாடி யாவணியுந் தானாடி நின்றவொரு
விண்ணாடி யைக்காண மேவுதே-கண்ணாடிக்
கண்டு தொழுதாற் கலிதீரு மல்லாமல்
விண்டிடுவ தாலென்ன மெய் (9)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

காலினை யிரண்டொன் றாக்கி நடுவினிற் கலிமா காட்டி
மேலினின் முறைகண் மூன்றில் விதமதாய் விண்ணி லோடுங்
காலினின் மறைய காலுங் கதிரவ னொளிமேற் சென்றாற்
பாலினை யுண்டு ஞானப் பதியினிற் சேரலாமே (10)

வெண்பா.

கலிமா கிடைக்கிற்காட்சிக்கென் குறையா
சலியாத வன்றேகந் தங்கம்-அலிபாலே
காண்பார் பொருளைக் கதிர்மதியின் மையவட்டத்
தேன்பாலை யுண்பார் தினம் (11)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தினமுமே யொன்றாய் நின்ற திருவொளி காண வேதான்
மனமதும் வாக்கு மொன்றாய் மறைபொருள் வெளிய தாகித்
தனமது அறுவின் மேலே தண்ணொளி கண்ட பேர்க்குச்
செனனமு மரணம் நீக்கித் திருப்பதஞ் சேர லாமே (12)

எச்சில்தான் சொல்லக் கேளு மிருட்டினிற் றந்தை தாயும்
உச்சித மாகக் கூடி யோடியே குருவி னாலே
மெச்சதோர் சிவப்பைக் கட்டி விளக்கதோர் திங்கள் பத்திற்
பச்சமா மெச்சில் தன்னிற் பாண்டமுஞ் சமைந்த வாறே (13)

அஞ்சுமேல் மூன்றுமாகி யதனுடன் காலு மாகி
மிஞ்சியே காலு மொன்றாய் விண்ணத்தில் நிறைந்த சோதி
கொஞ்சியே யொன்றாய்க் கூடிக் குலாவியே சரசஞ் செய்தாற்
பஞ்சங்க ளில்லை தேனும் பாலுமே யருந்த லாமே (14)

பாலினை யருந்த வேண்டிப் பவளக்கா லூடே சென்று
காலினை யடக்கிக் கொண்டு கடுவதில் விஞ்சை யூன்றிக்
காலினை பிடித்துத் தாங்கக் கதிர்மதி யெட்டொன் றானல்
ஆலங்க ளனைத்து மொன்று யாளலாம் பிறப்பே யில்லை (15)

பிறப்புட னிறப்பு மில்லை பிசகது தானு மில்லை
நிறப்புக ழனைத்து மொன்றாய் நின்றது நிறைந்த சோதி
சிறப்புள வமுத மூட்டித் திருப்பதஞ் சேர்க்கும ஞானத்
திறப்புக ளறிந்த பேர்க்குத் திறவுகோல் குருவதாமே (16)

கலித்துறை.

ஐயாறு மாறு மதிலாறு மொன்றி லடங்கியபின்
மெய்யாறும் வந்து வெளிப்பட்ட தேயுயர் விண்ணுலகிற்
கையாறும் வாங்கிக் கருவங் ககத்திற் கலந்திருக்கப்
பொய்யாறு தள்ளிப் பொருளாறு வந்ததிற் புத்தியிதே (17)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

புத்திதான் பெரியோர் சொன்ன பொருளதைக் காதில் வாங்கி
முத்தியா மிதனிற் கூட்டி மூண்டெழுங் காவி னூடே
சித்தியாம் காலும் வாங்கிச் சேர்த்தெல்லா மொன்ற தாகப்
பத்தியாப் பணிந்த பேர்க்குப் பரவெளி காணலாமே (18)

சித்தியா மெழுத்துத் தன்னிற் றீயென்ற வெழுத்தை யோட்டி
முத்தியா முக்கோ ணுள்ளே முறையுடனும் வாங்கிப்

பத்தியாய் விழிகளிரண்டும் பரமதி லொடுங்கி னுக்கால்
வெற்றியா மிறஸஅில்வந்து விளம்புவா ரமுதந் தானே (19)

வெண்பா.

ஓங்கும் கொடிமரத்தி னுச்சிக் கலிமாவால்
வாங்கிக் கொடிக்கட்டி வைத்திடுங்கள்—தூங்கியெழு
ஞானக் கொடிபறக்கும் நன்மைமிகுத் திட்டகொடி
தானத்தி லுற்றவர்க்குத் தான் (20)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உறுதியா யாறைக் கொன்றா லுன்னுடை தேகம் பொன்னாந்
திகிர்திதா னில்லா வண்ணஞ் செல்லுவாய் மெள்ள நாலுந்
தகுதிதா னீயேயெட்டாத் தவமதை யறிந்தா யானால்
மிகுதிதா னிதுவே மெய்யில் விளங்குமே தீபந் தானே (21)

தானென்ற தீபந் தானுந் தனித்தது வானில் நிற்கும்
கானென்ற தந்தை தாயும் காடிய சமையத் தன்னில்
ஊனென்ற குருதா னோடி யுறைந்தவோர் சிவப்பி னூடாய்க்
கானென்ற பூத மைந்தின் காரணஞ் சமைத்த வாறே (22)

காரண பூதந் தானுங் கலந்துவே றாகா வண்ணம்
பூரண குருமெய்ஞ் ஞானப் புதுமையை யறிய வேண்டும்
ஆரண ஷறகி னாலு மடங்கிடா வாதி தன்னை
நேரெனப் பணிவோர்க் கெல்லாம் நித்தங்கண் காண லாமே (23)

காணலாம் காட்சி மெத்தக் கருவுற்ற வெழுத்தை யுன்னிப்
பூணலா மிறைவன் பாதம் பொருந்தலாம் பிறப்பே யில்லை
ஆணைப் பெண்ணு மொண்ணா தடங்கிய குருவின் பாதந்
தோணலாம் ஆல மெங்குஞ் சொல்லுண்மை யறிந்த பேர்க்கே 24

அறிந்தது நிசமுண்டானா லவனியை யாள லாகுஞ்
செறிந்தவோர் மனமும் நேராய்ச் சித்தினை யறிய வேண்டும்
பிரிந்துவே றாகா வண்ணம் பெலத்திடுங் கனியை யுண்டால்
திருந்துமே அறுஷில் வாழுஞ் சலத்தினை யருந்தலாமே (25)

சலத்திலோ கீழோ மேலோ சார்ந்திடு நடுவோ முன்னோ
நிலத்திலோ பின்னோ வுள்ளோ நீங்கிடும் புறமோ வாக்கோ
குலத்திலோ வாணோ பெண்ணோ கூறிட விரண்டோ வொன்றோ
நிலைத்ததெவ் விடமோ வுன்றன் நேர்மையை யறிந்தி லேனே (26)

கலிச்சந்த விருத்தம்.

அஞ்செழுத்து மஞ்சுமுக மானவோர் சபையிற்
பிஞ்செழுத்தை யோட்டியதிற் பேரெழுத்தினூடாய்
நெஞ்செழுத்தைத் தானெழுப்பி நிலைநிறுத்திப் பார்க்கில்
அஞ்செழுத்து மோரெழுத்து மாரெழுத்து மாமே (27)

ஆறெழுத்தி லேபிறந்த வருளெழுத்தை நீயும்
ஈறெழுத்தி லேயுணர்ந்து மிருதயத்தி னூடாய்
நேரெழுத்தி லேமடித்து நின்றதனில் நோக்கப்
பேரெழுத்தி லீசன்வந்து பேசுவது மெய்யே (28)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பேசுவா னுதி நம்மிற் பிதற்றுமா மவனைச் சேர
வீசுவா ரீமா னுள்ளே வெறியென்ற காலன் நீங்கி
நாசிவாய் காது கண்ணு நடுவில்வின் னிடையிற் சேர்த்தால்
ஊசிவா வென்றோடி வட்டத் துட்கருச் சமைத்த தன்றே (29)

வட்டமோ வொளிவோ தேனோ மறையதி லுதித்த வானே
இட்டமோ ஈமான் றானே விரவுமேல் வொளியுள் ளானே
திட்டமோ ஆதம்தானே திருக்குரு தந்தை தானே
ஒட்டனே வோரடில்லானே வுரைக்கயா னறிந்திலேனே (30)

அறிந்தது மொருவன்றானே யவனுட னம்மைக் கூட்டி
மறிந்தெழு மஃரிபத்தின் வழிதனை யுணரும் போது
திருந்தவே யாணும் பெண்ணுஞ் சேர்ந்தவ ரொன்ற தாக
வருந்தவே யென்னை யீன்று வளர்த்தவர் மகிழ்ந்த வாறே (31)

மகிழ்ந்தது மவனே நாமோ வள்ர்த்திடு மாதந்தானே
புகழ்ந்தது வேறு மேலோன் பொருந்தின காலந் தன்னில்
உகந்தது மவனே தன்னி லொளியதில் விளைந்த தாலே
தொகைந்தது மவனே யன்றிச் சொல்லவே யில்லை தானே (32)

வெண்பா.

வேலையிது வானல் விளையாட்டுக் கென்னகுறை
சோலைவானம்புவனஞ் சூட்சமன்றோ—சீலமுடன்
என்பீர்மு ஹம்மது திருபாத மேதுணையாத்
தன்பீர் கதியெனக்குத் தான் (33)

ஞானப்பால் முற்றுப்பெற்றது.

ஹாமீம்.

பிஸ்மில்லாஹி.

ஞானப்பூட்டு.

கலி நிலைத்துறை.

அந்த நாளையி லஹ்மதைத் துதிக்குமுன் னிறையோன்
விந்தை யாகிய லாமலி பானதை விரும்பிச்
சிந்தை யுற்றெழு மஹ்ழூதைப் படைத்தனன் செல்வம்
வந்தவா றதைக்கண் டேஞானப் பூட்டினில் வகுப்பாம் (1)

காரிருள் விலகிய ஹபீபிற ஸூல்திருத் தோழர்
சீர்பெறு மபூபக்கருமறுது மானலி செல்வர்
நேரொளி வாகும்ஹ ஸனுஸைனை நினைவினில் நினைத்துச்
சீர்புகழ் முஹியித்தீன் சிந்தையில் வைத்துள்ளே புகழ்வாம் (2)

வேறு.

அந்த நாளு தித்த வேக வாதி சோதி நீதியே
உன்ற னேடி ரந்து கேட்பே னுண்மை ஞான வல்லபம்
சிந்தை யுட்டெ ளிந்த ஞானச் சிறும லுக்கர் செல்வன்யான்
வந்து ஞானப் பூட்ட தின் வலிமை தாவென் வல்லவா (3)

சந்த விருத்தம்.

அருளும்படி பொருள்தந்தெனை யாளும் மிறை யோனே
அருளும்படி யுனைத்தேடியே யழுதேன் சில காலம்
அருள்தந்தெனை யாளும்படி யாடுங்குழி கண்டேன்
பொருள்தந்தெனை யாளும்மிறை போதந்தரு வாயே (4)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பூவினில் வாசம் பொருந்திய தலங்கள்
புகழொடு துதித்தெழும் பூட்டில்
நாவினின் மேலே யுதித்திடுங் குழியை
நவின்றிட வுலகினி லிறையோன்

மாவினி லுதித்த குழவியின் குகையில்
மருவிய குழியைம்பத் தஞ்சில்
தாவிய பிருதிக் குழியெனக் கிறையோன்
றலமது வறிந்திட வுரைத்தான் (5)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஏகமா மதிபோல் நின்றேயெழுக்திடும் வாசி தன்னைப்
போகமாங் குழியில் நின்று பொருந்திய பிருதியப்பு
ஆகமே யமுத வாசற் குழியைம்பத் தஞ்சுங்காண
ஏககா யகனு ரைத்தா னெழுத்தினை யருளாற் சொல்வேன் (6)

வேற்றெலி வெண்டுறை.

வழியான பிரிவஞ்சு வடிவஞ்சு வகையஞ்சு வாயுவானதில்
தெளிவான சுற்றஞ்சு சுழியஞ்சுதேயுவானதிற் றிறமதாய்
வெளியாக நின்றாடு மொளிவே யெனக்கன் று
வெகுஞான வெளிகண்ட பின்
தெளிவான குழியைம் பத் தஞ்சினிற் பூரணக்
திரமாயெடுத் துரை செய்தார் (7)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கூசிய வாயு தன்னைக் குழிநூற்றி யைம்பத் தஞ்சும்
பேசிடும் ஞானங் கல்வி பிரித்திடும் வேத சாத்ரம்
கேசியாம் கன்னூல் சின்னூல் நிகண்டக ராதி ஞானம்
வாசிமே லுறைந்து வாங்கும் வருமிறை யறிவு தானே (8)

மூலமாங் குழியில் நின்ற முனைசுழி யறிய வேண்டிச்
சாலமாம் யோகம் ஞானஞ் சார்கலைக் கியானம் பாரில்
ஏலவே அலிபில் நின்று மெழுக்திடும் லாமை நோக்கி
ஆலமே படைத்த துய்யோ னரும்பொரு ளெனக்கிந் தானே (9)

ஆசிரிய விருத்தம்.

ஈந்தவுப தேசங்கண் டறையமொழி யுரைத்தபின்
னெழுக்திடுங் குழிய தனிலே
ஈந்தலிபு லாமுடனே மீமுமிக நூனுடனே
யிரைந்துவரு மக்குழியிலே

ஈந்தமஹ் மூதரொளி யிலங்குமக் குழியில்நின்
றிலாமலி பிரண்டு மிடையே
ஈந்ததிறை மீமென்ன வேயிருத யத்தடைத்து
மிருவாசற் பூட்டுரை செய்தான் (10)

கட்டளைக் கலித்துரை.

பூட்டொன்று வாசற் புகழ்தரு வாயிறை பூரணத்தில்
காட்டு மனக்கம்ப மாட்டிப்பின் னேகடு வீதிதன்னைக்
கூட்டுங் குழியஞ்சு பூட்டொன்று பூட்டக் குறிதருவாய்
ஏட்டி லடங்காப் பொருளே யெனதிரு கண்மணியே (11)

காரண மான குழியஞ்சு காபொரு ளாமுடனே
பூரண வாசற் குழியொரு மீமிற் புகழ்தருவாய்
பூரகற் றேுள ருபதேசந் தந்தருள் புண்ணியத்தால்
காரண மாகிய பூட்டுரைப் பாயிறை கண்மணியே (12)

சீராய்க் குழியிற்சென் றேறிடும் வாசியைச் சிந்தைதன்னில்
நேரான தாக நிறுத்திவைத் தாயிறை நிச்சயமாய்
வாரான வாசி யமுதக் குழியொரு வாவுகொண்டே
காரான வக்குழி பூட்டிவிட் டேனிறை கண்மணியே (13)

அஞ்சான வாச லமுதக் குழிகண் டடைத்துவிட்டேன்
எஞ்சா னுட லுக்கு ளேகிய வாசியை யென்னிறையே
அஞ்சாமல் நின்றருள் பூரண மேயெற் கருள்புரிவாய்
எஞ்சானுக் குள்நின் றருள்வா யெனதிரு கண்மணியே (14)

அஞ்சான பஞ்சமா பூதங்க ளஞ்சு மணியணியாய்
எஞ்சானுடலுக்குள் தானாக்கி விட்டதுமென்னிறையோன்
கஞ்சா யிருந்த வினையை யகற்றவும் காடிவந்தே
அஞ்சான பூரணங் கண்டடைத் திட்டனென் கண்மணியே (15)

விந்தைய தான குழியைம்பத் தஞ்சும் விளக்கொளிபோல்
என்றன் மனதி லெழுந்திடு வாசிகண் டேயருளால்
சொந்தம தான வடிமையென் றேனென்னைச் சூழ்ந்திருக்கும்
என்றன் மனக்கண் திறந்தருள் வாயென்றன் கண்மணியே (16)

முந்த வமுதக் குழியச் சரத்துக்கு முன்னின்றெழுத்
தெந்தமக் கீந்தரு ளெம்மிறையேயின் றெழுத்தறிந்தால்
முந்த அருஷு குருஸு சுவனமிம் மூன்றெழுத்தும்
உன்றன்முன் னின்றுறை வாய்ச்சமை வாகுமெங் கண்மணியே 17

அக்குழி வாச மறிந்தே னிறையா லனுதினமும்
ஒக்கு மெனமலர்த் தேன்வாச மானதி லோதிடுவோர்
சிக்கு மெனச்சில பேரறி வார்மனச் சிந்தையுளே
ஹக்கனே நீயெனக் கீந்தருள் வாயென்றன் கண்மணியே (18)

அஞ்சாமல் நின்றுள மைம்பூத மஞ்சு மறையினின்றே
இஞ்சாம லோடிய வாசியைக் கண்டுள முட்கலந்து
மிஞ்சாமல் நின்றவோர் மெய்வழி கண்டபின் மேலவன்றன்
எண்சாணுக் குள்நின் றெனைக்காத் தருளுமென் கண்மணியே

விருத்தம்.

தருணமிது கண்டு கருணையருள் கொண்டு
    தயைகூர்ந்து விரைவாகவே
அருணவிழி கண்டு மருள்மனதி லுண்டு
    மருவிற்றெளிந்த பொருளே

சரணமது கண்டு சமையமிது வென்று
    சற்குருவெனக் கருளுவாய்
கருணைமன மாகவெனைக் காக்குமிறை யேயுனைக்
    கண்டுமனக்தேறி யிருக்தேன் (20)

பிறிவது மெழுக்தேயரு ளொளிவது திரண்டுவரு
    பேசுமொளி வானகுழியில்
அறிவது மெழுக்தேயுரை தெளிவது முறைக்துநிறை
    வருட்கமலமீதி லொளிவாய்க்

குறியுட னெழுக்துவருங் குவையுட னடைத்தகுழி
    குணமது வறிக்துவரவே
அறிவது மெழுக்தமுத மடியனுக் கீக்தருளெ
    ஞதியிறையோனே மனதில் (21)

பிரிவான குழிமூன்று பேரஞ்சு மூரஞ்சும்
    பேசுமொழி யானகுழியில்
வரியான றூஹஞ்சு வழியஞ்சு ரூபஞ்சு
    வகையான திற்றெளிக்து

தெளிவான மூமின்கள் திருமறை கண்டோதுவார்
    திருஞானம் பெற்றோர்களே
அறிவான குழியோக மலிபுலா மீமென்று
    மறிக்தோர்கள் சொல்லிவிடுவார் (22)

அருளொளிவே யுன்றன் திருவொளிவேதக்து
    திருவருளெ மூக்தபதியில்
இருளதை யறுத்து மனப்பொருள் புரிக்து
    மருள்பூரண மானவிறையே

கருவதுமுதித்த மொழியுரு வெழுக்தவகை
காரணம தானகுழியில்
பருவவய தானபையல்தேடிவரு வேன்மனது
கூடியெனை யானென்னிறையே (23)

அண்டபகி ரண்டமுத லாகாச மெய்ம்மூல
மணிகடு மேருகுழியுங்
கண்டவழி யோகமும் ஞானமுங் கல்வியும்
கருவிலுரு வானவழியும்

ஒன்றான பிரிதிவிக் குழிவாச மானது
முச்சிமலர் பச்சியெனவே
கன்றான பிரிதிவிக் குழிவக்து கின்றென்னை
காட்டம்வைத்தருளுமிறையே (24)

கீகின்னிட மொளிதான் கின்னிடமருளே
கோனின்னிட மறியவே
வானின்னிட மிறையே தானின்னிட மலர்க
ளேகின்னிட மறியவே

யானின்னிடம் பிரிதே வின்னிடம் வாசி
தானின்னிட மறியவே
தேனின்னிடம் வாயு தானின்னிடம் மறியக்
கோனென்றனக் கருளுவாயே (25)

திட்டமுடன் வாயுதனி லெட்டுகான் கொன்றையுக்
திறனக வென்றருளுவாய்
வட்டமுடன் மூவேழு மூன்றுசுழி யானதும்
வழிகண்டு மோடிவருவாய்

திட்டமுட னுன்மனமு மென்மனமு மொன்றாய்த்
திறனு கின்றருளுவாய்
கட்டாண்மை செய்யாம லெட்டுகான் கொன்றையுங்
காட்டியருள் பூட்டியருளே (26)

சுழிகண் டெழுக்தகுழி யொளிகண்டு மனக்தேறு
முண்மையருள் பெற்றவிறையே
தெளிவாக வுனைக்காண வழிகண்டு தேடுறேன்
திருவருளுதித்த வொளிவே

களிமதஞ் செய்குவாய் கிழ்மேலுக் தெரியாமல்
காம்பீர மானவகையோ
தெளிவான குழி நாற்றி யைம்பத்தி யைக்துக்
திட்டமாய்ச் செப்புமிறையே (27)

கலி வெண்பா.

உன்னை யழியாம லுன்மனதுங் காணாமல்
பின்னை மகிழ்வார் பெரியோனே-வன்னமதால்
தன்னைப் புகழ்வார் தலைவனென்றும் பேரறியார்
முன்னே யுதித்த முனைசுழியால்-மன்னவனே

உன்னைப் புகழ்ந்தேத்தி யுருக்கமுடன் றேடாமல்
பின்னைப் புகழ்ந்தேத்தும் பேர்கண்டாய்-என்னையே
இவ்வுலகி லேபடைத்தா யேகா வுனைப்புகழ்வேன்
தவ்வைபிதா வில்லாத தானவனே-முன்னம்

அறுஷுங் குறுஸு மமைக்குமுன்னே நீபடைத்த
பிரியமுடன் மாராயக் தந்தருள்வாய்-உன்னைத்
துதித்தேன் சிலகாலக் துன்மாயை நீக்கி
இருக்க உதவிதந்தா யென்னிறையே-பதுக்கமுடன்

உண்மைப் புறுக்கானை யோதினே மென்றுசொல்லி
கன்மையுள்ள வல்லபத்தை காடார்கள்-செம்மை
உருக்கமுடனுன்னை யுகக்தறியா மூடர்
சிறுக்கு நரகமதிற் சேர்வார்-மறுக்கமாய்

உருக்கமுடன் றேடி யுகக்துகின்று கேட்போர்
பெருக்குஞ் சுழிமுனையைப் பேசுவார்-செறியுடனே
பேசுங்குழி நாற்றியைம்பத் தஞ்சும் கொடி கவுறர்
வாசமெனச் சொல்வார் வகையறிக்தே-ஆசையால்

பெண்மாத ரோடுதான் பேசியிருக் கும்போது
கண்ணு லமுதக் குழியொன்று-பின்னாலே
ஆசையுட னப்பா லமுதக் குழிகடக்தே
ஆஷிக் கெனுங்குழியுண் டானதுவே-பாசமறப்

பரிவாக நின்றகுழி பகரார் களிவ்வுலகில்
உருவாக நின்று மொழிவிறங்கும்-அறிவாக
வாசி யெழுக்து வலமாகச் சுற்றிவக்தே
ஓசை யிடதுபுற முட்புகுக்து-பேசுமென

ஓசைக் குழியி லொளிவிறங்கிச் சுற்றிவந்தே
ஓசைக் குழிகண் டதிலிருக்கும்-வாசமாய்
ஓசையாய் நின்றே யுணர்வார் விக்குழியும்
பாசமற நின்றிலங்கும் பார்வையரல்-நேசமுடன்

மூளாக் குழியில் முடுகியுட் சென்றுநின்றும்
ஏழாங் குழிகண்டே னென்னிறையே-தாளாமல்
அக்குழிக் கோர்மலக் கணியணியாய் நின்றுருவாய்
தர்க்கமிலாக் கெற்பமதிற் றூன்வளர்த்தா-ரெக்குமேல

ஏகா வுனைப்புகழ்வே னிவ்வுலகி லேபடைத்த
வாகான பூட்டருள்வாய் வல்லவனே-நோகாமல்
தந்தா யெனக்குத் தலைமுறைகள் கேளாமல்
என்ற னிடத்தி லிருப்பவனே-சொந்தமுடன்

முந்த வொளிவு முதலோன் முஹியித்தீனும்
என்ற னிடத்திற்கு மென்னிறையே-சந்தமருள்
இந்தக் குழியிறையோன் லாமுமீம் தால்றேயும்
வந்தமத்தும் ஷத்தும்ஹம் சேழுமேழ்மலக்காய்-உன்றனல்

வெள்ளிதிங்கள் செவ்வாய் வேந்தன் புதனுகும்
வள்ளல்முன் னுதித்தெளிந்த நான் மலக்கு-முட்குகையிற்
போந்தநாள்சிந்தைசனி ஞாயிறுவி யாழனென்றுக்
தான்றுதித்துச் சொன்னநாள் தான் (28)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

விளைந்திடுங் குழியே மாலே விபரநூற் றைம்பத் தஞ்சும்
உளைந்திடும் முள்ளம் நோக்கி யுன்னையான் றேடும் போதில்
அளைந்தவக் குழியை நோக்கி யழுதுன்னைத் தேடி வாடி
வளைந்திடும் வாவை நோக்கி வந்துயா னுன்னைக் கண்டேன் (29)

கண்டபின் னிறையே யென்றவன் கவலைக ளெல்லாந் தீர்ந்தேன்
விண்டனன் ஞான யோகம் வெளிப்பொருள் நோக்கிக் கண்டேன்
தொண்டனைக் காக்கும் வல்லத் துறவுகோல் ஞானப் பூட்டும்
என்றனக் கீந்தி ரட்சித் திரங்கென தரசர் கோவே (30)

ஆதியே யமுத வாச மறிந்திட வுறைத்த போது
சோதியாம் பன்னீர் வாசஞ் சுழிமுனை தன்னிற் காணும்
நீதியா யாஷிக் கென்றும் நின்றெழுங் குழியின் வாசம்
ஓதிடு மிறையே சீனி யுந்துமவ் வாசந் தானே (31)

அந்தகற் பிரிதி வியப்பு முறுங்குழி வாசஞ் சொல்வோம்
சிந்தையி லெழுந்த வாசி சிதந்திடும் பாலுந் தேனும்
விந்தையாய் வாயுந் தேயும் விரும்பிய குழியில் நின்றே
எந்தமக் கெழுந்த வாச மெருக்கலம் பூவாம் பிச்சி (32)

ஆதிமுன் னிருந்த வாச மணுகிய குழியின் வாசம்
சோதியா மம்பர் வாசஞ் சுழிமுனை தன்னை நோக்கி
வேதியர்க் கதிப ரான விரும்பிய மஹ்ழூ தாலும்
ஓதியே யுரைத்த வாச முறுங்குழி யேழுங் கண்டேன் (33)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வரியாக நின்று குறியான வழியே பரியோ டடங்கி வருவாய்
நெறியாக வுன்னை யறிவாக வெண்ணிச் சரியாக நின்று புகழ்வேன்
அறிவாக வுன்றன் மனமீதி லுள்ள வறிவைப் புகட்ட வருவாய்
விரிவாசி மீதிற் பரியேறி வந்து சிறியேனைக் காக்கு மிறையே 34

வேறு.

புணையுன்னிடத் துணையே யிறை பிணையாகி வருவோர்கள்
அணையென்றுமே ஞானக்குழி யறிவுக்கிளி யேகான்
இணையொன்றி லடங்காத விறையோனே யெனைக்காத்துப்
பிணையேன் பிழைபொறுத்துப் பெலன்றருவா யிறையோனே(35)

வேறு.

தந்தரயிறை யோனேயுந்தித் தலமா னதைவிள்வாய்
எந்தங்குகை யுள்ளேயிருந் தெழுந்த துதியறிய
முந்தவொளி வானமஹ்ழூதரா னவெழுத்தாம்
அந்தத்தொனி யாயிரைய அலிபா னதுலாமாம் (36)

அல்லும்பக லாக வகமகிழ்ந்தே னுனைத்துதித்தேன்
சொல்லுமறை யோர்ஞானச் சுருதி யறியாமல்
வெல்லுமிபு லீசைக்கண்டு வெருட்டார் மனப்பொருட்டால்
நல்குமிறை யோனேயுனை நாடிப் புகழ்ந்தேனே (37)

புகழ்ந்தேனிறை போய்ஞானப் பூட்டா லுனைத்துதித்தேன்
நிகழ்ந்தசில பேர்களுனை நினையாம லேபுகழ்ந்தோர்
இகழ்ந்தே யுணர்வழிந்தே யிறையேநின் பதிகாணர்
புகழ்ந்தேயறி ஞானக்குழி பூட்ட வருள்தந்தாய் (38)

கீர்த்தனை.

இராகம்-உசேனி. தாளம்-ரூபகம்.

பல்லவி.

இருபொழுது மொருநினைவா யிருக்குதேயென் யாது
ஏழையடி யேன்முகம்பார்த்திரங்கிடுமிப் போது

அநுபல்லவி.

கருமுகினிழல் கவிகைபியிறஸூல் மரபில்வரும்
ஹக்கனருள் சேருமப்துல் காதிறு முஹியித்தீனே (இருபொ)

சரணங்கள்.

சரியையொடு கிரியைவழி தானறிந்து சேரத்
தாண்டுபனி ரண்டுபரி தன்னிடமே சாரத்
துரியதுரி யாதீத யோகமதிற் கூடச்
சுடரொளிவு மெய்ஞ்ஞான கருவறிந்துள் ளாடப்
பருவமுட னொருகாலும் செயலறிந் தெக்காலும்
பசுபதியுங் கடந்து துசுமவினை யுந்தீரவேதான் (இருபொ)

கண்ணினொளி வதுபோல கண்டுமனப் பூணக்
கமலமுக வடிவழகுக் குறுதினை வூண
விண்ணிலொளிதோணவொரு சுடரொளிவைக்காண
விருப்பமுடன் வேதாந்தச் சுருதியடி காண
நுண்மையதா யுள்ளறையின் றிண்ண மதுதெரிய
நுகுதாவின் செயலறியப் பகுதாது முஹியித்தீனே (இரு)

மண்டலமூன் றுந்தவிர்ந்து மாய்கைதவிர்ந் தோட
வான்பொருளைக் கண்டிறைஞ்சி வல்லபத்தை நாட
அண்டர்பயில் முயன்ற வழி யகமதிற்கை கூட
ஆலமதெல் லாம் நிறைந்த வருளறிந்துள் ளாட
வண்டணுகாத தாமரையின் னின்ற விடமறிய
மைக்கடலுக் குள்ளறையின் ஹக்கன் றிருவுரைப்பேன் (இரு)

ஞானப்பூட்டு முற்றுப்பெற்றது.

ஹாமீம்.

பிஸ்மில்லாஹி.

ஞானப் புகழ்ச்சி.

வெண்பா.

ஆருறுக் கப்பால் லணுவணுவாய் வந்துலகில்
வேருரு மொப்பில்லா மேலோனே-வீருன
புகழ்ச்சிது ஆவடியேன் புகலுதற்கு நீமனதுள்
மகிழ்ச்சி தருவாயே மகிழ்ந்து (1)

அஞ்சு மறியாம லைபேருங் காணாமல்
நெஞ்சுதனி லேயிருக்கும் நித்தனே-உன்செயல்கொண்
டோதும் புகழ்ச்சியைநா னுரைப்பதற்கு நீயெனக்கும்
போதந் தருவாயே புரிந்து (2)

அற்பஜல மக்கினியா லழியாமற் காவல்செய்து
கெற்பமதில் வைத்துருவாய்க் கிளர்ந்ததற்பின்-மெய்ப்புடனே
தாணயி லாக்கியென்னைத் தான்வளர்த்துக் காத்தவொரு
காரணனே நீயிதற்குக் காப்பு (3)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

முத்தொடு பவளம் பச்சை முதலொளி புவனுங் கூட்டிச்
சத்தியாய்ச் சிவனாயிந்தத் தாரணி தன்னி லாக்கிப்
பத்தியா யெனைவளர்த்த பரமனே யுனையான் பாட
இத்திசை யனைத்தும் போற்று மிறைவனே துணைசெய் வாயே 4

உதிரமோ டென்புந் தோலும் ரோமமும் தசைந ரம்பும்
திதிவரி தாகி நின்ற சீவனுஞ் சிவனுங் கூட்டி
மதுரமோ டுருவா யென்னை வகுத்தவா வுனையான் பாட
விதுரமோ டெவரும் போற்றும் வேந்தனே துணைசெய் வாயே (5)

கலி விருத்தம்.

ஆலம்பதி னெண்ணாயிர முன்னாகம கிழ்ந்தே
மூலமறு நான்கொன் றினில் மோகந்தரு முதல்வா
காலன் வரு நேரங்கலி மாவென்றதென் னாவில்
பாலன் தலை மேல்நின் றுயர் பாடந்தரு வாயே (6)

ஆருமின பேரென்றுனை யறியாமலே நெஞ்சுள்
சேரும்புகழ் தேடும்படி தெரியுமிறை யேநீ
ஒருமுப தேசமொரு காளுமென துள்ளம்
பாரில்மற வாமலுயர் பாடக்தரு வாயே (7)

கலித்துறை.

செய்காலும் வன்னியுந் தானுமொன் றுய்கம்மைச் செய்திடுநாள்
மெய்யாக வேதுங் கொடுவந்த தில்லை வினை துலைந்தால்
பொய்யாம லேதுங் கொடுபோவ தில்லையென் றெண்ணிகைறு
ஈயாத வுத்தரை யும்படைத் தாயெம் மிறையவனே (8)

ஐயா வெழுக்திடு முன்னு ருதித்ததென் றுய்க்துளத்தில்
மெய்யாக நோக்கி வணங்காத பாவிகள் வெக்நரகில்
பொய்யாம லேகுவ ரென்றே புவிக்குள் பசித்தவர்க்கோன்
றீயாத வுத்தரையும் படைத் தாயெம் மிறையவனே (9)

கணங்காத கந்தைக்கு முன்புறக் துந்திக் கமலமதில்
புணங்காம லக்தித்த தேதென்று நோக்கிப் புகழ்ந்துதொழ
ரிணங்கா நரகுக் கிரையாவ ரென்றுள்ளத் தெண்ணியுன்னை
வணங்காத வுத்தரை யும்படைத் தாயெம் மிறையவனே (10)

முந்தக் கிருபை பெருகிமுத் தான முஹம்மதை நீ
யெந்தக் கிருபைசெய் திங்களமைத் தாயிறை நீயெனவும்
வந்தக் குருவிடஞ் சேராமலுன்னை வணங்குதற்கோ
இந்த உவுத்தரை யும்படைத் தாயெம் மிறையவனே (11)

பொல்லா தவனுண்மை சொல்லா தவனையும் புலன்கள் தம்மை
வெல்லா தவன்றவம் வேண்டா தவன்மெய் யடியவர்பின்
செல்லா தவன்சிந்தை செய்யா தவனின் றிருவடிக்கன்
பில்லானை யேதுக்கு நீபடைத் தாயெம் மிறையவனே (12)

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துகில
கில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நேர்ந் தஞ்சிலொன்றைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும்நீ தான்பொறுப் பாயெம் மிறையவனே (13)

ஆண்பிள்ளைச் சிங்கம் முஹம்மது வாமவ ரன்றிமற்றோர்
வீண்பிள்ளை யாரும் வெறும்பிள்ளை யாம்வெற்றி மேற்பிள்ளையாம்
ஓம்பிள்ளை யென்றதுக் குள்ளேயு லாவுமுல் லாசப்பிள்ளை
தேர்ந்துன்னை நோக்கிக் கமலத்துள் ளேதெரி சிப்பவர்க்கே (14)

ஆண்பிள்ளை ஆல நபிபிள்ளை யாதியருள்பெருகும்
தேன்பிள்ளை யூறுஞ் சிவப்பிள்ளை யாதி தெரிசித்திடும்
வான்பிள்ளை முத்து மிஃராஜுப் பிள்ளை மனதுக்குள்ளே
கோன்பிள்ளை யார்க்குங் குருப்பிள்ளை யான முஹம்மதுவே (15)

வெண்பா.

ஆதியும ஞதியாய் அஹ்மது முஹம்மதுவாய்ச்
சோதியா யேக சுபசொருபாய்-நீதியாய்
இப்புவியில் வந்துயிர்க ளெல்லவர்க்குந் தாபரமாய்
நிற்பவரை நெஞ்சே நினை (16)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அவ்வ லஹுதாக நின்றமரம்
ஆகி றஹுமதாய்ப் பூத்துப்பூத்துப்
வவ்வற் கொடியாகப் படர்ந்துகாய்த்துப்
பகுது அஹதாகக் காலியாமே
சொல்லத் தகுமல்ல விப்பொருளைச்
சுருட்டி மறைக்கிறேன் ஷறகுக்காக
எல்லை யறிந்துன்னை வணங்கவல்லார்க்
கிரங்கி யிருப்போனே துணைசெய்வாயே (17)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மதுமஸ் தருந்தினவர் மனமொத் திசைந்துபல
மருள்பெற்று வந்த வர்கள்போல்
அதமத்தி லுற்றவர்க ளதைவிட்டு நற்பதவி
யறிவுற்று நம்பி வரவே
உருவற்ற தைக்கமல மதிலுற்ற வர்க்குமன
தருளூற் றெடுத்துறை செய்யக்
குருபுத் திரர்க்கரிய குணமுற் றெனக்கருளுங்
குறையற்று நின்ற பொருளே. (18)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பேச்சைச் சிறந்துள்ளான் றிருத்தூதனர்
பிரிய முறுந்தோளர் நால்வரையும்
ஆச்சாச் செனுயென் மனதுள்வைத்து
மஸனே டுஸைனையன் பாலுகந்து
பூச்சைச் சிறந்தநோர் சொற்பனுவற்
புன்சொல் தொடுப்பேனே கேட்டுநல்லோர்

சீச்சீ யெனத்துப்பிச் சினக்கவென்றும்
சிறியே னம்மாதியைப் புகழ்ச்சிசெய்தேன்
சூழ்ச்சி யறிந்தோர்க ளடியேன் சொன்ன
சொல்லிற் பிழைதீர்த்துக் கொள்வாரென்றேன் (19)

சொரியு மிறையவன் கிருபைகளுக்
துதியும் பைறுஞ்சிறு மலுக்கர்பாலன்
தெரியா திருகண்ணு மிளந்தபீர்மு
ஹம்ம தெனப்பேராய்த் தெளிந்தோன் ரூனும்
பெரியோன் றனைப்பாடிப் புகழ்ச்சிசெய்தேன்
பிழையுண் டெனவுந்தா னறிந்தவர்கள்
உரியோன் றனக்காகப் பிழைகள் தீர்த்தே
யுலகிற் றிறமாக்கிக் கொள்வாரென்றே (20)

விருத்தம்.

இறைவாகினே னடியேன் புகழ்த் திரந்தேத்திட விதனைத்
தறைமீதினி லெவராகிலுந் தர்க்கம் பறை யாமற்
குறைகாணிலும் பிழைதீர்த்திதைக் கொண்டாடுவர்க்கென்றும்
அறமேவிய கிருபைசொரிந் தருள்தாவென திரையே (21)

முதல்வாகினே னடியேன்முடு கிய காளிரந் தேத்தி
பதமேபெறும் புகழ்ச்சிதனை மகிழ்ந்தேன்புவி மீதே
இதமோடிறை நின்னேடேவ ரிரந்தோரவ ரெனக்கும்
விதகாவில்வந் துறுநன்மைகள் தருவாயுயர் வேந்தே (22)

வெண்பா.

தென்காசி நாடு சிறுமலுக்க ரென்னுமவர்
தன்பால னிக்கதையைச் சாற்றினன்-வெங்காயம்
சுக்கோ சிவனிருப்பன் சோணிதமோ வல்லவிஞ்சி
ஹக்கோவென் றுள்ளறிந்தக் கால் (23)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆதி யொருவனை மறந்துலகி
லனேகம் பிழைகள்செய் திரந்தாலங்கண்
நீதி பெறுமுயிர் தனையோவிண்ணோர்
நெறிசே ருடலையோ கேட்பார்பின்னே
சோதி யருட்படி நரகிலிட்டுச்
சுடும்போ படுந்துய ரவனோகாமோ
ஓதி யுணர்ந்தோர்களடியேன் சொன்ன
வுண்மை யறிந்துறை சாற்றுவீரே (24)

விருத்தம்.

சிறுமதுக்கர்சிகரமெய்த் தருள்செல்வனிருகண்ணற்றவன்
பிறகுகட்பொடுகுருவெனக்கிடுபேர் பீர்முஹம்மதன்
ஷறகில் மிக்குளநிலைமை கற்றுயர்சகல சற்குருபுத்திரன்
மறகவைத்தனமனதிலுற்றுயர்வள நினைக்துறைபாடுவான் (25)

வேறு.

பாரிலுயிரனைத்துமிறைக்கடிமை
பயகாம்பரெங்கும்படைத்த
ஆதிக்காருலகில் திருத்தா தரல்லால்
இறைதோளனே சொல்லடிமைதானே
ஏதுமிலிதிருவுள மதின்னதெனத்
தெரியாதென்றிரங்கிநாளும்
பீருமுஹம்மதெனு முரைபேருடைய
பைதலிறையைப் புகல்வன் கேண்மோ (26)

பாரிலெனைப்படைத் தெனக்குப்
பழுதுவினைவாராமற் பாதுகாத்துக்
காரநினைவுதிருகாம மிறைஹபீபெனது
கமலமதிற்கனவுகாட்டில்
வீறுமுபதேசமெனக் குரைத்ததினு
ளுளமகிழ்ந்துயர் மெய்ஞ்ஞானப்
பீருமுஹம்மதெனுமரிய பேருடைய
பைதலிறையைப் புகலக்கேண்மோ (27)

கலித்துறை.

ஆதம் தமைப்படைத் தெம்மையாள் கின்றஅல் லாவினிடம்
பாதம் வணங்கப் பணிநெஞ்ச மேபர மாகத்தமாய்
காத னொளியோ டொளிவா யிலங்கிடு நாயகனே
நீதக் தரும்பொரு ளென்றேசை நித்தம் நினைநெஞ்சமே (28)

ஆதம் பெறுமக்க ளெல்லா ரிலுநம்மை யன்புகொண்டே
வேத நபியிற ஸூலும்மத் தாக்கும் வெகுநன்றிக்குப்
பாதங்கள் மேலுஞ் சிரங்கிழு மாய்ப்பத்து நூறுயிராமாண்
டோதித் தவஞ்செய்தாலும்போதா தாமன் றுகந்ததுக்கே (29)

கல்லார் புகழும் நயினர் முஹம்மதை நம்பி நித்தம்
சொல்லா லுவந்து துதிமன மேதனி யாவிலுள்ள
தெல்லா முடம்புக் கிதமாம் விழிக்கிருட் டாமிறத்தால்
அல்லா றுணையொழிக் தல்லாம லின்றென் றறிநெஞ்சமே (30)

வெண்பா.

ஆதார மாகவெங்கு மானவனே யானுமுன்றன்
பாதார விந்தம் பணியாமல்-ஏராத
வன்பிழைகள் செய்தடியேன் வந்தேன்மன் னன்றிருமுன்
என்பிழையை நீ பொறுப்பாயே (31)

விருத்தம்.

வன்ன மின்னபடி யென்றுகண்டொருவ
ராலுநின்வடி வறிந்திலார்
மின்னுமென்னுளிரு கண்ணிலின்னொளி
விளங்கநின்றருளும் வேந்தனே
பின்னுமென்னுளிருந் துன்னுமுன்னுணரும்
பிறவிபேதகமி லானேயான்
மன்னுமுன்னைமறந் தென்னவன் பிழைசெய்
தாலும்பொறுவல்ல வாதியே (32)

வெண்பா.

அல்லா வொருவனென்று முஹம்மதவன் றூதரென்றும்
சொல்லா லுவந்து தொழுதிறந்தால்-கல்லாரு
மண்ணிலழி யாதே மறுமைக்கிறை தாரபலன்
எண்ணிமுடி யாதே யிவர்க்கு (33)

அல்லா திருநோக் கரியபல வாழ்வுகளும்
வல்லான் பொருட்டாலே வந்தனுகும்-எல்லாம்
கலங்கா திலங்குமொரு காயகனை நம்முட்
கலங்காம லேநிணைத்தக் கால் (34)

விருத்தம்.

அந்தமேதுமணு காதெழுந்துனடி
யார்க்கிரங்குதவியன்பனே
வந்துயான்மனது நொந்துனேடுபல
வரிசைகேட்டிரந்து போற்றுவேன்
எந்தவாக்கினுமே மென்று வாவதனை
யிரங்கி நீகபூல்செய் தேத்தியே
சிந்திடாதபொலி வும்மெனக்குன்தற
ஜாத்துக் தந்தருளென் செல்வனே (35)

அன்னைகெற்பமதி லென்னை யற்பஜல
மாக வைத்துருவ தாக்கியே

என்னைமெய்ப்பொடுயிர் தன்னை விட்டுணவ
தீந்து புவியினில்வருத்திநீ
முன்னைநட் பொடெனையே வளர்த்துதவு
முதலவாவெனது வறுமையால்
உன்னைநித்தலுமேயுன்னிக் கேட்பனதுக்
குதவி தாவெங்க ளொருவனே (36)

வேறு.

வஞ்சகமற்ற மறைப்பொருளே மனுவார்க்கு மருந்துணையே
நெஞ்சினகத்துள் ளிருந்துலகெங்கும் நிறைந்தொளி வானவனே
தஞ்சமதற்றடி யேன்மனம்நொந்து தயங்கிநின் னேடிரப்பேன்
பஞ்சமகற்றநின் வானவரோடு பகர்ந்திடென் பார்த்திபனே (37)

ஆதியுனக்கிணை யற்றவனே வழிவற்றுல காள்பவனே
நீதிகொடெத்திசையும் படைத்தஞ்சில் நினைந்திடு முட்பொருளே
வேதியர்நட்பி லிருப்பவனே வெளியோடுய ருத்தமனே
சோதியே நின்னே டிரப்பேனதற்குத் துணைச்செய்யெனுத்தமனே

வேறு.

சுகமுறும்பேயோ டலிபுசென்றோ ருசுழியெறிந்துயர்துளிகொடே
அகமுறுங்கட லதில்வலம்புரி தனிலடைந்தொரு தாளமாய்
அஹ்மதின்னிரு பதமெனன்புற மனமகிழ்துன்னே டிரந்தனன்
முகமலர்ந்தெனை முடுகிவந்துயர் முறைமைதந்தருள் முதல்வனே

எனையுவந்தருள் கமலமென்றதி னிசையநின்றிடு மிறைவனே
வினைகள்வந்தென திருதயந்தனில் வினவிவம்புசெய் யாமலே
புனைவிசுந்தரன் நினைவிலுந்துயர் புகுதவென்றுன தடிமையான்
உனையுவந்துன்னே டிரந்ததற்கு னுதவிதந்தரு ளொருவனே (40)

வேறு.

இறைவாஉனக்கு நிகராரெவர்க்கு மினிதாயெழுந்த முதல்வா
மறையாதனைத்து மனமீதிலுற்ற வடிவேசலித்து னடியேன்
அறவேமெலிந்து முனையான் மறந்து மலைந்தேனுவந்து னருளால்
குறையாதசெல்வந்தருவாய்நீ யென்றுங்குறையேதுமற்றபொருளே

மறைநாலமைத்து வருநாள்மனித்தர் மனமீதெழுந்த பொருளே
முறையோடெவர்க்கு முயர்வாழ்வளித்தமு தல்வாபுவிக்குளடியேன்
சிறைமீதிடைந்து தெளியாதிகழ்ந்து திரிந்தேனெனக்கு னருளால்
தறைமீதுசெல்வந் தவறாதவாழ்வுந் தருவாய்நிறைந்த பொருளே

அடைக்கலம்.

எண்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தொழுதுபலமி டையிலடி யேனின்னே டிரக்தேன்
றுக்கமத கற்றியருள் துய்யபெரி யோனே
எழுதரிய வடிவுடைய சொருபமதுள் ளோனே
எங்களுடெச் சங்கடம றிந்தபெரியோனே
முழுதுமன துனைநினைவு தருகல்விறை யேயரன்
மூடுகின்னே டிரக்ததற்கு னுதவியருள் வாயே
பழுதுபல வினைகளொரு காளும்வ ராமல்
படைத்தோனே யானுன் னடைக்கலம தானேன் (43)

ஆதமுத லானதுமுன் னுதமெழுக் தீனே
யண்டருல கொண்டிசையுக் தொண்டர்புகழ் வோனே
வேதமொரு காலுமுறை பேசுமிறை யோனே
மிக்கமனி தர்க்குரிய கட்புடைய கோனே
போதமறி யாதசிறி யேனின்னே டிரந்தேன்
புண்ணியனே நின்னுதவி நண்ணியருள்வாயே
தோதகம தானவரென் னேடுபகை யாமல்
துய்யோனே யானுன் னடைக்கலம தானேன் (44)

ஆதமுத லாமுயிர மைத்தபெரி யோனே
யம்புவி யடங்கவும் வணங்கவுரி யோனே
நீதமடி யார்புகழி லாசைகொளுக் தீனே
நின்பேர்முத லாருமறியாத பெரி யோனே
பேதமதி லாதுறவு தானுதவு கோனே
பெருத்தகிரு பைப்பொருளெ னக்கருளு வாயே
காதமெழு புவியோரென் னேடுபகை யாமல்
காயனே யானுன் னடைக்கலம தானேன் (45)

மாராய மானமஹ மூதையொளிக் கடலில்
வலம்புரியி லமைத்தொருமுத் தாகவளர்த் தோனே
ஆராய மிலங்குமூல கெங்குமுனை யல்லால்
ஆதிவே றில்லாத பெரியோனே யடியேன்
சீதேவி யானபலன் கேட்டுன்னே டிரப்பேன்
சீமானே நீயதற்கு னுதவியருள் வாயே
மூதேவி யாருமெனை முடுகாம லடியேன்
முதலோனே யுன்ற னடைக்கலம தானேன். (46)

அல்லாஹு ஷில்லாஹி யாதியா னவனே
　　ஆரரு மணுகாத தீதாறுள் ளோனே
வல்லானே யெல்லாம் வணங்கவுரி யோனே
　　மாறாத சோதிவடி வானபெரி யோனே
ஷில்லாஹி யென்றன்பி ரானேவல் லோனே
　　இறையோனே நீயெனக்கு னுதவியருள் வாயே
பொல்லாத ஸூமரெனே வெல்லரம லடியேன்
　　புண்ணியனேயுன்ற னடைக்கலம தானேன் (47)

ஆதிமுத லாஷிகெழுந் தலைபுகழுங் கோனே
　　ஆழியதில் நீளவிபோ டாசைகொளு வோனே
சாதிபல பேதகம தாகவருந்தீனே
　　தாமரையு ளாடுமொளி தாக்குமிறை யோனே
வேதியர்க ளாருமறி யாதபொருளேயான்
　　விரும்பி நின்னே டிரக்ததற்கு னுதவியருள் வாயே
நீதியறி யாதவரென் னேடுபகை யாமல்
　　நித்தனே யானுன் னடைக்கலம தானேன் (48)

தபியாத மக்களுனே நவில்வரவர்க் கரிய
　　நலவுகதி வாழ்வுலகில் நல்குமிறை யோனே
சபியாத முல்லாஃதம் மோடரிய ஹவ்லா
　　தழுவுமதை விலகுமறு சுகமருளு மதுபோல்
புவியோர்க ளெஞ்சுதினம் வெருவித்திடுக் கிடவே
　　புண்ணியனே யுன்னுதவி நண்ணியருள் வாயே
விவிதா யெழுந்துவினை பகராம லடியேன்
　　வேந்தனே யானுன் னடைக்கலம தானேன் (49)

ஞானமதுள் ளோர்பலரும் நாடுமிறை நீயே
　　காட்டமறிந் தேநலவு கூட்டுவது நீயே
வானவரெல் லாரும்புகழ்ந் தேத்துமிறை நீயே
　　வையக மடங்கலு நிறைந்தவனு நீயே
தீனவர்கள் நாவில்நட மாடுமிறை யோனே
　　தேடியுன்னே டிரக்ததற்கு னுதவியருள் வாயே
ஈனர்சில ரென்னைமிக வீடுசெய்யாமல்
　　ஏகனே யானுன் னடைக்கலம தானேன் (50)

மூடியுல கெங்குமொளி முங்குமிறை நீயே
　　முண்டக மலர்ந்ததி லெழுந்தபொருள் நீயே

வாடியொரு சஞ்சுழுத லெங்குமிறை நீயே
வந்துநிலை கொண்டுனது தம்பமொடு நெஞ்சில்
காடினது காஞகழு வாமல்வந் திடவே
நாயனே நீயுதவி நல்கியருள் வாயே
தேடினதெப் பொழுதுமோர் தீங்கும்வா ராமல்
சீமானே யானுன் னடைக்கலம தானேன் (51)

அஞ்சிலொரு பஞ்சமிய மைத்தவனு நீயே
அங்கமொரு பங்கிலொளி தங்குமிறை நீயே
நெஞ்சிலுறு வஞ்சகம் நிருத்தினவ னீயே
நின்மதமெ னன்புற நினைப்பவனு நீயே
உன்செயல் கொடுநத்தியி லுதித்துவ ளர்கோவே
உண்மைகொ டெனக்குதவி நண்ணியருள் வாயே
தஞ்சமறி யாதவரென் னேடுபகை யாமல்
தானவனே யானுன் னடைக்கலம தானேன் (52)

அஞ்சுமுயர் தஞ்சமொடு நெஞ்சறிவு நீயே
அகாமுத லுயிரெவையும் வணங்குமிறை நீயே
நஞ்சிலமுத தஞ்சியுயிர் நம்புமிறை நீயே
நகரமதி லுருகவரும் நாயகனும் நீயே
என்செயல்கோடஞ்சுடரை மிஞ்சுமிறை நீயே
யிரங்கியுன்னே டிரக்கதற்கு னுதவியருள் வாயே
வஞ்சகரென் னேடுபல மாறுபே சாமல்
வல்லோனே யானுன் னடைக்கலம தானேன் (53)

புவியிலுயி ரனைத்தும்புகழ்க் திடுமிறைவ னீயே
பூதங்களைக் துறையவரு புண்ணியனு நீயே
செவியொடெழுந் துரைபலது கேட்பவனு நீயே
சிவனருணன் றெழுகைக் குரியவனு நீயே
நபிகள்பல நிறைஞ்சவரு நாயகனு நீயே
நாட்டமறிந் தெனக்குதவி நல்கியருள்வாயே
ஹபீபையறி யாதவரென் னேடுபகை யாமல்
ஹக்கனே யானுன் னடைக்கலம தானேன் (54)

அந்தரங்கி றைந்தெனது சிந்தையிலு நீயே
அன்புகொடெ வர்க்குமொரு தஞ்சமுறு நீயே
மந்திரமொ டந்தகிலே தந்தவனு நீயே
வந்துதவி தந்தெனைவ ளர்ப்பவனு நீயே

தந்திரமோ டெங்கள்பல முந்திறமு நீயே
    தம்பமொ டெனக்குதவி தந்தருளு வாயே
சுந்தரபு விக்குளொரு தீங்குவா ராமல்
    துய்யோனே யானுன் னடைக்கலம தானேன் (55)

தந்தையிலி தாரமிலி தானவனு நீயே
    தண்மைகொடெ வர்க்குமொரு தாபரமு நீயே
மைந்தரிலி யன்னையிலி மன்னவனு நீயே
    மண்ணிலடி யார்க்கிரணம் வழங்குவது நீயே
சிந்தைதனி லிடறுதனைத் தீர்த்தருள்வை நீயே
    தேட்டமறிந் தெனக்குதவி செய்பவனு நீயே
அந்தமிலி நீயெனக்கோ ரிழிவுவாராமல்
    ஆதியே யானுன் னடைக்கலம தானேன் (56)

தன்னையன்றித் தனக்குநிகர் தானிலியு நீயே
    தண்மைகொடெ னக்குணவு தருபவனு நீயே
உன்னையறிந் துணருமவர்க் குறும்பொருளு நீயே
    உந்தியிலெழுந்தெனது புந்தியிலு நீயே
பின்னையெனை வெறுக்குமவர் பேதலித் திடவே
    பெரியோனே நீயெனக்கு னுதவியருள் வாயே
யென்னையடுத்தோர்க்கோ ரிழிவுவா ராமல்
    ஏகனே யானுன் னடைக்கலம தானேன் (57)

என்னைமனு வென்றுலகில் விண்டவனு நீயே
    யென்னினைய டங்கலும றிந்தவனு நீயே
பின்னைமிடை தந்துவித னிப்பவனு நீயே
    பேசுமிடி காசமத றுப்பவனு நீயே
மன்னையுனை யன்றியிறை மற்றொருவ ரற்ற
    வல்லோனே யெனக்கு னுதவியருள் வாயே
உன்னைநினை வற்றவரென் னேடுபகை யாமல்
    உத்தமனே யானுன் னடைக்கலம தானேன் (58)

அடியருடல் நின்றடிமை கொள்பவனு நீயே
    அனுதினமு முனைநினைவு தருபவனு நீயே
கடியவர்கள் குடிகள் பொடி படவருள்வை நீயே
    கலக்கமறுத் தெனக்குதவி செய்தருளு வாயே
படியிலடி யேன்வினைப்பற் றறுப்பவனு நீயே
    பாவங்கள் பலவிடறு தீர்ப்பவனு நீயே

கொடியவர்கள் முடுகிவினை செய்யாம லடியேன்
கோமானே யுன்ற னடைக்கலம தானேன் (59)

ஜின்னும்வெகு சிவனுறு தேவுகளு நீயே
செங்கமல மங்கொளிது லங்குவது நீயே
சொன்னமதி லுன்னிறமி லங்குவது நீயே
துல்லிபமோ டெங்குமொரு துய்யவனு நீயே
மன்னநிற மொன்றுமணு காதவடி வேயான்
வருந்திநின்னோ டிரந்ததற்கு னுதவியருள் வாயே
பின்னுமுன தடியவரென் னேடுபகை யாமல்
பெரியோனே யுன்ற னடைக்கலம தானேன் (60)

மனித்தர்தவ மனைத்திலும்வக் திருப்பவனு நீயே
மனத்திலிருந் தனைத்துமறிந் துணர்பவனு நீயே
தனித்தவர்கள் நினைத்தபலன் தனக்குதவு நீயே
தவக்கலென்றன் மனக்கவலை தவிர்ப்பவனு நீயே
அனைத்துமறிந் தெனக்கிரண மருளுமிறை நீயே
அடியனின்னோ டிரந்ததற்கு னுதவியருள் வாயே
இனத்திலுள்ளோ ரனைத்துமோ ரிழிவும்வா ராமல்
ஏகனே யானுன் னடைக்கலம தானேன் (61)

மற்றுநிக றற்றுலகி லெத்திசையு நீயே
மார்க்கமதை யாக்கும்பறு லாக்கினவ நீயே
பத்திகொடு முப்பதிலி ருப்பவனு நீயே
பக்கம்பதி னலில்வரு முட்பொருளு நீயே
சற்றுங்கெதி யற்றவர்க்கு முற்றதுணை நீயே
தயங்கிநின்னோ டிரந்ததற்கு னுதவியருள்வாயே
முற்றுவினை வற்றவரென் னேடுபகை யாமல்
முதலோனே யுன்ற னடைக்கலம தானேன் (62)

எனைத்திருமனத்தினில் நினைப்பவனு நீயே
யெனக்குளம னத்திறம தத்தனையு நீயே
அனைத்திலும மைப்புறவி ருப்பவனு நீயே
அமைத்ததைநி மைக்குமுன ழிப்பவனு நீயே
உனைத்தின நினைத்துன்னோ டிறப்பனிறை யோனே
உள்ளமறிந் தெனக்குதவி யுற்றருளு வாயே
சினத்தெனையி கழ்ந்திட வுனக்கழக தல்ல
சீமானே யுன்ற னடைக்கலம தானேன் (63)

அருணனுடு பலவுமமை செய்தவனு நீயே
அளவுநிலை நிறைந்த வொரு பெரியவனு நீயே
வருணனுடல் பதறியுயிர் வரவருள்வை நீயே
மறதிமதி மயக்கமொரு வடிவிலியு நீயே
சரணனிலை யெவருமறி யாதபொரு ளேயான்
தயங்கிநின்னே டிரக்கதற்கு னுதவியருள் வாயே
இரணப்பொலி வுறகுமத் திகலாம லடியேன்
இறையோனே யுன்ற னடைக்கலம தானேன் (64)

உலகிலுயிர்க் கிரணமளித் துதவுதுணை நீயே
உவகைபல வூணுறக்க மேதுமிலி நீயே
இலவ்ஹிலொரு வெழுத்துண்ட தற்கிரங்கு நீயே
இருதயத்தி லெழுதியதி லிருப்பவனு நீயே
பலனுமுக்தப் பதவிதந் தருளுமிறை யோனே
பரதவித்தங் கிரந்தற்கு னுதவியருள் வாயே
விலகும் பல வினைகளைனை யணுகாம லடியேன்
மேலோனே யுன்ற னடைக்கலம தானேன் (65)

அருபசொரு பத்தெவையு மாள்பவனு நீயே
அடியவர்க் குதவிபல னருள்பவனு நீயே
உருவவுல கெண்டிசையு முடையவனு நீயே
உருதிநிலை குறையாத பெரியவனு நீயே
இரவுபக லற்றிடத் தியங்குமிறை யோனே
யெளிமையறிந் தெனக்குதவி யீந்தருளு வாயே
மருவுமொரு பத்தியழிக் தகலாமலடி யேன்
வல்லோனே யுன்ற னடைக்கலம தானேன் (66)

அன்னையிலி யத்தனிலி யாருமிலி நீயே
அழிவுபல காலமணு காதவனு நீயே
முன்னையுரு வற்றொளிமு ழங்குமிறை நீயே
முச்சுடரி லச்சமற நிற்பவனு நீயே
மன்னையொரு முத்தினில்வ குத்தபெரி யோனே
வருத்தமறிந் தெனக்குதவி செய்தருளு வாயே
உன்னையென்ம னத்தினிலு நித்ததக லாமல்
உடையோனே யானுன் னடைக்கலம தானேன் (67)

அரியவர்கள் மனதில்வந் துறைபவனு நீயே
ஆரிருள திலிதென வுணர்பவனு நீயே

திரைபலதுண் டதிலோரொளி தெரிபவனு நீயே
ஜின்னிறம் பதனைத்திரித் தரிபவனு நீயே
உருவினதென் றெவருமுனை யறிவிலியே யடியேன்
உன்னோடிரங்கி யிரந்ததற்கு னுதவியருள் வாயே
ஒருவர்வந்தெ னக்கிழிவு பகராம லடியேன்
உடையோனே யுன்ற னடைக்கலமா தானேன் (68)

துவக்கமுடி வற்றவொரு துய்யவனு நீயே
தூதுபல துக்கபொரு துணையிலியும் நீயே
உவர்க்கடல தற்குளொரொ ளிக்குளொளி நீயே
ஒடுக்கதல் லுயிர்ப்புடனி ருப்பவனு நீயே
எவர்க்குமு னிருக்குமோ ரெழுத்தறியு நீயே
யெனக்குறகு மத்துதவி செய்பவனு நீயே
தவக்கலி விருப்பவர் தமக்குதவு கோவே
தவக்கமத கற்றுள் னடைக்கலம தானேன் (69)

கானுமெழு காடுமுயர் கானகமு நீயே
காசினியும் வானுலகுங் கடல்மலையு நீயே
தானமொரு சொர்க்கமெரி நரகமொடு நீயே
தக்கவுல குக்குதல் லுயிர்க்கு மிறை நீயே
பானுவெயில் பகல்நிலவு அறுஷுகுறு செவையும்
படைத்தோனே யுன்ற னுதவியருள் வாயே
ஈனமொரு நாளுமணு காமலடி யேனும்
இறையோனே யுன்ற னடைக்கலம தானேன் (70)

அலைகடலு மம்புவியு மழகுசெறி வானும்
அனிலமொடு கனலுடுவ மைத்தவனு நீயே
இலௌஹுகல மறுஷுகுறு செரிநரகு சொர்க்கம்
இரவிகதி ரெழுமதிய மைத்தவனு நீயே
மலைகளொடு நவமணியு மற்றமுள யாவும்
வகுத்தோனே நீயெனக் குதவியருள் வாயே
உலகில்வரும் வினைகடெனை யணுகாம லடியேன்
உடையோனே யுன்ற னடைக்கலம தானேன் (71)

கெற்பமதி லற்பஜல மிற்றெழுகு நீரைக்
கீர்த்திகொடு சீர்த்துவம தாக்கினவ நீயே
ஒப்பரவோ டித்தவுல கிற்பிறக மைத்தே
உண்மைகொடெ னக்குதவி தருபவனு நீயே

செப்பமுட னெத்திசையு மேவசம தாகச்
சீமானே நீயெனக் குதவியருள்வாயே
எப்பொழுது மிக்கமிடை சற்றுமணு காமல்
ஏகனே யானுன் னடைக்கலம தானேன் (72)

அல்லுமெழு பகலுமுரை சொல்லுமுறை நீயே
அம்பரமு மம்புவியு கம்புமிறை நீயே
வல்லவமோ டெங்குமொளி தங்குமிறை நீயே
வன்பிழைபொ றுத்துலகில் வந்துதவுநீயே
கல்புதனில் வாழுமஹறு பேழதனில் நீயே
கலக்கமறிந் தெனக்குதவி செய்தருளு வாயே
தொல்லுலகில் வல்வினைகள் தொடாரம லடியேன்
துய்யோனே யுன்ற னடைக்கலம தானேன் (73)

அப்பிலுறு மற்பஜல மத்துளிகொ டென்னை
அன்னையுத ரத்திலுரு வாக்கினவ நீயே
தப்பறவெ னைப்புவியில் வைத்தறிவ ளித்துத்
தர்க்கமற மிக்கமிடை தீர்ப்பவனு நீயே
ஒப்புவமை யற்றவொரு பெரியோனே யடிய
னுற்றன்றே டிரந்ததற்கு துவியருள் வாயே
எப்பொழுது மிக்கமிடை சற்றுமணு காமல்
இறையோனே யுன்ற னடைக்கலம தானேன் (74)

புகழும்பல புகழ்ச்சியதற் குறியவனு நீயே
புவியில்வரு முயிர்களதி லொளிபரவு நீயே
குவளையுறு கமலமதி லுறைபவனு நீயே
குறைகளொரு பழுதுபல குற்றமிலி நீயே
இகளிபுன லனலுமதி லுயர்பவனு நீயே
யென்றனினை யின்படி தருபவனு நீயே
அகிழில்விழும் வினைகளெனை யணுகாம லடியேன்
அல்லாவே யுன்ற னடைக்கலம தானேன் (75)

அல்லா வுனக்கருமை யுண்டோவெனக் கிதனை
அருள்வாய் நினைத்திடில னைத்துமிறை யோனே
வல்லா னெவர்க்குமறு வில்லாவா தியுனை
மகிழ்வார் மனங்களிலெ ழுந்தருளு வோனே
பொல்லா னுனைக்கருதி வந்தேனெவர்க்குமொரு
புண்ணியனே யுன்னுதவி நண்ணியருள் வாயே

கல்லாத கயவரெனை யெல்லாம லடியேன்
கத்தனே யுன்ற னடைக்கலம தானேன் (76)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆரும்பகழு மிறையோனே யடியேன்மனதிற் பெருஞ்சலிப்பால்
ஓதுமறைக்கு ளுனைத்தேடி யுவந்தேன் றினமுற் றுவந்ததினால்
ஏதும்பொருந்தி யிருந்திலையோவிறைவாவெனக்கு மெழுத்திதுவோ
பாரில் முகமும் பார்க்கிலையோ பராக்கோவுனக்கென் பார்த்திபனே

ஒளிசேரிறைவனொருவனென்று முடையோன்றா தரஹ்மதென்றும்
வளிசேருலகி லுனையடியேன் வணங்குமதுகண் டிணங்காயோ
வெளிசேருனது திருவுளமோ வேந்தாவெனக்கும் விதியிதுவோ
எளியேனெனது வன்பிழையோ விரங்காதிருந்தா யிறையோனே

முன்னுமெனது தீவினையால் முதல்வாமுதல்வா வென்று நித்தம்
உன்னும் பொழுதெல் லாமுறையிட் டோயாதடியே னழுதசத்தம்
பன்னுமுயர்காதேறாதோ பரனே யெனக்கும் பயனிதுவோ
இன்னமடியே னளவுசற்று மிரங்காமனமோ விறையோனே (79)

செல்லென்றுலகி லெனைப்படைத்த தீனேயெனது தீவினையால்
அல்லும்பகலு முனைத்தேடி யடியேன்முறையிட் டழுதசத்தம்
வெல்லுமுயர்கா தேறாதோ வேந்தாவெனக்கும் விதியிதுவோ
இல்லென்றடியேன் புகழ்ந்ததுனக் கேற்றதிலையோ விறையோனே

விண்டாற்றெரியாத் தீவினையால் வேந்தாவேந்தா வென்றுநித்தம்
தொண்டாற்றுதித்துன் னோடிரந்த துயரமுனது திருக்கண்ணுக்
கண்டா லுனக்கு மிரங்காதோ கருமமோஹக் கானவனே
என்றாலடியேன் புகழ்ந்ததுனக் கேற்றதிலையோ விரையோனே 81

கருடனினைவிட் டெனைப்படைத்த ஹக்கேயெனது தீவினையால்
குருடன்வனத்திற் கோலிழந்த குறிபோல்முறையிட்டுனையடியேன்
வருடிப்புகழ்ந்துன் னோடிரப்பேன் வடிவேயுனது வல்லபத்தால்
திருடனளவுற் றிரங்கியின்னஞ் செய்வாய்றஹ்மத் தீமானே (82)

என்னாலறியப்பதம்விளைத்தாயா னுமறியத் தேடுகின்றேன்[கென்றே
உன்னாலொன்றுங்குறை விலையென் னுடையோனே நின்னருட்
பன்னாளுன்னைத் தொழுதேத்தும் பழையவடியா ருடன்கூட
என்னாயகனே நீ புறப்பட்டிருந்தாயானு மிருந்தேனே (83)

முன்னாளெனக் கென்றெழுதிவைத்தமுறையே தெனதினெழுத்த
என்னாலறியப் பேறுபெற்றா லிறைவாவுனையா னுணரேனோ [தனை

அக்காளுன்னை யறிக்துதொழு மடியார்க்கென்று முதவறியேன்
என்னுயகனென் னளவுசற்று மிரங்காய்மிகவுமிரங்குகவே (84)

அன்னைவயிற்றி லற்பஜல மழியாதெனைவைத் துருவாக்கிப்
பின்னையுலகிற் பிறப்பித்துப் பேணிவளர்த்த பெரியோனே [டே
உன்னைமனதில் நினைத்தடியே னுவக்தேன் தினமுற்றிரக்துகொண்
னென்னை ரட்சித் திடேத்தி யிரங்காயெவர்க்கு மிறையோனே 85

முன்னேர்காது ஹறுபாணை முதல்வாவுனது திருவாணை
மன்னும்ஞானப் பொருளாணை வரிசைஅறுஷு குறுசாணை
உன்னும்காலுமறையாணை யொளிசேரிறஸுல் திருவாணை
என்னிற்காமத் துயரறிக்தே யிரங்காயெவர்க்கு மிறையோனே 86

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தனதுனக்குப் பொருக்தினவர் தயக்கமற்றங்
கிருப்பதுகண் டடியே மண்ணில்
மனதுபொருக் திருப்பதென்றன் வறுமையறக்
கண்டுன்னை வருந்தி யானும்
உனதுமுகக் திருத்தியெனக் குள்ளசலிப்
படங்கலுமுற் றுரைப்பே னீயும்
எனதுமுகத் திரக்கம்பார்த் தெளியன்வினை
யகற்றியரு ளிணையற் றேனே (87)

விருத்தம்.

அருண்டபூவினி லிரிக்ததாலெனையமைத்தவாவுனை நினைத்திலேன்
திரண்டபோதெனேடிரங்கித்தேவனைத்தேடி னேன்பரிதாபமாய்
மருண்டநெஞ்சினி லிருண்டவன் குபிரகன்றுமைஞ்சுடர்காணகான்
உருண்டதாமரைமலர்க்துகாணகல்லுதவி தாவெங்களொருவனே

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அந்தமு முடிவுக் தாழ்வு மனைத்தும்வக் தணுகி லானே
முக்திய கபியுல் லாதம் முதல்வனே யடியார் மெய்யில்
வித்தினுக் குயிராய் மேலே வெளிக்குனின் றூடும் வேக்தே
என்றனக் கிரண போகமிரக்கமுற் றருள்செய் வாயே (89)

கரும்பென வினிக்கும் பாவம் கசக்கும்வேம் பெனவே தன்மை
இரும்பென விருக்கும் நெஞ்ச மேழையென் மனபொ ரூமற்
றரும்பல விழிநீர் சிக்தத் தயங்கின் றடியே னின்னே
டரும்பல னமுது கேட்டே னுதியே துணைச்செய் வாயே (90)

கனைத்துவந் தெழுப்பும் பாவங் கடிதில்வந் தணுகாத் தன்மை
வினைத்தொழில் தனக்கா ளான வெறியனின் றீவி னையால்
அனைத்துமென் றுயர மாறு தழுதுகொக் தடியே மண்ணில்
உனைத்தொழு திரந்து கேட்டே னுள்ளவா துணைச்செய் வாயே

வினவிவந் தழைக்கும் பாவம் விலரயவந் தணுகாத் தன்மை
தனைவுவந் திடுமென் னெஞ்சில் தரித்தமுக் கோணில் வட்ட
மனையில்வந் தசைவு காட்டும் வடிவுநின் னருளும் வேண்டி
உனைத்தொழு திரந்து கேட்டேனுள்ளவா துணைச்செய் வாயே 92

மூமினோர் தங்க ளுக்கு முறைபிகென் றவர்க்கு மண்ணிற்
றுமதி யாமல் றஹ்மத் தருளுமென் றம்பி ரானே
பூமியி லுனைத்தொ ழாத புல்லனென் புகழ்ந்துன் னோடு
ஆமீனென் றிரந்து கேட்டே னுதியே துணைச்செய் வாயே (93)

ஆதியே கடவுளானே யன்பனே யடியார்க் கென்று
நீதிசே ரொளியி ருக்கு நெஞ்சமு நினைவும் பொங்கச்
சோதியின் னுதவி தந்தென் றுக்கம தகற்று வாயென்
றோதிநின் னோடி ரப்பே னுள்ளவா துணைச்செய் வாயே (94)

கலி விருத்தம்.

அந்தமு முடிவுமணு காதவனே நீயென்
சிந்தனை யறிந்துமென் றன் றீங்குகள் பொறுப்பாய்
உன்றனை மிகவுநம்பி யுன் றிருமுன் வந்தேன்
என்றனிமை கண்டெனையீ டேற்றுறஹ்மானே (95)

அந்தமிலி யேயடியர்க் காதரவுள் ளோனே
என்றனைமண் ணோர்வெறுத் தெனக்கிழிவு பேசும்
நிந்தனை யறிந்திருக்க நீயருள் தென்முன்
வந்தெனையீ டேற்றியருள் வல்லபெரி யோனே (96)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆதி முதலோனே தம்பிரானே
யடியார் புகழ்ச்சியைக் கைக்கொள்வோனே
நீதி யுடையோனே நீயுரைத்த
நெறிசேர் மறைநான்கு முனைத்தேடியே

ஓதிப் புகழினுங் காண்கிலானே
யுள்ள மதிலுன்னை யுவந்தார்நெஞ்சுட்
சோதி விளக்காய்நின் றிலங்குவோனே
துய்யோ னேயானுன் னடைக்கலமே (97)

தேசப் புவியின்மே லெனைப்படைத்த
சீமா னேயுன்னை ஸ்துதிடாமல்

நேசமுடனே தான் நினைத்திடாமல்
நெடியோ னேயுன்னை மறந்துலகில்

ஏசும் பெரும்பிழை பெருகச்செய்தே
னிறந்தா லெனைமண்ணி லடக்கும்போதில்

ஓசை யுடனிரு பேரிறங்கி
யுன்று யனுரென் றெனைக்கேட்குகாள்

கூசி யுடல்மெத்தப் பயப்படுவேன்
கொடியே னவர்களோ டுரைக்கமாட்டேன்

பாச முடனென்னைப் படைத்தகோவே
பதறு தவர்களோ டுமைஞ்சொல்லப்

பேசு மிறையோனே கிருபைசெய்வாய்
பெருங்கை யாளர்வந் தடித்திடாமல்

ஆசை யுடனேயிப் போதுசொன்னேன்
அல்லா வேயானுன் னடைக்கலமே (98)

கூட்டுங் கருமத்தைக் குறைப்பவனே
குறையுங் கருமத்தைக் கூட்டுவோனே

காட்டு முயிர்க்காசை நல்விரணம்
நல்கு மிறையேயன் பாலடியார்

காட்ட மறிவோனே கானிலத்தில்
நன்மை விளைத்திடு நல்லோர்கள்மேல்

தேட்ட முளபெரும் பொருளேயெட்டுத்
திக்கிற் றரியானே ஜெகதலத்தில்

கேட்டோ ரவரவர் நினைவின்படி
கிருபை மிகச்செய்யும் பொருளேமண்ணில்

ஈட்டு மொழிதினங் கேட்டடியே
னிரப்பே னதைநீகூட் டுதவிசெய்வாய்

ஏட்டிலடங்கானே யெல்லவர்க்கு
மேக பெரியோனே யெங்கள்கோவே

ஆட்டுங் குபிரென்னை யணுகாமலே
அல்லா வேயுன்ற னடைக்கலமே (99)

சொல்லாற் புகழினுற் றுலைக்கொண்ணுத
துய்ய பெரியோனே பழுதற்றுனே

கல்லார்க் கும்கல்ல பதியில்வாழ்வு
கல்குமிறையோனே கலக்தீங்குள்ளார்
எல்லார்க்குங்கபூல் மாருமலே
இரண வரணங்க ளீயுங்கோவே
பொல்லா ஞனுனே யறிக்துகேட்பேன்
பொருளே யதைகீகூட் டுதவிசெய்வாய்
ஒல்லாப் புவியின்மேல் பகைத்தோரென்னே
யுவக்து பிரியமுற் றருளவெற்றி
அல்லா நீயெனக் கருள்வாயென்று
மடியே னமானமுன் னடைக்கலமே (100)

தருண வொளிபல வொளியிருளாய்ச்
சமைத்த பெரியோனே தலைகாலதில்
இரண மெழுதின படிதப்பாம
லெல்லா வுயிர்க்குகீ வகைவகையாய்க்
கருணை யுடகல்கும் ஹக்கேயென்றன்
கமலப் பொருளேமன் புவியோர்க்கெல்லரம்
வருண னுயிர்கொள்ளுக் துரங்கக்தன்னே
வகுத்த பெரியோனே மாசற்றோனே
அருண னெடுபதி யடங்கலையும்
அமைத்த பெரியோனே யடியேற்குன்றன்
சரண நிலையன்றி வேறு மொரு
தஞ்ச மிலையெனக் கின்பமாகப்
புரண பலவாழ்வுங் கேட்டுனையான்
புகழ்வே னதைகீகூட் டுதவிசெய்வாய்
தாணி மனுவென்னைப் பகைசெய்யாமற்
றூன வனேயுன்ற னடைக்கலமே (101)

வேறு.

பொல்லாக் குபிர்களும் வருங்குற்றமும்
பொருக்தாப் பிணிதுன்பம் பலவாபத்தும்
நில்லா வறுமையு மனச்சலிப்பும்
நினைப்பு மறப்பும்வக் தெய்திடாமல்
எல்லா வினைகளு முஸீபத்தும்வக்
தென்னை யணுகாமல் காத்தருள்வாய்
அல்லா வுனைப்புகழ்க்துன் னேடிரப்பேன்
அடியேன் துஆப்பேறீ டேற்றுவாயே (102)

வேறு

ஆத கபிக்கர சானதீனே
அடியேன் பயந்துன்னோ டிரக்குகிறேன்
கீத மொழிதாவூத் கபிக்கிரும்பைக்
கிலாக் குவிதம்நீ கொடுத்தபேறும்
காதர் ஸுலையுமான் கபிக்களித்த
கலவும் பெருவாழ்வும் ராஜதமும்
ஏது மணுகாயூஸு புகபிக்களித்த
எல்லை யினிலுற்ற கெதிவாழ்வும்
வேத கபிமிஃ ருஜிலுன்னை
விளங்கத் தெரிசித்தங் கிருந்தபேறும்
காதன் முஹியித்தீன் திருவுளமும்
கல்ல ஒலிமார்கள் பெறுங்கீர்த்தியும்
கீத மூடனெனக் கருள்வாயுன்னை
நினைப்போர்க் கெலாமரு ணிகரற்றோனே
ஆதி யுனக்கிணையில் லாதகோவே
அடியேன் துஆப்பேறீ டேற்றுவாயே (103)

கலித்துறை.

கள்ள நினைவு தருமிக்தக் காயங் கலந்ததொன்றை
எள்ளள வாயினுங் காண்கில னேயென்னை யாள்பவனே
வள்ளல் கபியிற ஸூல்திரு வாணையுன் வல்லவத்தால்
உள்யொளி காட்டி யுணர்த்திட வேண்டுமெ னுத்தமனே (104)

குறைப்படுங் காயக் தனக்கா சாய்கின்ற கொற்றவனே
நிறைவிடக் தேடி மயங்குதை யோவென்று நிச்சயமாய்
இறைவனு நீயெனக் கல்லாது வேறில்லை யென்னிதய
மறையொளி காட்டியுணர்த்திட வேண்டுமென் வல்லவனே (105)

பதினெ லெழுத்தோ டுருவா யெழுந்திடும் பஞ்சறைக்குள்
மதுவார வாசலறிக்கில னேயென் னுன் வல்லவத்தால்
திருகாமத் தாணைகின் றீதாறு கண்டு தெளிக்திடவே
குருவாழும் பெட்டி திறக்கவும் வேண்டுமென் கொற்றவனே (106)

சினத்தால் மனித ருனைத்தான் மறக்தெழு தீங்குசெய்து
பினைத்தான் பயக்தங் குனைத்தேடி லக்தப் பிழைப்பொறுப்பாய்
மனத்தா லெருங்குபிர் வாராமல் காத்துயர் வாழ்வுதக்தே
உனைத்தான் வணங்க வுதவிசெய் வாயெங்களுத்தமனே (107)

அறத்தான் குபிரை வெறுத்தாலு மானிட ரஞ்சியுன்னை
உறத்தான் வணங்கிப் புகழ்ந்தாலும் நெஞ்சினி லோரெழுத்தைக்
குறித்தா லொழிந்து குணமில்லை யென்றுனைக் கூடுதற்கு
வெறுத்தாரை யூடுவக் தாண்டுகொள் வாயெங்கள் மேலவனே (108)

விருத்தம்.

அரியென் றுபனிசோ ரியவ லையெழுந்து
அலற வலம்புரி திரளவே
மரியென் றெழுமொலி யவனு மகாமு
மருவ வேயொரு தாளமாய்
விரிவொ டெழுகபி சரண மதெனதுள்
விரும்பி மகிழ்ந்துன்னே டிரந்தனு
னுரியென் றடியெனுக் குலக மதிலுன
துதவி யுவக்தரு ளொருவனே (109)

அவனிக் ககன்மலை கடலுங் கதிரொளி
யனலு மனிலமோ டிருள்களும்
சுவன தலமுதல் லுயிருக் திரளுமுன்
சொரியும் பெரும்பனிக் கிறைவனே
புவனி லடியனின் னளவி லிரந்தனன்
பிழைகள் பொறுத்துன நுதவியாற்
றவன மறிந்துயர் தலீலிங் கெனக்கருள்
சமைய புலனுறுக் தமியனே (110)

கடலு மதிலடி படுகற் றடிகளுங்
கடுகி விடுகெடு மிடியும்வக்
தடருங் கொடுமைகண் டடியன் முடுகிநின்
றடைவ தெவிடமென் றலறுகாள்
துடரு மடலெடுத் துடலில் கடமிடும்
சுடரி லுடையவக் திடுமென்றே
யிடறும் படிகண்டேன் னிடைவை முடுகிவக்
தெவிட மெனவரு ளொருவனே (111)

ப:றெடை வெண்பா.

ஆதியக்த மற்றுநின்ற அல்லாவே யெங்களையும்
நீதியற்ற பாவியென்றே நீ படைத்தாய் ஓதிமெத்த
எண்ணாத தெண்ணுவிக்கு மிப்லீஸா லெங்கள் மனம்
புண்ணாக வென்றே பொருத்தினுய் மண்ணுவான்

செய்யும்பல மாய்கையினுல் சேரவுன்னைத் தேடாம
அய்யும் வழிமறந்தா ருத்தமனே மெய்யினின்ற

வீணனிபு லீஸை வெருட்டிவிட வெங்கள்மனம்
பூணவில்லை யென்றே பொறுத்திருந்தாய் ஊணுறக்க

மில்லானே யெங்களை நீ யேதுமற்ற பாபியென்று
சொல்லாதே யெங்கள்மேல் தோஷமில்லை வல்லானே

என்னிடத்தி லுன்னை யெழுந்தருளு விப்பனது
தன்னையறிக் திப்லீஸால் தட்டுவித்தாய் மின்னுலகும்

பாருலகும் வானுலகும் பாரஅறு ஷுங்குறுசும்
தாருலகு மொன்றுய்ச் சமைத்தகாள் பீர்முஹம்ம

தென்றழைத்துப் பேசி யிருதயத்தி லுன்னொளிவைக்
கண்டுவரச் சொன்னுயென் காவலனே கன்றியது

சற்றுமறி யாமலிக்தத் தாரணியி லாசைகொளும்
பற்றலர்க ளோடிணங்கும் பாதகனுன் முற்றுமுனை

எண்ணாத பாபிகளை யேன்படைத்தா யுன்னினைவை
யொண்ணுதென் றுலிங்குதிப்பர்களோ மண்ணோர்

அவப்பதியி லாக்கிலுநீ யல்லவெங்கள் தம்மை
தவப்பதியி லாக்கிலுநீ தான் (112)

கலித்துறை.

தானுக நின்றிபு லீஸான மாயன் றனைப்படைத்தும்
பேனுக நின்றங் கரித்திடு வாசகம் பேசுமதால்
மானுரு மக்களு மாக்தரு மற்றுள ஜின்களெல்லாம்
போனுர் நரகில் விழுக்தார்கள் நீதரும் பொற்பதியே (113)

பொன்னுல கேட்டும் பெரிியேழு முன்னைப் புகழவைத்த
மண்ணுல கெங்குநீ தானல வோவவ் வகைமறக்தென்
மின்னறி போக்கி விழலறி வாக்கியே வெண்ணரகிற்
புன்னெறிகொண்டெனைப் போகச்சொன்னுயுன் பெருமையென்றே
ஆனுலு நீபொ றடியார் பிழைசெய் தழற்பதியிற்

போனுலு மெங்களுக் காதாரம் யாவர் பொறுத்திறையே
மானுக முஹம்மதென் றோதா ரழல்சுட்டு மாயுமுன்னே
தீனை பேர்க்குன் னிமானை நீகொடு சிக்தைகொண்டே (115)

நீயே ஜலத்தை யழியாத காத்து நெருப்பறைக்குள்
நீயே வளர்த்தங் குருவாக்கி வைத்தவன் நீளுலகில்

நீயே பிறப்பித் திரணமிட் டாயின்னம் சேர்வழிக்கும்
நீயே துணையெனக் கல்லாத வேறில்லை நிச்சயமே (116)

நீயே தனித்தங் கிருக்குகா ளெங்கள் நினைவை யெல்லாம்
நீயே தனித்தங் கினிமையுற் றுயிந்த நீளுலகை
நீயே படைத்துயி ரெல்லார்க்கு மீந்து நிலைபெற்றதால்
நீயே துணையெனக் கல்லாது வேறில்லை நிசசயமே (117)

நீயே யுனைப்புகழ்த் துற்றவர் காளுன்னை நீயுணர்ந்து
நீயே யுனக்கு ஸுஜூதுசெய் தாய்பின் நினைத்துருவாய்
நீயே புவிக்குள் றஸூலாக வந்தவன் சேர்வழிக்கும்
நீயே துணையெனக் கல்லாது வேறில்லை நிச்சயமே (118)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தொழுதுவந்து புகழ்வனெங்கள் துயரறிந்த துய்யவா
பழுதகன்றுன் னுதவிதேடிப் பரதவித்துன் னடியனு
னழுது கொந்துன் னளவிரந்தே னதையறிந்து னருள்கொடே
முழுதுமுன்ற னுதவிதந்தென் மிடிமைதீர்த்தி டிறைவனே (119)

எனையுவந்தென் னெளிமைகண்டென் னளவிரங்கு மிறைவனே
பனைவிழைந்து வயிரமூன்று படுகுதென்று பதறியான்
மனைபுகுந்து பகலிதென்று மருவிவாழும் வரிசைகேட்
டுனையுவந்துன் னளவிரந்த வுதவிதந்தி டிறைவனே (120)

ஹபிபைகாடித் துடருமெங்கள் கல்பில்நின்ற ஹக்கனே
புவியில்காஹின் னோடிரந்து புகழ்வனுன்ற னருள்கொடே
பகிலர்காளும் பகைமடிந்து வரமொழிந்துன் னுதவியால்
சகிலனோடு தழுவநீதி தரநினைத்தி டிறைவனே (121)

வேறு.

எனைநீ படைத்தெனக் கிரணமளித்தென திடறுத விர்ப்பவனே
மனதுசலித்துனோ டழுதுபுகழ்ந்துய வடிமையுவந்துடலில்
பனைநீரெடுத்துயர் பருவமதற்குள பதவியெனக்கருளென்
றுனைநானினைத்துனோடிரந்தனதற்குனுதவி செய்யுத்தமனே 122

பகலிரவற்றுள பதியிலுதித்தனர் பகையற் றளிப்பவனே
உகமிலெனக்குள தலீலுனைய அறிவே றொருவருமற்ற படியேன்
புகவிடவெட்கிநின் றிரந்தனதற்குநீ புதுமைகொ டிப்புவியில்
இகல்கொடெனக்குறு முதவிசெய்தீந்தரு ளெளிமையறிந்தவனே

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பகுத்தோ டனைத்தும் படைத்தோனே பஞ்சமா
　　பாதகம் செய்துன் னடியேன்
மிகுத்தே மிடைபட் டுனைத்தேடி வந்துனெடு
　　விள்வேனென் றுயரைநீ கேள்
மவுத்தோடி வந்தெனை வதைத்திடு முன்னீயென்
　　மனப்பீடை தீர்த்துன் னருளால்
சவுத்தோ டெனக்குதவி தந்தருளெ வர்க்குமொரு
　　தஞ்சமென நின்ற பொருளே (124)

உனத்தான மென்றறில் நிறைத்தாசை தந்தெனை
　　யுணர்த்தியர சாளு மிறையே
மனத்தாப மாயெனை நினைப்பாரு மில்லையுயர்
　　வல்லோனே நீயேயொளிந்
தெனக்காரு மில்லை யிறையே யறிந்திடென்
　　றெளியேனிரந்த னுலகில்
சினத்தாரெ ஞேடரிய தெளிவுபெற நீயுதவி
　　செய்த ருளுவந்த பொருளே (125)

மலைமேடு சிறிதெங்கள் வனமேடு பெரிதுன்னை
　　வணங்காத பெரும் பாவியேன்
றலையூடு விளையாடும் பொருளேவந் துனதாசை
　　தருவாயென் றுனை நாடியே
கலையூடு மெருகாளெற் காசைபே சியருயென்
　　கவலைக ளறிந்துன் னருளால்
சிலையோடி வருமுனுயிர் சிதறுமல் நல்லுதவி
　　செய்வாய் நிறைந்த பொருளே (126)

ஆவென்றும் ஈயென்றும் ஊவென்று நின்றவனை
　　யாரென்று றிறைஞ்ச வடியேன்
பாவென்று நூலென்றும் பகராமல் வேதியர்கள்
　　பகர்வார்க ளேனே வறியேன்
நானென்று நீயென்று நடுவே யிருந்தெனது
　　நாட்ட மதறிந்த வனுநீ
தாயென்றும் வாவென்றும் தவறுமல் நல்லுதவி
　　தருவாய் நிறைந்த பொருளே (127)

வாயொன்று விழிரண்டு வளர் நாசி செவிரண்டு
　　மனமேதென் றறிவ னடியேன்

காயென்ற கனியென்று கருதாமல் வேதியர்கள்
கவல்வார் களேனோ வறியேன்
காய்கண்டு சீயென்ற கடுவே யிருந்தேனது
காட்டம தறிந்த வனுநீ
தாயென்றும் வாவென்றுக் தவறாமல் கல்லுதவி
தருவாய் கிறைந்த பொருளே (128)

வெண்பா.

ஆராருங் காணும லேம்புலத்துக் கின்பவினை
ஓராத மந்திரத்தி னோசையறிக்-தாராயும்
சொல்லுறுதி மாறாத துய்யவனே நீயெனக்குன்
கல்லுதவி தாராய் கயக்து (129)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பொய்க்கெட்ட டாமல்கின் றடியவர்கள்
புகழும் புகழ்ச்சியைக் கொள்வோனே
மெய்க்கெட் டாருமை கான்கில்கோக்கி
விளிப்போ ரிதயத்தி லுறைகின்றோனே
மைக்கெட் டாவிழி திறக்ததுமேல்
வடிவைத் தெரிசிப்போர்க் குறும்பொருளே
கெய்கெட் டாத்தேனில் புகையெட்டாமல்
கினைத்தங் கெனக்கு னிகரற்றோனே
வைக்கொட்டாமனம் பகைக்கொட்டாமல்
வருத்தும் பொருளேயுன் னடைக்கலமே (130)

வேறு.

அல்லா நீயென்னைப் படைத்துலகில்
அன்னை யினுமன்பா யுவக்தகோவே
ஒல்லா நீயெங்கள் மனதகத்துள்
உதிப்பு கினைவையு மறிகின்றோனே
பொல்லா னுன்னை மறக்துலகில்
பேசத் துலையாத பிழைகள்செய்துன்
கல்லா தரவுகேட் டிரக்துகானும்
காய்போ லொதுங்கிகின் வாயல்வக்தேன்
எல்லா மறிக்தோனே யெளிமையறிக்
தேழைக் கிரங்குவா யிணையற்றோனே
வல்லா னேயெங்கள் பிழைகள்போக்கி
வறிமை முஸீபத்து மனப்பீடையும்

கில்லாதகற்றிகின் கிருபைசெய்வாய்
கினைத்த துஆவையும் கபூல்செய்தேற்றிச்
சொல்லால் வரிசையும் றஹ்மத்துடன்
தொலையாப் பெருவாழ்வுங் கனசெல்வமும்
எல்லா பறக்கத்தும் ஸலாமத்துமிங்
கிரணப் பொலிவுகல் லாபியத்தும்
செல்லா ஙிஹுமத்து மீடேற்றமும்
சேரும் கலவுகண் டருள்வாயென்றிங்
கல்லா ரெனைமண்ணிற் பகைசெய்யாமல்
ஹக்கா னேயானுன் னடைக்கலமே (131)

வெண்பா.

அல்லா வுனையொழிந்திங் காதர வாரடியா
ரெல்லாருக் தானு யிருப்பவனே-பொல்லானை
நின்புகழ்ந்த தேயென் னினைவையறிக் திவ்வுலகில்
என்றம்பி ரானுதவி யீ- (132)

கலி நிலைத்துறை.

திரண்டு மெலவர் சிக்தையு திடமுறுக் தீனே
மருண்டு பொன்மயின் மயக்கத்தா லுனைமறக்தடியேன்
கரண்டு போயினே டிரக்தனன் வறுமைகள் கரக்தே
உருண்டு போககல் லுதவிசெய் யென்றனுத் தமனே (133)

கண்ணில் லாமலுன் கற்பனை கடக்தன னடியேன்
விண்ணி லாசையை வெறுத்துமண் ணுசையில் வீழ்க்தேன்
பெண்ணினுயகன் பிரளயத் துனதருள் புகட்டி
யெண்ணெ ணுப்பல வரிசைதக் தருளென திறையே (134)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மரமில் லாதநிழல் செடியில் லாதவனம்
மனுவில் லாதகுடி வளரும்நாள்
உரமில்லாதபயி ருழவில் லாதவிளை
வுணவில் லாவெருது பசிகொடே
பரமில் லாமல்கடக் தசையி டாமலது
பருகு நேர்மையறி யாமல்நான்
சிரமில் லாஸுஜூதுசெய் துவக்து கேட்பனென்
றீங்க கற்றியருள் செல்வனே (135)

தவமில் லாதசெயல் தரவி டாதசுகக்
 தணிவில் லாதகிண றுருகியே
கமமில் லாதொருவ னதியில் லாதபுனல்
 கனைவில் லாமலதில் கிலே கொடே
முகமில் லாதவிழி கனவில் லாமலதில்
 முழுகி யேறுமெங்கள் முதல்வனே
அகமில் லாமலுன்னே டிரக்தே னன தற்குன்
 னுதவி தக்தருளென் னன்பனே (136)

விருத்தம்.

பொங்கும்புக ழிறையோன்புவி யனைத்தும்பொருக் திடவே
செங்கண்கருதுமதாற்சுடர் சிதறத்திரு வுளமாய்
அங்கொன்றொளி யுருவாய்ப்பல வடியார்க்குறுக் துணையாய்த்
தங்கும்கபி யருளால்புகழ் தருவாயுரு விலியே (137)

கபியாறஸூ லென்னும்பேருள கயினர் மூஹம்மதனர்
புவிவானுல கறுஷானதில் புகழ்ராசிய முடையோர்
ஹபிபென்றொளி யதில் முங்கிய கமலப்பதம் பணியப்
பகிலனின்னே டிரக்தேன்புகழ் தருவாய்வரு மிறையே (138)

கட்டளைக் கலிப்பா.

என்னை மண்ணில்வைத் தாள்கின்ற மேலவா
 வெங்கள் பாவக் தொலைத்திடு வாயென்றே
யுன்னை மெத்தவும் கம்பி யிருக்தனு
 னுள்ள வரகீ யுவக்திட வில்லையோ
முன்னை யெத்தனை சொன்னுலும் போகட்டென்
 முதல்வா லென்றனிய்யத்தை முருதுசெய்
பின்னை யென்பதும் பேச்சல விப்போகீ
 பெருக கன்றி விளைத்தரு ளன்பனே (139)

அண்டர் வான மடங்கலு மாண்டிடு
 மாதி சோதிகீ யாஹூமென் றுன்னையே
தொண்டர் போதங்கொண் டாடிவ ருன்றன்பேர்
 சொல்லி யாரும் ஸுஜூதிடக் காண்கிலேன்
வண்டர் தான்மண்ணி லென்னைக் காண்பரோ
 வல்ல வரபகல் ராவற்ற கரட்டினிற்
கண்டு கானுனைத் தொண்டுசெய் தேத்தவே
 கடுக வக்தருள் வாயுயர் ஹக்கனே (140)

வன்ன மெத்தனை வடிவுக ளென்றுன்னை
மனிதர் வான ரறியாம லென்னுள்ளத்
துன்னு முள்ளறிக் துலக மதிலெனக்
குதவி வாழ்வு தருமெங்க ளேகனே
அன்ன மெத்தனை தருகினு மெங்களா
லாதி யேயமை யாதது வென்றறிக்
தின்ன முன்னுடன் கேட்ப னதையறிக்
திரக்க முற்றெனக் கீந்தரு ளேகனே (141)

சன்ன மிருக்குங் குகையில்வைத் துருக்கிடச்
சமைந்த மூஷியைத் திருக்கு ததிலொன்றென்
கண்ணில் நிற்குது காணுத நேரமென்
கருத்தில் நிற்குது கவலிடங் காண்கிலேன்
எண்ணு மனிதர் நினைவுக்கெட் டாமல்நீ
ஏழை பங்கி லிருக்குமென னேகனே
திண்ண முற்றெனக் குதவிசெய் தென்பிழை
சேரப் போக்கித் துணைசெய்யென் னித்தனே (142)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

காலாறு புத்திகொடன் னவா லழைத்தருணன்
கானுன்கி லுற்றென் னுடலில்
பாலாற திற்பெரிய தீதாறை நோக்கியென்
பசியால் தொடர்ந்துன் னடியேன்
காலாலெ மூப்பிவிழி நீராற்சொரிந்து நெடு
கரமேந்திக் கேட்ப னதைநீ
கோலாகலக்கிருபை யாலிங்கெ னக்கருளென்
கோவே குணத்தில் வரவே (143)

வாரா திருக்கில்மனம் வேறாய் நினைந்துனை
வணங்கார் மனப்பி டையால்
பாரா திருக்கிலது பழுதாமென் றுன்னோடு
பகர்வேன் பழம்பொருளைநீ
தாரா திருக்கிலது கூடாதெனக்குமுயர்
தலீலாக தந்துன் னருளாற்
சீரா யெனக்குதவி செய்வா யெவர்க்குமுயர்
தீனே நிறைந்த பொருளே (144)

கொச்சகக் கலிப்பா.

முன்னே யெனைப்படைத்த முதல்வா முஹம்மதரை
இன்னேர மென்னுளத்தி லெழுந்தருளச் சொல்லாயோ
மன்னேநான் காணேனே வருமோசை கேளேனே
பொன்னேற நீயுதவி செய்வாயென் புண்ணியனே (145)

இல்லென் றுனையடியே னேத்துதல்கண் டாலுனக்குங்
கல்புமுரு காதோவின் ககனருரை பேசாரோ
சொல்லுமெங்கள் பிழைபொறுத்துன் றிருவுளத்தா லிரங்கியொரு
சொல்லும் பிரவாதோ துயரறவே துய்யவனே (146)

அந்தமில்லா னேயடியே னழுந்துயர்கண் டாலுனது
சிந்தையிள காதோவெஞ் செய்திகண்டா லுருகாதோ
என்றன் னளவுசற்று மிரங்காத் திருமனமோ
வந்துதவி தாராயோ வளக்கோவென் வல்லவனே (147)

வாகா யெனைப்படைத்த வல்லோனே யென்னுளத்திற்
வேகாக் கனல்மூட்டி மேலிருந்த காண்முதலாய்
கோவுவருத் தாமலென்னை கொந்தகண்ணுற் பாராமற்
றுவிவளர்ப் போனே பலன்றருவாய் மகிழ்ந்திடவே (148)

பெருக்கமுள்ள தடங்கலுக்கும் பெரியவனே நீயனைத்தும்
ஒருக்கநினைக் தாலுலகி லுனைவணங்கக் காரியமேன்
பருக்குங் கசடறுத்தென் பகையொழுத்துன் பதவி தந்தாய்
இரக்கமுள்ள நாயனுனக் கெல்லாப் புகழ்ச்சியுமே (149)

அறுதிகபூல் செய்யுமெங்க ளெல்லாவே நீயுலகிற்
சுருதிதருஞ் செயலுடைய துணையருள்வாய் துய்யவனே
உறுதிகுறை யாமலுய ருத்தமனே யடியவர்கள்
இருதயத்தி லுதிப்பறிவா யுனக்கெல்லாப் புகழ்ச்சியுமே (150)

அண்டருல கெண்டிசையு மணுவணுவாய்த் தானிறைந்து
நின்றவனே நீயுமெங்கள் நினைவையறிக் திப்புவியி
லன்றுதவு நன்றியெனக் கழியாதுன் பதவிதந்தாய்
என்றுமுள்ள நாயனுனக் கெல்லாப் புகழ்ச்சியுமே (151)

வெண்பா.

ஆதார மாகவெங்கு மானவனே யானுமுன்றன்
பாதார விந்தம் பணியாமல்-ஏராத
வன்பிழைகள் செய்தடியேன் வந்தேன்மன் னன்றிருமுன்
என்பிழையை நீபொறுப்பா யே (152)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தந்தை யுடலில்நின் றெங்கள்தாயார்
சடத்துக் கரசனுய்த் தலைமைசெய்து
வந்து மோகத்தின் மகிழ்ச்சிகொண்டு
மதன ராசையிற் சிலைவளர்த்துக்
கந்தை யுடுத்துக்கல் பகத்தேநின்று
கருது மவர்கரு வுருவாயெங்கள்
சிந்தை தனிலுறைக் தெளிமை கொண்டேன்
தீங்கை யகற்றியுன் னுதவிசெய்வாய்
இந்த வுலகில்வீ ணனுகாமலே
யேக னேயுன்ற னடைக்கலமே (153)

கருதி யெவருங்கண் டுணராமலே
காய மதில்மாயப் பொருளாயெங்கும்
சொருகி யுயிர்களொ டிணங்கிமண்ணில்
சுணகித் திரிகின்ற பொருளையார்க்கும்
உருகிக் கிடக்குநல் லுள்ளன்பினோ
டொழித்தங் கிருக்கின்ற வுறும்பொருளே
வெருவிப் பயந்துன்னோடிரந்து கேட்பேன்
விதன மறிக்தெனக் குதவிசெய்வாய்
மருவிப் பெரும்பிழை வாராமலே
வல்லோ னேயுன்ற னடைக்கலமே (154)

அந்த மனுகாம லடங்கலையு
மாளு மிறையோ னே யடியாருன்றன்
சந்த மறியாம லுனைத்தேடியே
தரையில் ஸுஜூதிட்டுத் தளர்வதேனோ
இந்த நிலைகண்டென் னளவிரங்கி
யிடறும் வறுமையு மீடுபாடும்
வந்திங் ககற்றியே கிருபைசெய்து
மலக்கமறிதெனக் குதவுந்தீனே
என்ற னியத்தை முறுதாக்குவா
யெனக்குன் தலீலல்லா வில்லையென்றே
உன்றன் கிருபையென் முகத்தைநோக்கி
யுவந்துன் னுதவிதக் தருள்செய்வாயே
தெர்ந்தம் பலதும்வந் தணுகாமலே
துய்யோ னேயுன்ற னடைக்கலமே (155)

ஏழாம் வாசலின் கீழாய்க்துவக்
தெதிர்த்த தலத்திற்கு மேலேதசை
மூளை யெனும்புக்கும் கடுவேகெற்றி
முகமூக் கிடையில்முண்டகப்பார்வையில்
காளாம் பதினாறி லுலாவிகின்ற
காய கனேகானுன் னேடுகேட்பேன்
கேளாச் செவிக்குமீ ளாகெருப்பாய்க்
கிருபை விளைத்தெனக் குதவிசெய்வாய்
பாழாங் குபிறென்னை யணுகாமலே
படைத்தோ னேயுன்ற னடைக்கலமே (156)

தக்க ஷரீஅத்தும் தரீகத் ததும்
தழும்பொன் றணுகாத ஹகீகத்ததும்
மிக்க முஹப்பத்தும் மஹ்ரிபத்தும்
வேந்த னுனேக்காட்டுத் தருமதனை
ஹக்கென் றறியாமல் திருமறையோர்
கவனு முரைகேட்டுன் றனைவணங்கத்
தொங்கு மதற்குள்ள பாத்திஹாவுக்
துலங்கு ஷஹாதத்து மத்தஹியாத்தும்
மிக்கோர் புகழ்கபி ஸலவாத்ததும்
விளங்கப் படித்துனைத் தொழுதுணர்ந்து
கிற்குஞ் சரணங்கண் டிறைஞ்சாமல்யா
னினைத்த படிதொழு திரந்துகேட்பேன்
சக்கொன் றணுகாமற் கிருபைசெய்து
தனியேற் குதவுவாய் தானவனே
பொய்க்கும் குபிறென் னையணுகாமலே
புண்ணி யனேயுன்ற னடைக்கலமே (157)

வெண்பா.

ஆதார மாறு மறியாமல் யானுமுன்றன்
பாதார விந்தம் பணிகின்றேன்-ஏராதென்
றென்னை யிகழா திறையேகின் னேடிரப்பே
னுன்னுதவி நீதருவா யுற்று (158)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அடைக்கல மெனப்புகழ்க் திரப்பனிறை யோனெயதை
யன்பொடு கபூல்செய் துலகில்

மிடைப்படுச் சடைப்புள வருத்தமு மகற்றியுயர்
வெற்றிகல வுற்ற கெதியும்
கிடைக்குமது தப்பிலையெ னப்பயல்கி னைத்துநெடு
கேட்பனதை நீகி ருபைசெய்
திடைப்படு மெனக்குமுட லுக்குள்ளு யிர்க்குமதை
யீந்தரு ளெவர்க்கு மிறையே (159)

மளித்தரை வகுத்துலகில் வைத்திரண மீந்தெமை
வளர்த்தெம்மை யாளு மிறையே
சினத்தெனை வெருட்டிடுவ தோவலது யாங்கள் செய்யுத்
தீவினை யகற்று மதுவோ
இனிப்பெறுவ தெப்படியெ னத்தெரிவ துற்றுன்னோ
டிரப்பனிறை யோனே யதைநீ
பனித்துளிய திற்சிறு பதத்துளதெ னக்குமொரு
பத்தியரு ளூற்ற பொருளே (160)

காவுகொடென் னுவிதரு வாயெனது காயமதில்
காணவரி தான பொருளே
தாவுபுல னைந்துயிர்கள் வானவர்கள் பூதமுநீ
தானுமென்னுள் ளாடு மதனால்
நாவி லுறும் நாமமொரு நாளுமற வாமலுனை
நாடி நின்னோ டோதி யிரப்பேன்
பாவியடி யேன்பிழை பொறுத்துநல வீந்தருள்
பராபரம தான பொருளே (161)

கலி நிலைத்துறை.

முந்த நாளென்னை முத்தில்வைத் தெடுத்துயர் முதுகிற்
சிந்தி டாமனீ யன்னைதன் னுதரத்திற் செலுத்தி
வெந்தி டாமல்வைத் தெனைப்படைத் துயிர்தரும் வேந்தே
அந்த மாய்நினோ டிரப்பனின் னுதவிதந் தருளே (162)

சந்த மாயென்னோ டனைத்திடுந் தலைவனுக் குருகிப்
பந்த மாயொளி பரவிய பதுமத்தாலழுது
வந்து நாளின்னோ டிரந்தனன் வறுமைக ளகல
எந்த வாக்கிலு முதவிதந் தருளெம திறையே (163)

அன்னை தேடின தையாகண் டெடுத்தெனக் களிப்பப்
பின்னை யேனிப்போ பேசிவி டுனக்கெனப் பெரிதோ

என்னை நாடின ரிணைபிரிக் தெவருமெட் டாமல்
உன்னை நாடின னுதவிக் தருளெனுத் தமனே (164)

கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அம்மைமாத ரடர்ந்த காட்டினிலறிக்தென்னவி யமைத்தவா
செம்மைநீதி மறந்துநான்வெகு தீங்குசெய்துனைத் தேடியே
உண்மையான தகன்றிடாம லுவக்துன்னோடு மிரக்தனன்
எம்மைநாடி யெமக்கிரங்கியுன் னுதவியீந்தரு ளேகனே (165)

அந்தநாளி லமைத்ததேவுக ளைந்துமென்னுள்வந்த தாகையால்
இந்தநாளி லெழுக் தஸஹிரிய னேகுயோடி மறைந்தநாள்
சிந்தைநீதி லெழுந்ததிங்களென் னோடிசைந்து திருந்தவே
உன்றனோடு மிரந்தனீயதற் குதவியீந்தரு ளொருவனே (166)

வேறு.

ஈனரென்னோடுற வாய்வரநெஞ்ச மிரங்கவ குத்தவனே
போனதைமீள வருத்தியென்னோடு பொருத்திவி டென்றடியேன்
வானரமானது போலுனைக்கெஞ்சி வருந்திநின் னோடிரப்பேன்
ஆனதெல்லாமறி வாயிறையேயெனக் காதர வீந்தருளே (167)

மாதவமானதென்னோடு நின்னுமம் வழங்கவ குத்தவனே
பாதகனானறி யாமலுன்னேவலின் பத்திம றந்துலகிற்
பேதகமாக நடந்துபிழைசெய்த பேயனின் னோடிரப்பேன்
தாதகமேது மிலானுக்குநீதலில் தந்தரு ளுத்தமனே (168)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தலையூறித் தேன்வடியத் தருவனமக் கென்றுசிலர் தரையிற் றேடச்
சிலைமீதிற் சிலர்தேடத் தீயிற்சில போர்தேடத் தெரியா வண்ணம்
கலையூறித் தரும்பொருளாய்க் கருதுமவர்க் கெங்குமொன்றாய்க்
[கலந்தகோவே
அலையாதுன் னோடிரப்பேனடியேனுக் குதவிதந்திங்கருள் செய்
வாயே

ஆராருங் காணமலறிந்தவர்க்குக் தெரியாம லனைத்துக் தானாய்ப்
பேரார்க்கு மறியாமற் பேரறிந்தும் பேசரிதாய் பெலவா னகி
ஓதாத மந்திரத்தி னுட்கலந்து முறுபொருளா யுலகாண்டெங்கும்
ஆதார மானவனே யடியேனுக் குதவிதந்திங் கருள்செய்வாயே

வேறு.

அத்தனே யருளே யெங்க ளாதியே யடியேற் கென்றும்
நித்தனே யொளியண் ணுக்கும் நெஞ்சமு நினைவும் பொங்கச்

சுத்தனின் னுதவி தந்தென் றுக்கம தகற்று வாயென்
றற்றுன்னை டிரப்பே னென்று முள்ளவா துணைச்செய் வாயே

அகந்தெரிந் துணர்வோர்க் கொன்று மருபமோ ருருபமாகி
முகந்திறந் தருளைக் காட்டு முத்தனே முடிவில் லானே
செகந்தனி லடியேன் செய்யுந் தீவினை யகற்று வாயென்
றுகந்துன்னை டிரந்து கேட்பே னுள்ளவா துணைச்செய் வாயே

கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தருணமுத்தொளி யதனின் மிக்கது சமயகட்புறுந் தனியனே
கெருணனெப்படிப் புவியில்மெய்ப்பொடுகிளருமடிப்படிப் போலவே
அருணனுக்கருள் கமலமிஸ்திரி யதைநினைத்துன்னை டிரப்பனீ
இரணகற்பொலி றஹுமத்துன்னரு ளெளியனுக்கரு ளிறைவனே
பலபடைப்புகள் வரநினைத்துயர் பனியனைத்திடும் பரமனே[லேன்
இளைஹிலெப்படி கலமெடுத்தெனை யெழுதிவைத்த தென்றறிகி
விலகல்மிக்கது கவலைதத்துளம் விரும்பிவந்துன்னை டிரப்பனுன்
உலகிலப்படி யுனைநினைத்தன னுதவிதந்தருளொருவனே (174)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தக்காரிருளி லனைத்துமன்றித் தனியேயின்பத் தரளமதில்
தொக்காயெழுந்து துயர்விளைத்துத்துனியாவெளிக்குளொளியாய்நீ
முக்கால்கைத்தங் கொழுகுபனி முங்கிக்கமலத் துருவான
ஹக்காகபிதம் மாணையென்றன் கவலைதவிர்ஹக் கானவனே (175)

முத்தாலனைத்தும் படைப்பதற்கு முன்னங்கருப சொருபமன்றிக்
கத்தாவுனக்கு நிகரில்லாக் கருணைக்கமலத் திருவொளிக்குள்
சித்தாற்சொறியும் பனித்துளியால் திரண்டேசுஜூதிட்டுங் கிருபை
வத்தாகபிதம் மாணையென்றன் வறுமைதவிர்ப்பாய் வல்லவனே

கலித்துறை.

தனைத்தேறுங் காயஞ் சுழலுமெண் ணவினை தான்தொலைந்தால்
தினைப்போது மிங்கிருக் காதுகண் டாய்சிரந் தாள்பணிந்தே
நினைப்போரை மேவி நினையாரை நீங்கி நிரம்பிநின்றாய்
உனைப்போ லொருவருண் டோவிறை வாவெனக் குற்றவரே (177)

உற்றாரு மில்லை யுறவாரு மில்லையிங் குன்னையன்றி
மற்றாரு மென்னை வளர்ப்பதுண் டோமறை தன்னைமிகக்
கற்றாலும் பாவங் கசந்தாலுங் கேடுன்னைக் காண்பதற்கு
வித்தார வாழ்வு தருவா யெமக்கென்றும் மேலவனே (178)

ஹலிமா முலைதனிற் பாலமு துண்டார அஹமதெனும்
புலிமான் றனக்குப் பிணையாக நின்றவர் தம்பொருட்டால்

நிலையா முடம்பை யிளக்தே யுயிர்செல்லும் நேரத்திலுன்
கலிமாவை நெஞ்சுட் கலங்காமல் தாவென்ஹக் கானவனே (179)

ஹக்கா நபிதங் கலிமாக் கமலக் கருத்தினுள்ளே
சிக்காமல் மாயத் திருடிக்கொள் ளாமற் றிருவுளத்தால்
எக்காலங் கூடியுந் தேக மிழந்துயி ரேகிவிட்டால்
மக்கா நபிதம் ஷபாஅத்துடன் கூட்டெங்கள் வல்லவனே (180)

வல்லவ னீமறை சொல்லுவ னீமறை நாலுக்கெட்டாத
துல்லிபனீ துணை யானவ னீயென்றுந் துய்யவனீ
கல்பிலும் நீயென் கருத்திலும் நீயிரு கண்ணிலுநீ
இல்லிலும் நீயிணை யற்றவ நீயென் னிறையவனே (181)

தானவ னீதில மேழிலு முங்கிச் சடலமதிற்
கோனவ னாகக் குடியிருந் தாயிந்தக் கூடிழந்து
போனபின் யாங்கள் பொறியிற்செல் லாமலுன் பொற்பதியி
லீனமி லாமற் புகுதவைப் பாயென்றுந் துய்யவனே (182)

துய்யவ னேதுணை யற்றவ னேதுனி யாவிலுன்னை
மெய்வினை யாலு மறந்துவிட் டேன்வெறி யேன்றனையுஞ்
செய்வினை யாலே யெரிநர கேழிற்செல் லாமற்சொர்க்கம்
பய்யலு மேகப் பதவிதந் தாள்பர மானவனே (183)

பரமா நபியைப் படைத்திலை யாகிற் படைப்பிலையென்
றுரமாய் மொழிந்தவென் னுத்தம னேயிவ் வுலகினில்யான்
மரமாகி லேன்மண் ணுங் கல்லாகி லேன்மனு வாக்கியென்னைத்
தரமாய் வரமருள் தந்தா ளெவர்கென்றுந் தானவனே (184)

உன்றனை யானென் கமலத்துள் ளேகண் டுணர்ந்திருந்தா
லென்றனை யோபசித் தேங்கவைத் தாயன் றெரிசித்திடச்
சிந்தனை யோவல்ல நிந்தனை யோவெனைத் தேடியென்முன்
வந்தனை யோவரத் தந்தனை யோசொல்லென் வல்லவனே (185)

ஆளவல் லானுனை யானம்பி னேனுன் னடிமையென்றாற்
றாளில்லை யோதளை கட்டிவைத் தாய்தளைக் கட்டறுக்க
வாளில்லை யோவரி வேலில்லை யோமகிழ்ந் தோடிவர
நாளில்லை யோநினைந் தாயில்லை யோசொல்லென் னாயகனே (186)

அழிவில்லை யென்றுல காள்பவ னேயுன் னடிமையென்றால்
எளியனை யோசிறை செய்துவைத் தாயன் றெரிசித்திட
விழியில்லை யோநெஞ் சிரங்கிலை யோவிரைந் தோடிவர
வழியில்லை யோநற பதமில்லை யோசொல்லென் வல்லவனே (187)

அனைத்தும் படைத்துயி ரீபவ னேயுன் னடிமையென்றால்
மனத்துக் கவலையை மாற்றிலை யோவென் வறுமைகண்டால்
நினைத்தென் னலவுமி ரங்கிலை யோயுள் நிரம்பியெனைச்
சினத்தென் இருக்கவும் நீதியுண்டோதெளி வானவனே (188)

தெளிவாய் வெளிக்கு ளொளியாய் நிரம்பியென் சிந்தையுணின்
றழியா தனைத்தையு மாள்பவ னேயுன் னடிமையென்று
லொளியார்செய் தீவினை யெல்லா மகற்றியீ டேற்றியெனக்
கொழியாத வாழ்வும் பதவியுந் தாவெங்க ளுத்தமனே (189)

ஆவென் றனைத்தும் படைத்துரு வாகுமுன் னவ்விருளில்
ஊவென் றலரி சொரியும் பணிக்கு ளுருண்டுருண்டு
மாவென் றொருமணி முத்தாய் வலம்புரிக் குள்ளிருந்த
காவல் நபிதம் பொருட்டா விரங்கிடென் காவலனே (190)

கௌவென்ற சத்தங் கதறாமல் நின்றெழுங் காரிருளில்
அவ்வென்ற கார முதலாகி நின்றபின் னைக்தெழுத்தாய்
வௌவென் றெழுந்துகல் மௌவாய் வலம்புரிச் சங்கினின்று
கௌவென் றெழுநபி தம்மா லிரங்கிடென் னாயகனே (191)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பலநிலத் தெவரு முன்றன் பதம்பணிந் தருளும் வேந்தே
நலவலம் புரிச்சங் கின்ற நபிஷபாஅத் தடியேன் பெற்று
முலகுயி ரனைத்துந் தானு யொளிக்குணின் றெறிக்கு மந்த
நிலவினுக் கெதிரே சென்று நிற்குகா ளெந்த நாளோ (192)

அனகமுற் றமர் பேய்க ளரக்கர்ஜின் முனிவர் மாந்தர்
மனமகற்றாமல் நின்றுன் மகிழ்ச்சிதந் தருளுங் கோவே
சினகமுற் றடியே னுன்றன் றிருவடிக் கடிமை யாகக்
கனகமுற் றடியேன் கண்ணிற் காணுநா ளெந்த நாளோ (193)

மறைமொழி நாலுக் கெட்டா வடிவவான் பொருளே மண்ணில்
இறைவனீ யல்லா தில்லென் றிறைஞ்சிடா தெளியே னுன்றன்
முறைவழி தெரிய வுன்றன் முண்டகத் தருளை நோக்கிக்
குறையிலி யுனையான் கண்டு கூடுநா ளெந்த நாளோ (194)

வெளியினி லொலிய தான வேதகன் னாலுக் கெட்டா
வெளியினி லுருவ தான வுத்தம நபிக்கா ளாக
எளியனுன் மறந்து செய்யு மிடறும்வன் பிழையும்போக்கி
அழிவிலி யுனைநான் காண வருளுநா ளெந்த நாளோ (195)

துணையிலி தருமா னக்தத் துளிதிரண் டுருவா யுள்ளக்
கணைதொடுத் தருள்பே ரின்பக் கருவினைக் தெளிகுன் றுமல்
மணைபடும் பருத்தி போலே வன்பிழை யனைத்தும் போக்கி
இணையிலி யுனையான் கண்டு மெதிர்க்குகா ளெக்த காளோ (196)

ஆங்கிலென் றனைத்தும் பாரி லமைத்தழித் தொழுப்புங் கோவே
பாங்கின வாறென் றெண்ணிப் பதக்தொழா தடியே னுள்ளத்
தோங்கிய கமலத் தூடே யுலாவுகின் பதத்திற் காளாய்த்
தீங்கிலி யுனையான் கண்டு தெளியுகா வெக்த காளோ (197)

வள்ளலா னவனே கீதி வரிசைகின் வடிவுருபம்
விள்ளோணு துலகி லுன்றன் மெய்யிரு பதத்திற் காளாய்க்
கள்ளனுன் துணிக்து செய்த கடும்பிழை யனைத்தும் போக்கி
உள்ளவா றுனையான் கண்டு முணருகா ளெக்தகாளோ (198)

அத்தனே யருளே யெங்க ளாதியே யழிவில் லானே
கித்தனே கிகரொன் றில்லா கெடியனே யடியேன் செய்யுங்
குற்றங்க ளனைத்தும் போக்கிக் குதாயுன்றன் பதத்திற் காளாய்
முத்தனே யுனையான் கண்டு முயலுகா ளெக்த காளோ (199)

படியினி லுயிர்கள் யாவும் படைத்தழிப் பவனே யுன்றன்
அடியிணை பணிக்து போற்று மஹுமது கபிக்கா ளாக
வடிவிலி யுனைகான் மண்ணில் மறக்தவன் பிழைகள் போக்கி
முடிவிலி யுனையான் கண்டு முடுகுகாளெக்த காளோ (200)

இல்லல்லா குவேகீ யெங்க ளிருதயத் தெழுக்து வாழும்
அல்லிராப் பகலு மன்றி யாருலுக் கப்பால் கின்றோய்
சொல்லொணுப் பிழைகள் செய்த தோசிகின் பதத்திற் காளாய்
வல்லவா வுனையான் கண்டு வருகுகா ளெக்த காளோ (201)

அள்ளிமண் ணெடுத்துச் சென்று மாதிமுன் னமரர் வைக்க
ஒள்ளிய ஆத மென்றே யுயிர்விடுத் தெழுப்புங் கோவே
தெள்ளிய கியாமத் துண்ணின் றிருவொளி கண்டு தேற
வெள்ளியி லிருண்ட கங்குல் விடியுகா ளெக்த காளோ (202)

மயிலொளித் தாவு தோன்ற வளருமக் கோபத் தால்முன்
பயில்சனிக் கிழமை காளிற் பாழ்கா கமைத்த கோவே
துயிலொழித் திருக்கு முன்றன் சுடரொளி கண்டு தேற
வெயிலொழித் திருண்ட கங்குல் விடியுகா ளெக்த காளோ (203)

அதினமுற் றெழுக்த கோப மமர்க்தபின் ஞாயி றென்னும்
'பதன்முற் றெக்த காளிற் பாருல கமைத்த கோவே

வதனமுற் றிருக்கு முன்றன் வடிகண் டடியேன் றேற
விதனமுற் றிருண்ட கங்குல் விடியுகா ளெந்த நாளோ (204)

மண்புவி திரளு நாளில் வன்னியின் புகையா லேகீ
கண்பியல் வானக் தன்னை நலத்தருந் திங்கள் நாளிற்
றும்பிகோ டமைத்து வாழுந் துய்யவா வுனையான் காண
வெம்பிவக் திருண்ட கங்குல் விடியுகா ளெந்த நாளோ (205)

ஆகமுற் ருதக் தம்மை யமரர்வந்திறைஞ்ச வங்கண்
சோகமுற் றகன்று போன சூமனைச் செவ்வாய் நாளிற்
போகமுற் றமைத்து வாழும் பொருளே நின் னருளைக் காண
வேகமுற் றிருண்ட கங்குல் விடியுகா ளெந்த நாளோ (206)

இடமுறுந் திசைக ளெட்டி லிலங்குமெட் டொளிகள் தம்மை
கடமிடு புதனு மந்த நாளினி லமைத்த கோவே
திடமுற விருக்கு முன்றன் றிருவொளி கண்டு தேற
விடமென விருண்ட கங்குல் விடியுகா ளெந்த நாளோ (207)

பதிதனி லூர்வை நாற்கால் மிருகமும் பறவை தானும்
விதிதிரு வருளா லென்றும் வியாழநா ளமைத்த கோவே
திதியுறுங் கமலக் கண்ணுற் றிருவொளி கண்டு தேற
விதியென விருண்ட கங்குல் விடியுகா ளெந்த நாளோ (208)

கங்குலங் கூழலி சூழுங் கருமுகின் கடலி லேழு
பங்கில்நின் றனைத்தும் பாரிற் படைத்தளித் தொழுப்புங் கோவே
சங்குறுங் கமலக் கண்ணுற் சரணங்கண் டடியேன் றேற
வெங்கணு மிருண்ட கங்குல் விடியுகா ளெந்த நாளோ (209)

கன்னலுற் றினித்த வாசங் கமழுங்கஸ் தூரி மேனிப்
பொன்னிறத் தழகு போன்ற புகழ்நபி பொருட்டா லென்றும்
இங்கிலத் தடியே னுள்ளத் தெழுஞ்சுட ரொளியைக் காண
மின்னுவக் திருண்ட கங்குல் விடியுகா ளெந்த நாளோ (210)

வேறு.

எந்தமாத மெந்தநாளி லெந்தநேர மென்றினி
வந்தெனோடு ரைப்பதற்கு மேவமுக்குண் டோவென
உன்றனேர்மை யின்னதென் றுரைக்கொணு துளத்துளே
சிந்திடாமல் நின்னருள் செலுத்திடெங்கள் செல்வனே (211)

முந்தநாளி லந்திநேர முண்டகத்து ளச்சரம்
தந்தெனோடு ரைப்பதென்ன தப்பிலொப்பி லாதவ

அந்தவாச கத்தெயான சைத்திடாம லுன்னுடன்
வக்திரக்து கேட்பனீ வழங்கிடெங்கள் வல்லவா (212)

கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இரவே முதைதோர் பகலாய் நிலைசெய்
திறஸூ லொடுரா சியம்பே சினவா
திரைசூ முலகில் கரர்தா முனது
திருவா சகங்கேட் டுருகா ரதுகண்
டுதவா ரிவரென் றெளிசே ருனதன்
புறுவா சலில்வக் திரக்தேன் மிகவு
மதமோ டெழுமா லடியேன் றனைவக்
தணுகும் படியே யருள்வா யிறையே (213)

கனமாங் கமலத் தெழுகல் லொளிதக்
தடியற் கருள்செய் துதவு மிறையே
சொனமா மணிகேட் டெவரு முலகிற்
றெழுவா ரவர்கெஞ் சுருகா ரழுவார்
கனமா மறைநூ லருளு மிரையுன்
ஹதீதின் படிகண் டுணரா தடியேன்
தினமா னமுன்வா சலில்வக்திரக்தேன்
திருவா யமுதக் தருவா யிறையே (214)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சாதக மெழுதன் னேசைத் தலைவர்ஹா றூத்து மாறாத்
தோதகம் வெறுத்தே கள்ளுண் டுழன்றுனக் கபைய மென்னப்
பேதக மில்லா னக்தப் பெருமைக ளறிக்தெ யங்கண்
மாதுயர் தீர்த்த வுன்னை மறப்பரோ மறப்பி லாதார் (215)

அரம்பையர் பதிவிட்டாதம் ஹௌவாவா யிரக்கால் மண்ணிற்
பெருஞ்சிறைப் படாம லெங்கள் பெரியவா பிழைபொ றென்றே
விரும்பிநின் றலறக் கண்டு மெய்ப்பொருள் வெளிகின் றங்கண்
வருக்துயர் தீர்த்த வுன்னை மறப்பரோ மறப்பி லாதார் (216)

சுழிதரும் புனலில் நூஹுஷூமருக் காற்றெ ணுமல்
அழிவிலா னீயே யானுன் னமானமென் றழைத்த வக்காள்
விழிதரும் பொருளாய் மெய்யில் விரையவக் திலங்கியங்கண்
எளியவர்க் குதவு முன்னை யிகழ்வரோ விகழ்க்தி லாதார் (217)

மிடுக்குற்ற பிறுவூன் செய்யும் விதனத்தால் மூசா தாமும்
தடிக்குற்ற பொருளே யானுஞ் சரணமென் றழைக்கு மக்காள்

வடிக்குற்ற றாஹா யத்த வன்குபிர் தன்னை மாய்த்தங்
கிடுக்கத்துக் குதவு முன்னை யிகழ்வாரோ விகழ்ந்தி லாதார் (218)

சீறுவாய் நம்றாத் செய்யுந் தீவினை பொறும லன்றிப்
றுகிம்கா னேழைநீசற் றிறங்கிடென் றிசைத்த வக்காள்
நாறுவாய் குளிர்ந்து வீசு நறுமலர்த் தென்ற லாய்நின்
றுறுவாய்க் குதவு முன்னை யசப்பரோ வசப்பி லாதார் (219)

பெருந்திரை கயல்ஞூ நூசைப் பிடித்தது விழுங்கு சோம்
வருந்தியென் பொருளே மீனின் வயிற்றிலுன் காவ லென்றே
இருந்தவக் கமலத் தாடே யெழுந்துமைஞ் சுடரா யங்கண்
அருந்துயர் தீர்த்த வுன்னை யசப்பரோ வசப்பி லாதார் (220)

தாழைமுள் ளொடித்து வீசித் தமையான் றடித்துக் கேணிக்
கீழிற்றள் ளிடயூ சூபுன்கிருபையென் றலறு மக்காள்
ஏழையென் றிரங்கி மூலத்தெழுந்துமைஞ் சுடரா யங்கண்
வேளைகண் டுதவு முன்னை வெறுப்பரோ வெறுப்பி லாதார் (221)

வலிநினைத் தஹு்ம தீன்ற மதலைபீ பாத்தி மாவை
அலிதனக் குதவ வேண்டி யடியிணை பரவு மக்காள்
ஒலிகைத் தமர ரோடன் றோசையாய் முழங்கி யந்த
மெலிகுறை தீர்த்த வுன்னை வெறுப்பரோ வெறுப்பி லாதார் (222)

இப்படிப் போல்நின் பாதத் தெழுந்தவெவ் வுயிர்கட் கென்றும்
மெய்ப்படிப் பொலிவு நன்மை விளங்குமா தரவு மீந்தாய்
அப்படிப் போல்நீ யெங்க வருந்துய ரனைத்தும் போக்கித்
தப்படி யார்க்கி ரங்கிற் தலீலருள் தம்பி ரானே (223)

தன்பிரா னேற ஹீமே தனியனே சரியில் லானே
என்பிரா னேநீ யார்க்கு மெளிமைகண் டிரங்குந் தீனே
முன்பிரா னேநீ யெங்கள் மிடிமைக ளனைத்துப் போக்கி
அன்பினு லடியேற் கின்ப மருள்செய்வா யழிதற் றோனே (224)

அத்தனே வித்தாய் மூலத் தஞ்சிலொன் றுகியெங்கும்
நித்தனே பத்தி பாயு செடியனே நிகரில் லானே
சுத்தனே முற்று மெங்கள் துன்பங்க ளனைத்தும் போக்கிக்
கத்தனே முற்று மண்ணிற் கவலைபோக் குறஹு் மானே (225)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திரங்கொடி தயங்கனி லிருந்தவனே யானினு
டிரக்திடும் புகழ்ச்சி யதைநீ

வரம்பெறு வனென்றுனோடு டிரக்கிடு மவர்க்கும்பின்
கமக்குமன மென்று மகிழ
அரம்பையர் சுகங்களு மஹா—மதர்ச பாஅத்துமுன
தன்புறுதி தாறு முலகில்
உரங்கொடு தரும்படி நினைத்தின முவக்கிடு
மிகுத்துரை விளங்கு மிறையே (226)

சொர்க்கமதி லுட்படு சுகங்களு மதற்குள்
சுகிப்பினோ டரம்பை மாரும்
மக்கமி செய்திடுஷபா அத்துமூயர் காக்ஷியு
மகிழ்க்தெவரும் வாழ்வு பெறவே
சக்கரவொ டுக்கமி லெனக்குற விரங்கிநீ
தரும்படி நினைத்துள தெல்லாம்
இக்கணமெ னக்குலகி லீந்துதவி செய்தரு
ளெவர்க்குமு னிரங்கு மிறையே (227)

வேறு

அண்ட ருலோகம தோடனைத்தும்படைத்
தாளுமனுதியே நீதிசேர்
தொண்டருளத்தில் நினைத்துணைத்தான்றெமு
தேத்தும் துவாவை நீகைக்கொள்வாய்
வண்டர்களுண்டது கண்டிடயானும்
வருந்திநின்னோடி ரந்தேத்தியே
கண்டதுகேட்பன றிந்துடனீகம
லத்தொளி தந்தருள்ஹக்கனே (228)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அந்தர மாமுனி வோர்பசா சோடும் ரக்கர்ஜின் மாந்த ரதிற்சிலர்
சந்திர சூரிய னைப்பணிக் தேதநே கொண்டுமி டிரந்த தறிந்தவா
மந்திர பாவியிர் முண்டகப்பூமலர்ந்திட்டது கண்டறிந்துன் னுடன்
சுந்தர மேலடி யேனிரந்திட்டது ஆப்பேறீ டேற்றிடென் சுத்தனே

கலி விருத்தம்.

அத்த னேயடி யார்க்குறு மன்பனே
மெத்த காளுனை வேண்டுத லன்றியான்
குற்ற முங்குறை செய்துவக் துன்னுடன்
உற்றி ரந்தனு வந்திடென் னுத்தமனே (230)

பழுதி லாத பழம்பொரு ளேபயல்
அழுத யாவுமறிந்துன் னருள்கொடே
எளிதி னேடுவந் தேழைக் கிரங்கிநீ
தொழுதற் கேற்கத் துணைசெய்யெ னித்தனே (231)

ஆரு மாருமி லாதவ னத்திடைச்
சேருஞ் சேருமெ னப்பயல் தேடிவந்
தோது காதமென் றுன்னுடன் கேட்பதுக்
கேது நீதலை வீந்தரு ளேகனே (232)

கண்ணி லாமலுன் கற்பனை காணிலான்
எண்ணெ ணுப்பிழை செய்திடைத் தேங்கினன்
விண்ணி லுன்னருள் வேண்டுதல் கண்டுநீ
மண்ணில் வந்துவ ழுங்கிடென் வல்லனே (233)

பலப டைப்பும் பரந்தொளி ழுங்கிய
நிலைகள் கற்று நிறைந்தவ னேபயல்
விலகல் செய்துனை வேண்டி யிரந்ததுக்
குலகில் வந்துப காரஞ்செய் யுண்மையே (234)

மூல மந்திர முட்பொரு ளாய்நிறைத்
தாள மொக்கநின் றுள்பவ னேயருள்
மேல கத்தருள் வேண்டுதல் கண்டுநீ
யேல முன்தலை வீந்தரு ளேகனே (235)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மதங்க ளுறுபதி யனலும் புனல்வெளி
அறுசுங் குறுசுட னகண்டவான்
பதங்க ளுடுபதி பரந்த முகிலிடி
பதுங்கு மருளிலவ் குடன்கலம்
விதங்கொ டலைபுவி வெருண்ட பரிமலை
மிகுந்த வொளிபல சமைத்தவா
இதங்கொ டுனதள விரந்த னெளியனுக்
கிரங்கி டெமதுளந் தரங்கனே (236)

விலங்கு பறவைகள் மிகுந்த வுயிர்பல
விதங்கொ டமைசெய்து நிறைந்தவா
பெலங்கொ டடியவர் மனங்கள் வகைவகை
பிரிந்த படியுனை மறந்துபோய்

இலங்கு முனதொளி சிறந்த திருவடி
யிறைஞ்ச விலையுனோ டிரக்தன்யான்
பலங்கள் மிகுதிதங் திரங்கெவ் வுயிர்களும்
பணிந்து கதிபெறும் பரமனே (237)

வேறு.

அவ்வென் றெழுந்தபுக மாராய்க் தடங்கலையு
மாவென் றமைத்த பொருளே
யௌவென் றெழுந்தமஹா பூபென் றிசைந்தவிற
சூலைப் புகழ்ந்து னடியேன்
உவ்வென் றாசைந்துனொடு கூப்பிட் டிரந்தனனுன்
கோபந் தணிந்து னருளால்
தௌவென் றெழுந்துதவி தருவாயனைத்திலும்நீ
தானாய் நிறைந்த பொருளே (238)

அத்தனிலி யேகுறைகள் சற்றுமிலி யேபழுதொன்
றற்றபெரி யோனே யடியேன்
நித்தலுமுன் னோடழுது செப்புமது கேட்பதை
நெகிழ்ந்ததென நீநெ டியவா
சித்தமடி யேனள விரங்கவிலை யோவினஞ்
சினத்திடுவ தோதெ ரிகிலென்
உத்தமனே யானின்னோ டிரந்திடுவ தத்தனையு
முற்றுலகி லீந்த ருள்கவே (239)

அளவடி விருத்தம்.

பருதி நடுங்குக் துணிகோ டனைத்தும் படைத்தோனே
மருவி யுனைக்கேட் டிரந்தது கையில் வரக்காணேன்
பெருகி யுனைத்தான் தொழுதி லனநதப் பிழைதானோ
கருதிய நெஞ்சத் தருளிய கஃப துல்லாவே

அருண னடங்குந் துனிகொடென் னாவி யமைத்தோனே
கெருண மனங்கொண் டடிய னழுங்குரல் கேளாயோ
கருணைகொ டுன்ற னடியவர் நெஞ்சு கலங்காமற்
தருண மறிந்துன் தலீல்செய் வாய்சம துல்லாவே (241)

உருவமோ டந்த மிலியே யென்னுள்ள முனைத்தேடி
வருகுது கஞ்ச மலரடி கண்டு வணங்காமல்
வெருவிட நின்றுன் திருமன மென்னை வெருட்டாமல்
அருபமோ டுன்றன் றனையருள் நீஹறஹ துல்லாவே (242)

முடிவு துவக்க மிலியே யுனைத்தான் முயலாமற்
படியில் மிடைபட் டடியேன் படுந்துயர் பாராயோ
அடிய னுத்தான் தொழுதில னென்றுநீ யகலாமற்
கொடிய னிரந்துள படிதரு வாய்குறை யில்லானே (243)

கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உருவந்த மிலியுன்ற னொளிதங்கு முலகெங்கு முறைகின்றவா
கருவிந்தை மதனைந்து கணைதந்த படியுன்னைக் கருதாமல்யான்
மருவுந்து வகைகண்ட நிலையெங்க ளுயிர்பொங்கி வருவாழ்வுதான்
திருவந்து புகலென்ற னுளநின்று தினமன்பு தருமன்பனே (244)

அலைசுற்று முலகத்தி லருள்பெற்ற கரர்சித்த மறிகின்றவா
கலைசுற்று மதிலுற்ற கமலத்து ளுனைமுற்றுங் கருதாமல்யான்
விலைபெற்ற தெனமெத்த மிடையுற்ற படிகண்டு வெருவாழ்வுதான்
நிலைபெற்ற தெனசித்தந் தரமெய்த்த திடையுற்ற நெறிநித்தனே( )

வே று.

மேலவெளிக்குள் விளைந்துசல்மாமறை விண்டெமை யாள்பவனே
கோலவிழிக்கடை யாலுனைநோக்கிக் குறித்து வணங்கறியாய்
பாலனறிந்தறி யாமலுஞ்செய்துள பாவம் பொறுத்தடியேற்
கேலமனத்தி லிரங்கிச்சிறப்பெடுத் தீந்தரு ளுத்தமனே (246)

தேனெடுபாலுமொவ் வாவுபதேசநீ செப்பி யுயிர்க்குயிராய்
வானகமீதுள தானதெலாமெனுள் வைத்தெமை யாள்பவனே
கானகமானதி லேபணியாக்கலை மானை யழைத்தருளும்
தீனபிதம்முடைப் பேறெமக்கீந்தருள் தீங்கிணை யற்றவனே(247)

வே று

மனிதரு முயிரது பலவுநீ யமைசெய்து பார்மீதில்
மனிதர்கள் தவமதி லினிதுற வருமுயர் வல்லோனே
தனியனை நினைப்பவ ரெவருனை யலதுத யங்காமற்
கனியினி லினிமைதந் தருளென தெளிமைநீ காண்பவனே (248)

நெறிகடு முறைமைகொ டடியவர் புகழில் நிறைந்தோனே
மறிவிட நகலநின் னடிதொழு மெனையுநீ மறந்தாயோ
அறிவுகேட் டிமைசெய்தி டினுமென தெளிமைய றிந்தேநீ
நெறிகொடிக் கெதிர்நிலை தரவரு ளெனதுணி றைந்தோனே (249)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இரவைப் பொழுதுன துயிர்கட் குனதொளியியல்வுற் றருள்பவனே
திரையுற் றுனதொளி தெரியப் பயலைநீ தெளிவுற் றுரையருளென்

றாவைச் சமர்செய்த கபியைத் தொழுதுனே டழுதுற் றிடுமதைநீ
புரையுற் றுலகினி லெளியர்க் குதவிசெய் புகழுக் குரியவனே (250)

அறுசைச் சுமைகொளு மவர்கெற் றியிலுய ரலிபிற் றெழுதியவா
இரசக் கனியென திதயத் துறைவதி னியல்வுற் றறிகிலேனுன்
பரிசுப் படியுள பயலைக் கருதிய பகையைத் துலைவுசெய்தே
வரிசைப் பதவிகள் தருமத் தருள்பல வடிவுக் குரியவனே (251)

கலி விருத்தம்.

காயனே காவனே கல்கி யிரக்கிறேன்
பேயனுன் செய்யும் பிழைபொறுத் தருள்கவே
காயநெஞ் சுருகிக்கண் கலங்கிப் புகழுவேன்
தாயினு மன்பனே நீதா னிரங்குகவே (252)

அருவமோ டுருவமு மனைத்துமாய் நின்றனை
வெருவவே மருவுதல் வேந்தனே யடியனெஞ்
சுருகினும் பெருகநோக் துளறினு முனையொளிக்
தருளெமக் கிவதா ரிறைவநின் சரணமே (253)

கண்ணிகள்.

முதலவனே யென்று முயல்பவர்மனங்கள்
முழுதொளி துலங்க
முடுகுவைநீயெங்கள் மிடிமைகளகற்றி
வந்தருள்க நின்சரணமே (254)

இரவினிலுயர்ந்த பதவிகள்முயன்ற
வர்கள்பெறுவ ரென்றே
இசைவுறநீயெங்க ளிடறகல முடுகி
நின்றருள்க நின்சரணமே (255)

உருகுமெனதுள்ள மிகழுமெனதுடம்பி
லுயிர்பதறிநொந்து
மிகவுனைநாடிநின்றே னொருவனேயடியே
னேவகற்று நின்சரணமே (256)

அரவுடல்கடுங்க வதினுயிர்பிடுங்கு
மஹ்மதை நினைத்துன்
னடியிணைப்பணிந்தே னரியபெரியோனே
கதிதருக நின்சரணமே (257)

அகாமுதனின்ற ஹறுபதனைவிண்ட
நிலையடிய னேந்துன்

னளவிரக்தேனென்ற னிறைவனேயெளிய
ஹுக்கிரங்கு நின்சரணமே (258)

அருவசொருவக்த மிலியெனவெழுந்த
விருளதி லுறைந்தோ
ரணுவுமியங்காத வாதியேயடிய
வர்க்கிரங்கு நின்சரணமே (259)

அலிபுமுதலென்று வருவனிலம்விண்ட
படியிரு ளகன்றுன்
னருள்பெருகநின்ற வன்பனனேதம்ப
மீந்தருள்க நின்சரணமே (260)

திமிரகமகன்று திகழொளிபசந்து
திகிர்தியென நின்ற
திகளொளியேயெங்கள் தீங்குபழுதகல
நின்றருள்க நின்சரணமே (261)

வடிவுருவோடந்த மிலியுன துசந்த
மெவர றிவரென்றுள்
மகிழ்பவனே யெங்க ளிரணப்பொலிவுறகு
மத்தருள்க நின்சரணமே (262)

சுடரொளிபேரின்பத் தொளி அஹ்மதன்புத்
துணையென மகிழ்ந்து
துனியெழ நிறைந்த துய்யபெரியோனே
துணையருள்க நின்சரணமே (263)

அடலொளிவுகண்டு வருகபீகளன்றுந்
தமரரோடு பிண்டத்
துயர்பலவுமின்றருளு பவனேயெளிய
னுங்கிரங்குநின் சரணமே (264)

உடலொளிசிறந்த ஹபீபையலதொன்று
மமைசெய்தில னென்றுள்
மகிழ்பவனே எங்கட் குரியகபிஷபா
அத்தருள்க நின்சரணமே (265)

படரொளிதிரண்டு பலவடிவகன்ற
வடிவிறைவனென்றுன்
னடிதொழுமகிழ்ந்த வல்லோ னேயுதவி
தருகநின் சரணமே (266)

கடலொளி பரந்து வருமொளிதிரண்ட
ஹபீபைநீமகிழ்ந்து
கனமறைதெரிந்து கவல்பவனேபுகழ்கண்
டடேற்று நின்சரணமே (267)

சசியிரவிதங்குந் தாளமி லுறைந்தெவ்
வுலகுயிர் சமைந்து
சமையமென நின்ற தனியவனே பதவி
தந்தருள்க நின்சரணமே (268)

கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஊனேடென்யுதிரங்களைம்புல னேடுவந்தெனை யாண்டவா
ஞானமென்றொளி காணவேண்டி நவிறுன்னேடு மிரப்பன்யான்
தேனேடன்பு பொருந்துமாவைத் திரட்டியெங்களுக் கின்றுற்ற
தீனம்வன்பிழை போக்கினின்றெளி யேற்கிரங்கிட னித்தனே 269

மூலமந்திர மைந்தி லொன்றை மொழிந்தவர்க்கிறை யோனேநீ
மேலுமந்த வெளிக்குள் நின்று விளம்புமோசைகே ளாமல்யான்
காளோடைந்தொரு நான்குமுடின நாடியாலுமுன் றேவெகு
காலமென்றடி யேற்குநின்றிரு காக்ஷிதந்தருள் ஹக்கனே (270)

வேறு.

ஆரும்புகழு முயர்பதமு மகாமுதலெ ன்றறிவுதமும்
ஆரமணிசே ரொளிமுகமு மவையுந் திருமுன் வருனவமும்
ஓதுமறைவிண் டருள்வதுமொருவர்க்கறியா வடிவுருவும்
ஓமென்றதையன் புறுமதுமுன் னொளிவுமடியே னுணராமல்

பாரில்மிகவும் புகழ்வதும் பயமுற்றெவரும் பணிவதும்
பாவமகலு முயர்தவமும் பலவும்பழுதென் றுளமதுதான்
ஏதென்றிறையுன் னுயர்காதி லேறும்படிகேட் டென்னளவில்
ஏன்வந்தவனென் றுயர்கதிதந் தெனையாண்டருளெனிறை
யோனே

இரவும்பகலு மிறைநின்னே டிருகையேந்தி யிரந்ததுவும்
எனதுள்ளிய முருகியெழுந் திருகண்ணதிற்பாய்ந்தொழுகுவதும்
உரவம்மொழிசே ருயிரற்றவுடல்போல் மயங்கியுணர்வதுவும்
உலகிலடியேன் மிககொந்து முணருமதுவு முணராயோ

மரவின்படியைம்புலத்தைவென்றுமௌனமணிமந் திரத்தையுன்னி
வளரும்பிரானென்றுனைத்தேடி வணங்காரெனவு மறந்தாயோ
அரவின்கவிகை ஹபீபாய்நா ரூனபெருப்ப வலுப்பமதை
அடியேனுணர வலனேநின் னருள்தந்தெனையா ளிறையோனே

கலிவிருத்தம்.

மால்பெற்றுயர் ஞானத்திரு மறையுச்சி பழுத்தே
மூலப்பொரு ளெனவுற்றொரு மொழிபெற்றிடு மிறைவா
காறுற்றெழு கமலத்தொளி காணப்பயல் துணிவேன்
மேலத்திரு வாசற்படி வெளிகாட்டெடன் னிறையே (273)

தூமத்திரை யதில்மொய்த்துள சுரர்கட்கறி வரிதாய்க்
காமத்திரை யதிலுற்றவர் காணத்தெரி பவனே
ஏமப்பதி புகழ்மெய்த்துனெ டிரப்பேனெளி யற்குன்
மேனத்தொளி தரகிலத்தலும் நினைவாய்கெடி யோனே (274)

வெண்பா.

கெட்டை கெடியபல நிஃமத்துறு மேலவனே
வெட்ட வெளிக்குள் விளக்தோனே—யெட்டுக்
தருவா யெவர்க்குமொரு தாழ்வருத்தா தென்முன்
வருவாய்நீ யென்று மகிழ்க்து (275)

கண்ணிகள்.

மகிழ்க்துனது தீதாறும் வரிசைகபி தருஞ்சிறப்பும்
உகக்துபயல் காண்பதற்குன் னுதவிசெய்வா யுத்தமனே (276)

உற்றுலகி லுனையாரு முழன் றழன்று தேடுகினும்
எத்தலத்தி லிருப்பவனென் றெவர்க்குக்தெரி யாதவனே (277)

தெரிவரிதாய் நின்றவுன்னைத் தேடுவர்க்கன் பாகியுள்ளத்
தரியவிழி தெரியகிறைந் தடங்கலுமோன் ரூனவனே (278)

ஒன்ருகி ரண்டாகி யுருவாகி நின்றபயல்
அன்ருடஞ் செய்பிழைக ளனைத்தும்பொறுத்தாள்வாயே (279)

ஆளுமிறை யோனேயுன் னன்பரிற ஸூலும்மத்தோர்க்
கேழுமணு காமலெட்டு மீக்தருள்வா யென்கோவே (280)

கலித்துரை.

கோவென்றுன் பாதக் தெரிசித்தி டாத குமக்திரிகள்
சாவென்ற காலம் கரகாள்வ ரென்றுகீ தான் மொழிக்தாய்
ஆவென் றருளுளத் தேனுறைக் தாயடி யேற்குமுன் றன்
காவென்று பேசும் கலக்தரு வாயெங்க ளுயகனே (281)

காயக னேகழு வாதவ னேகன்மை தீமையுறுங்
காயகல் லாவியி னூடுறைக் தோயுன்னைக் காண்பதற்கு
மாயவன் வன்பிணி வாராமற் காத்துயர் வாழ்வுதக்து
பேயனை நீயுவக் தாண்டுகொள் வாயெம் பெரியவனே (282)

பெரியவ னேபிழை போக்குவ னேபெரு மண்டாண்டத்
தரியவ னேயெம்மை யாள்பவ னேபுக ழாமெவைக்கும்
உரியவ னேயொளி வானவ னேயுணர் வோர்க்குமுன்னைத்
தெரிபவ னேதரு வாய்கதி நான்குமுன் சிக்தைகொண்டே (283)

வெண்பா.

கொண்டற் குடையுடைய கோமனம் மாலகபி
விண்டபுல னைக்துமென்னை மேவாமல்—தொண்டனுயி
ரீமானே யேதெரிசித் தின்ருள் பணிவதற்கென்
சீமானே நல்லுதவி செய் (284)

கலித்துறை.

செய்யும் பலகுறியெல்லாநின் கற்பனைச் செய்கையென்றே
மெய்யி னுறக்கண் டிறைஞ்சாத பாவிகள் வெண்ணரகில்
எய்யும் பொழுதவர்க் கிடேற்றங்கேட்டுநின் னேடிறஸூ
லுய்யும் பறக்கத்தெற் கீக்தருள் வாயெங்க ளுத்தமனே (285)

உற்றுல கிற்படைப் புண்டா முயிர்க்குநல் லும்பருக்கு
மற்று மரக்கர் முனிபேய்கள் ஜின்னுக்கு மாமறைக்கும்
சற்று மிவையொன்றுக் கெட்டாம லெங்குநீ தான்நின்றிடுங்
கத்தனே நீவக் தடிமைகொள் வாயுன்னைக் காண்பதற்கே (286)

காணுமி தயக் கமலக்கண்ணு லுனைக் காண்பதன்றிச்
சேணி லெவரு முகக்கண்ணி னல்தெரி சிக்கவொண்ணு
வாணிலி பெண்ணுமல்லானே யடியற்கு முன்றனருள்
வேணும் பிறுதௌ செனும்பெரி தாகிய வித்திடமே (287)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வித்து மற்றுல கழுற்ற கத்துரி
மிகுத்து நித்தனு மணத்தநல்
வத்து மிக்குள வரம்பை யர்க்கெமை
வகுத்து ரைத்தபெரி யோனேயான்
கத்தி பட்டுனே டிரக்து கேட்பனீ
கபூல்செய் திக்தரு ளொவர்க்குநின்
அத்த மெத்தனை யெனத்தெ ரிக்தன
விடற்கொ ணுதெம துறப்பனே (288)

றப்பி லாலமி னெனத்தொ ழாதெழு
பிறப்பி னுற்றழிவ திற்பல
பிறப்பி லென்னையு மழித்தி டாதொரு
பிறப்பி லாக்கிவைத் தோனேயான்

உறப்பி லாமலு முனைத்தி னங்தொழு
துணர்ந்தி லேன்மிக வாகிலு
மறப்பொல் லானெனை வெறுத்தி டாதபடி
யற்கி ரங்குநீ யன்பனே (289)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அன்பனே நின்பத மென்றுனை நம்புநல்
லடியவர்க் கன்புமா தாவுமாய் நின்றெமக்
கின்பம்நீ தருகினுந் துன்பமே வருகினு
மிகழினு மடியனெஞ் சுனைமறந் தொழிவனோ
வன்பனோ டைம்புலன் பஞ்சபூ தங்களும்
வந்ததின் மாய்கையால் சிந்தைவே றுகமுன்
தன்பமே யன்றிவே றின்றெளி யற்குகின்
தலில்தந் தருள்கயான் தனியனின் சரணமே (290)

சரணமென் றுனதருள் பெறுமடி யவர்கள்தாந்
தவமதில் நடமிடும் பொருளேவந் தடியனுக்
கிரணநீ தருகினு மிடறுவந் தணுகினு
மிகழினு மடியனெஞ் சுனைமறந் தொழிவனோ
வருணனன் புறவரும் பனிகனைத் திலையுளம்
வறுமைசொ டாவுகொந் திகழுமுன் பாதமன்
றருணன்வந் தடிபணிந் தருள்பெறும் வாசலி
லடியன்வந் திரந்தனன் பிழைபொறென் னிறைவனே ()

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

என்று மென்றுமெழு சூரி யன்கதி ரிலங்கு திங்களவ் வினைகளு
மண்ட பிண்டமதி லுக்து காயமுள் ளடைந்த சீவன தடங்கலும்
விண்டு கண்டுனை யுணர்ந்தி டாதவெளி யேவெ ளிக்குமுதலானவா
தொண்டன் வந்துன்னோ டிரந்தனெங் கள்பல துக்கநீக்கிவிடென்
[னித்தனே

நித்த னேயுனை நினைப்ப னிவரு நினிக்கொ ணுதெனை நெருக்கியே
மற்ற சேர்வழி வருத்த வென்னுள மயங்கி யுன்னையு நினைந்துபின்
மெத்தகானின்னோடிரந்த முங்குரல் மிகுந்தநின்செவிகேளாவெனக்
கத்த னேயெனது கண்க லக்கமது கண்டிரங் கிலையோ பாவியே ()

வெண்பா.

பாவிக் கெனபலனும் பான்மையுமுண் டோபயலைத்
தாவிவெறுத் தாயெங்கள் தானவனே-கூவித்
திருப்பதங்கண் டோர்பவர்க்குத் தீயருக்கு மெல்லா
மிரப்பவர்க்கு நீ கொடுப்பா யே (294)

கலித்துறை.

ஏனெந்த காளு மளவிறங் காமனீ யெங்குநிறைந்
தானந்த மாயிருந் தாயுவந் தெந்தமை யாள்பவனே
நானெந்த காளுமுன் னுமமற் றொன்றை நவின்றனனே
தானெனுழிந் தாலிங்கா ருண்டுநல் வாழ்வு தருபவனே (295)

தாரபலனும் பதவி தலீனுந் தலைமைகளும்
வீறுங் கதியநல் மேலான வீரமும் வெல்வெற்றியும்
பேறும் நலவும்நல் லீடேற்ற மும்பெரு வாழ்வுமனந்
தேறும் படிதரு வாயடி யேற்கொரு தீங்கிலியே (296)

தீங்கு பழுதிணை யில்லானே யுன்றன் திருவடிக்குள்
ஓங்கி வளர்ந்துரு வாய்நிறைந் துள்ளத் தொளியிருகண்
தூங்கும் பொழுது தருவாய் தொடந்திரு நாசினின்
றெங்குஞ் சாத்தோ டெழுந்தோனே யென்று மெதியவக்கே (297)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

எளியவர்க் குதவுநற் பொருளேயுந் திருவருக்
கிடையிலுட் டுளிதெறித் திருளகத் தொழுகிய
அளிவதற் குயிர்விடுத் தடியனுக் கருள்வினைத்
தஹு௱டதுக் கிவனும்மத் தெனவகுத் தோனேயான்
ஒளியுனக் குயர்தவக் குறைவருத் திடுமதா
னுலகிலிப் பொழுதுளத் துணையுருந் தெரிகிலேன்
வெளிநிறைத் துயர்மனத் துறநினைத் தெனதுநீ
வினையறுத் துதவியுற் றருளெமக் கொருவனே (298)

ஒருவனெப் படிவுநற் பதவியுற் றருள்வதற்
குவமையொப் பிலையெனப் பயல்நினைத் துருதுமுன்
வருவனித் தலுமனப் பகையொழித் திறைபல
வகைவகைப் படிசிறப் படியனுக் குலகினிற்
றவருனெப் பொழுதெனப் பெருகுமெய்த் துளறுமென்
றனிமையுற் றிறஹு௱மத் தருளுமெய்ப் பொருளேயான்
இருமனப் படுமுளத் திருளறுத் தியல்வினைத்
திடறுதீர்த் தெமையுமீ டேற்றிட னிறைவனே (299)

கலி நிலைத்துறை.

இறைய வாவிடை பின்கலைச் சுழிமுனைக் கிடையில்
மறையின் வாழ்வதை வருத்துவித் துனதுவல் லபத்தால்
நிறையும் வானொளி தெரியுதற் கெமைநினைத் தெமக்கோர்
குறைவ ராமலீ டேற்றுக வெமக்கும் றஹ்மானே (300)

மானை மான்றொடர்க் தியங்குமெண் கலைமகிழ்க் தினித்த
தேனை யேனெளித் தாய்வருத் தாமலென் நீனே
பூனை யானையோ டெதிர்பொரா தகலுமென் றுணரா
ஈனன் யானென்றைக் காண்பனோ வுனையலா திசைக்தே (301)

இசைக்த முத்துகற் பவளமும் பச்சையோ டிணங்கி
வசக்த மண்டபத் துட்புகுக் ததைவகுத் துருவாய்ப்
பசிக்த கல்லுயிர் விடுத்துண வீக்தருள் பதவி
உசக்தெ மைப்படைத் தோனேகின் னுதவிதக் தருளே (302)

அருள்வ தற்கரி தாகிய முதலெழுத் தலிபென்
றருள தற்குமுன் னறிபவ ரெவரெமக் கிறைவா
வெருள கற்றிகல் லெழுத்தினை யறிக்துனை விரும்ப
அருளெ னக்கக மீக்தரு ளெவர்க்கும் வல் லவனே (303)

வல்ல பங்கொடு மலறையுச்சி பழுத்துமண் ணுலகில்
கல்ல றக்தரும் ஞானத்தின் கடுவுச்சி பழுத்தங்
கில்லெ னும்பொருளுடை வதெவ் விடத்திலென் றிறைஞ்சப்
புல்ல னையுவக் தடிமைகொள் ளெவர்க்குகற் பொருளே (304)

வஞ்சி விருத்தம்.

பொருளன்பு பொருக்திய மெய்ஞ்ஞானத்
தருளென்ற தகத்து ளுறைக்தடியேன்
வெருளன்றி விரும்புவ தற்கெனதுள்
ளிருளென்ற தகற்றிவி டெம்மிறையே (305)

இறையென்றலி புக்குமுன் னெப்பொழுது
முறைகின்ற வெழுத்தினை யுற்றுணராக்
குறையன்றி யெமக்கொரு குற்றமும்யான்
அறைகின்றிலே னீபொறெ னுத்தமனே (306)

மன்னென்றும் வளைக்திடு மவ்விருளில்
என்னென்றுக் தெரிக்திலே னெவ்வகையும்
குன்னென்றுல கத்தெமை யாள்பவனே
பொன்னன்பு பொருக்த விரங்குகவே (307)

இரங்கென்றெளி யேனிறை வாயுனது
பரங்கண்டு பணிக்து பலம்பெறயான்
சிரங்கொண்டு புகழ்க்ததை நீதெரிசித்
தரங்கொண்ட வடிமைகொ ளாண்டவனே (308)

ஆண்டாய்புக ழான தடங்கலையும்
பூண்டாய் திரு மேனி பொலிக்தமுத
யீன்றாயெவை யும்முன தாலெமதுள்
நீண்டாய் கினைவாயெமை யாள்பவனே (309)

மேலான பதங்கள் விளம்பியசொல்
காலாறு மெனுவி லெழுத்து பசுங்
காலோடு கலக்துள காக்ஷியதை
யேல்வாக யெடுத்தெமக் கீக்தருளே (310)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆதிபெரும் பொருளே யழிவில் லானே
அன்னையி லுமன் பானபெரி யோனே
சோதியிறை யோனே துவக்கமில் லானே
துய்யவனே யெல்லாம் படைத்தழிப் போனே
நீதிபெற வெங்கு நிரம்பிநின் ருேனே
நிச்சையப் பொருளே நிகரில்லா ஞானமே
ஓதியுணர் வல்லார்க்கு முத்தமப் பொருளே
உண்மையா யென்மனத் தழுக்கறுப் பாயே (311)

உண்மைப்பொருளே யுவக்துதொழ வல்லார்க்கு
மூனமற நின்றிலங்கு முள்ளொளியே
நன்மைப் பொருளே துலங்கிய மேலவா
ஞானவிளக் காகநின்ற நாயகனே
நன்மப் புவிவா னுலகுங் கடலேழுங்
கதிரவனுங் காணமற் காணநின்ற காவலனே
தன்மைக் குரியவா தீங்கில்லா நித்தனே
தானவனே யென்மனத் தழுக்கறுப் பாயே (312)

எழுசீர்ச்சந்த விருத்தம்.

காலக்கினி மாரிதரும்புனல் காணக்கிடை யாதவனத்தருள்
கமலத்துறு வாவியனப் பெடையென்
கோலத்திரு மேனிபொலிர்தறு கோணத்தொரு பாகிலிருக்தினி
கூவிக்குறை யாதெமை யாள்பவனே
பாலொப்பிலே ஞானப்பசுங்கிளி மேயப்பய லாவிபதைத்துறு
பாசத்தை யழித்துமு கக்தருளென்
றேலத்திரு வாசலில்வக்துன் ருெடியல்வுற்றது கேட்பனரிக்துநீ
யேழைக்கிரங் கிணைபழு தற்றவனே. (313)

ஆருமறி யாதொருமாமணி யாகுமுத லான முஹம்மதரென்
றருளுக்தொனி யால்நீ யடங்கலேயும்
பேரின்பம தாகியவென்பனி பெருகுக்துளி யாலமைசெய்துரை
பேசென்றுநீ பேணிவ குத்தவனே
ஏதுமறி யாதெளி னுன தேவல்செய்திலேன் வெகுமாலொரு
கூறென்ற திரங்கி யெமக்கருளென்
றேதும்பயல கேட்பனறிக்தொரு காளுங்குறை யாமலுவக்துநீ
யுதவும்மடி தக்தரு ளுத்தமனே. (314)

கலித்துறை.

உவதேச நற்குரு வைப்பய லுள்ளத் துணர்ச்சிறைஸலில்
அவரோசைக் குட்படக் காண்கில னேயெம்மை யாள்பவனே
வவரோசைக் குள்ளுனக் காளாக வேண்டி வருவனென்றன்
சிவயோகக் கண்ணிற் படலத்தை நீக்குனைத் தேர்வதற்கே. (315)

அன்றெமை யாளுங்குருபாத முள்ளத் தறிந்தடியேன்
தொண்டது செய்யத் துணிந்தில னேயென்றுந் துய்யவனே
வண்டர்நின் பாதத்துக் காளாக வேண்டி வருந்துயரங்
கண்டிரு பார்வைப் படலத்தை நீக்குன்னைக் காண்பதற்கே (316)

விண்ணவ ரெண்ணத் தடங்காநின் பாதத்தை வேண்டிக்கையாய்
மண்ணவரு ள்ளந் தழும்பாயற் காண வகுத்தவனே
கண்ணுவ ருண்ணத் தரும்பா லமுதத்தை நாடுதென்றன்
கண்ணிரு பார்வைப் படலத்தை நீக்குன்னைக் காண்பதற்கே (317)

செகுரு நாதனைச் சிந்தையுள் ளேதெரிசித்திடுவோர்
வகையறி யாமற் மயங்குகி றேனின்றன் வல்லபத்தால்
மிகவுமெய்ஞ் ஞானத் துருக்காண வேண்டி விரும்புதென்றன்
அகவிழிப் பார்வைப் படலத்தை நீக்கிவி டாண்டவனே. (318)

தேடும் பொருளையென் சிந்தையுட் காட்டகற்றேசிகனே
ஏடு மெழுத்து மறியாது காணெழுத் தாணிக்குள்ளோர்
வீடும் விளக்குகல் வேந்தனு முண்டதைக் காண்பதற்குள்
ஆடுங்கண் ணுடிப் படலத்தை நீக்கிவி டாண்டவனே. (319)

உடலுற்ற தாயாய்கம முள்ளுயி ராயுள் ளுயிர்க்குட்சிறந்
தடலுற்ற தாயான நல்லஹ மதுவா மவர்க்கன்புறுங்
கடலுற்ற தாயுன்னைக் காண்பதற் கெம்மிரு கண்ணிலுற்ற
படலத்தை நீக்கிவி டல்லாவுன் சித்தமென் பாக்கியமே. (320)

கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பலவும்பல விபரமொ டுனதடி பாவுந்திரு வுளமுரு முயரொளி
  பழகும்மிரு தயமதி லுறுதிதரும்
கலவுங்கதி நெறிமுறைநீதியு நடுவும்மருள் பெருகுமீ மானெரு
  நாளும்கழு வாதெமை யாள்பவனே

இலௌஹின்பல கையினுன துதவிகொ டெழுதுங்கல முணருமுற்
  றெழுத்திலோ ரெழுத்தென்னள விரங்கநீ விடையருளென்
றுலகில்லுமுன் றடியனின் றேடிரந் தோதும்புகழ்ச் சியையுமீ
  டேற்றெருகாலத்துமி லாதவ னேகனியே. (321)

விருத்தம்.

கனியேகனி வுறுமேலவர் காணத்தெரி வதன்முன்
பனியேபனி யொலிதேடிய பயலுக்கிட றணுகாத்
தனியேபய லுனேகாடிய தலீ தந்தருள் பவனே
இனிவேறணு காமல்விறைந் திடேற்றம திறையே. (322)

இறைவோரிறை வனேமன்ணினி லெளியேன் வெகு துயரால்
முறையோமுறை யெனகொந்தழு மொழிகேட்டிரங் கிலேயோ
தறையோரிரு தயம்காடிய தலீ லீந்தருள் பவனே
குறையோர்குறை விலேயான்செய்த குற்றம்பொறுப் பாயே. (323)

கலி விருத்தம்.

உன்னேயு மொருவனென் றுரைத்த வாயினர்
பின்னேயு மொவரைப் பின்செல வோவுவக்
தன்னேயு மறிவிலுற் றறிவி லும்விரைக்
தென்னேயு மிருதயத் திரங்கென் னேகனே. (324)

உனக்கு நல்லவ னல்லாய லுண்மையென்
றனக்கு நல்லவ னுகத் தலீலுந்தத்
தெனக்கு நல்லறிவு வீந்திடர் போக்கியென்
மனக்க ளங்கத்தை மாற்றிவி டேகனே. (325)

கலி நிலேத்துறை.

ஏக நாயக னேயுனேப் போற்றியெந் நாளும்
தாக மாய்ப்பயல் கேட்பதைத் தந்தெனக் கருள்வாய்
வாயி னுலென்றும் வசையுனக் கல்லவோ வரிசை
நாவி னுல்நவின் றிடுகநீ யெவர்க்குநல் லவனே (326)

நல்ல நாயக னேயுனேப் புகழ்ந்திடு நாவாற்
புல்ல ரானவ ரையும்நான் புகழ்வனே புவியில்
அல்ல லானதை யகற்றிநற் பதவிதந் தருள்வாய்
சொல்லும் வாய்மைகண் டிரங்குநீ யெவர்க்குநற் றுணேயே (327)

ஏனே வித்தனே சொல்லியு மிரங்கிலா யெளியேன்
தானே புல்லனேப் போலாரு மில்லேயோ தறையில்
யானே விப்படி யலேவது னபிப்பொருட்டாலே
தீனே யென்பிழை தான் பொறுத் திரங்குவாய் தெளிந்தே (328)

தெளிவெ யுன்னேயான் தேடுதல் கண்டு நீசெகத்தில்
எளியேனுனெனக் கிரங்கிடல் லாதுநீ யிசைத்த
மொழிபொல் லாதெலும் வசையுனக் கதைநீமுன் னறிந்தே
அழியோனுக்கதி தந்தெனே யடிமைகொள் ளரசே (329)

அரச ருக்கருள் பெருகவைத் தடியவ ருடனும்
புருஷ ருக்கடி பணிவது போலவைம் புலனும்
பரிசி னிறைந்திடு வரைப்பணி வித்தனை பழையோர்க்
கருசி னிற்றதை யெமக்கிசைத் தருளமைத் தோனே (330)

அமைக்கு முன்னினைத் தஹ்மது தமக்குரு ஞரியோன்
இமைக்கு முன்படைத் தவரவர்க் குறுமிசை வெழுதி
சுமைக்கு முன்கொடுத் தடியவர்க் குதவுகற் றுணையே
எமக்கு மிப்படித் தந்தருள் றகுமத்தி சைக்தே (331)

இசைந்த ஹ்ம்மது நபியைநின் றிருமனத் திரங்கி
வசந்தெ ழும்மனம் பொருந்திய பறக்கத்தால் வகுத்துப்
பசிந்தெ ழும்முயி ரனைத்தையு மிகப்படைப் போனே
உசந்த கண்தெரி தாவரு ளெம்மையு முகக்தே (332)

உகந்த நல்லலி பின்முத லெழுத்தினி லுறைக்தே
அகந்தெ ளிந்துநல் லஹ்மதுக் கருஞ்சிறப் பளித்த
சுகந்தந் தாளசேர்ந் தடியவர்க் குறுந்துணை யாகிச்
செகந்த னில்வர விடுத்தவ ரிரங்கெமைத் தெரிக்தே (333)

தெரியு மச்சுட ரொளியைநின் றிருக்கண்ணுற் றெரிசித்
தரிய நட்பஹ் மதுவெனத் திருமுனி லழைத்துத்
துரியு மச்சல வாத்தையுந் தொகுத்துரைத் தோனே
விரிவெ டுத்தகற் கிருபைசெய் யெமக்கினம் விரைக்தே (334)

விரைந்து ஹ்ய்மது நபிமக்க ளனைத்தையும் விரும்பி
வரைந்து றும்மஹ் ரெனும்பல படைத்தவல் லவனே
கரைந்த ழும்மடி யேனின்னே டிரைந்ததைக் கபூல்செய்
திரைந்து பூவில்வக் திரங்கெளி யவருளத் திசைக்தே (335)

தேனு மாவுக்கு நடுவேநின் றினித்தெள் ளமுதே
தானும் நானுமல் லாதவ ரறிவரென் றனக்குள்
மானு மானெடு மருவிய கலைக்குவல் லேரயா
னீமா னில்லிருக் கீடேற விக்குண்மை நவின்றே (336)

கலி விருத்தம்

விண்டனன் மிடிமையு மெலிவு மகலப்போய்
இன்றின முவந்திடு மண்ணிற் புகழ்ந்துனைக்
கண்டனன் கண்டதென் கையுள் வந்துநின்
தொண்டனுக் குதவிசெய் துய்ய நாயனே (337)

நாயனென் றுனையறி வித்த நல்லோர்கள்
காயகற் கிருபை செய்தருளு மன்பனே
பேயனென் தழுதுனைப் பேசிக் கேட்பதைத்
தாயினும் விரையவந் தருளீ டேறவே (338)

வேறு.

பேயோ அலி போமுதல் வெம்பனியென்
றோயாமல் வருந்துளி யுள்ளுருவாய்
சினேநா னேதெரி யாதெமக்கும்
மாயாமுக ரான்கும் வழங்கிறையே (339)

முன்னான்கு முகந்தரு முச்சுடரை
மின்னாக மணந்து மிகப்பழையோ
னுன்னா மமலித்ததி னூடுறவாய்
என்னாலுனே யென்சொல்வ னம்மிறையே (340)

இறைவாவுன தாலும முஞ்சுடருக்
கறைவாய்மஹா மூதென்ற னைத்திலும்வந்
துறைவாயொளி யாலுரு வானவுனைக்
குறைகாண்ப வருங்குரு டானவரே (341)

வேதமுரு வாக விளம்பியசொல்
லேதன்றெ வருமறி யாமலெழுந்
தாதமென விண்ட தெமக்கறியப்
போதந்தரு வாயுயர் மெய்ப்பொருளே (342)

பொருளென்றது புத்தியி னுச்சிதரும்
வெருளென்ற தகற்றி மிகப்பயனுக்
கிருளென்ற தறுத்திரு பார்வைகிறைந்
தருள்தந்தடி மைகொளென் னுண்டவனே (343)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பேயிற ஸூஅல் லாவெனுந்திரு போரழ கான ரூபமா
யாயகற் போத வேத நூலினே டஞ்சிலொன் றாக நின்றவா
ஒவ்வொரு காளில் லாம லேபய லுன்னெடிரந்து கேட்பதைத்
தாயினு முண்மை யாக வேகதி தந்தரு ளென்று மாதியே. (344)

ஆதியோடந்த மேவு காளவி பானது மூன்று கோலமாய்
வேதியர் கண்டிடாம லேதிரு மேலவர் காண நின்றவா
நீதி யறிந்து தேடி யேபயல் நின்னெ டிரந்து கேட்டுள [னே
சோதியென் கண்ணில்காண நீதுணைச் செய்திடேற்றென்ற னன்ப

அன்புறு பஞ்ச பூத மும்புல னைந்துமா றாறு காடியும்
மண்புனல் காலும் வன்னி யும்முயர் வானல்ல வானமானவா
தம்பமல் லாது யானும் வேறொரு தம்பமுங் காணி லேன்மிகத்
துன்பமூ டற்றுக் காணவேதுணைச் செய்திடேற்றென்ற னன்பனே

அம்பர மோடிங் கான வவ்வுயிர் யாவு மமைத்த ரூதபே
ரின்பம தேழுபங்கி லும்நிறைக் தெங்குமோன் ரூகி நின்றவா
என்பொடு மூளை தோல்த சைக்குறுப் பேழு நிறைக்து ரூபமாய்
உன்பர மேவு தொண்டனுகசல் லுதவிசெய் யாங்கள் காணவே.

காணவுங் காண்கி லாம லும்முயர் காரண மான ரூபமாய்
ஆணிலி பெண்ணு மேயலாமனின் றனைத்தையு மாளு மன்பனே
சேணிலு மாகி றத்தி லும்மொரு நீங்குவ ராமற் காத்தெமக்
கூஞெடைக் காளு மமுத மீந்துன துதவிசெய் யென்ற னித்தனே.

நித்தனே யேனிப் போது யானினைத் தனையு நீத ராமல்நின்
றத்தனென் றென்று மேதுக் காயுனக் காயிரம் காமஞ் சாற்றினுய்
பித்தனே நீபொலாத யானும்நின் பேர்சொலக் கேட்டிரங்கிலாய்
கத்தனே யரன்ப டுந்து யர்கண்டுன் கல்பிரங் காத பாவியோ.

வேறு.

ஏனே நித்தனே நீயே னக்கிரங் காம லெத்திசை யும்நிறைக்
தான மெய்ப்பொரு ளாய்ம னித்தரோ டால மொக்க நின் றூடினும்
யானு மிப்படி கோவ தற்கெழு மானி லத்திதிலுள ளோககைத்
தீன முற்றிகழ் வாரெனைத்தெரிக் தேழைக் குற்றிரங் கேகனே. 350

ஏதுங் கண்டிகழ் வாரெ னப்பய லியம்பக் கேளென் னிறைவனே
ஆருங் கண்டறி யாரு னைத்தெரிக் தடியனுள்ளத் துணர்க்துபின்
ஓதி யுன்னுடி ரக்த ராசியத் துள்ளுண் மையு முணர்க்திலாய்
ஈது கண்டுதொ ழாதெ னக்கிழி வென்ற தகற்றிடிங் கேகனே.

எனக்கல் லாமலு னக்கு மேயிழி வில்லை யென்ற தறிக்துநீ
மனுக்க ளானவ ருக்கு வருசம னத்தி ,னுண்மை வருத்தியே
எனக்கு மாதி விளைக்க வும்மறி வோடு னைத்தெரி சிக்கவும்
சினக்கு காளு னிணக்க முக்தெளி வும்மெ னக்கரு ளத்தனே.

அத்த னேநீ யடக்க மாக வமைத்தராசிய தேசிகா
சுத்த கோஞ் செழுத்தொடஞ்சு சுழிக்கி ளொன்று திரண்டதோர்
பித்தஞ் சேர்பன வாத மஞ்சு புலங்கள் பூதமென் றூனதோர்
எத்த யானின்ப தம்மென் றேத்தி யிறைஞ்ச சிவம்மூளத் தாதியே

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆதிகா மத்திருளி லவிபல்லா தப்புகழை
யாவர்தா னுற்ற றிவதென்
ரோதிஆ ஷிக்கிறஸூ லேநீமெய்ப் போடுரு
வாயமைத் தாளு மிறையே

நீதிதா னிப்படிப் போலவன் னெஞ்சினில்
நியத்தை நிறைவேற் றுலகில்
நீதிலா வுத்தமநீ தாரெமக் கிந்திடொரு
நீங்குதா னற்ற பொருளே. (354)

பொருளேயா வர்க்குமுயர் பதவிநே ரிட்டவர்கள்
புகழுநீ கைக்கொண் டுலகில்
அருளலா ததற்கழகுன் னருளினல் வைத்திடவு
மடியே னெதுக்கு மெலிவேன்
வெருளினு லுற்றவினை விலகொணு மற்பயனு
மிகரோவத் தகுதி யோநெஞ்
சிருளொணு தெப்பொழுது மெளியனே வற்றிடகல்
வினிமைதா றப்பி ருகிமே. (355)

இறப்பிரு கிமேமிக விரங்குனையல் லாதெளினுக்
கொருவர் தஞ்ச மில்லையான்
அறப்பிழைசெய் தாலுநீ பொறுத்திடும் தாலுனை
யடக்க முள ஙாய கனியேன்
றறப்பினெடு பேசியென் னுளத்தில்மிகு கோவதையு
முவமித்திட வுன்ற னருளாற்
சிறப்பதிக வாழ்வுகதி தக்தெமையீ டேற்றுபல
திக்குமர சாளு மிறையே. (356)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இறையோர் சிரசி லெழுக்தருளி
யிலங்கு மிறஸூல் கயினுரை
மறையோ ரறியா மெய்ஞ்ஞான
வடிவா யொளிவில் வகுத்தவனே
தறைமீ தடியேன் மிடையாலுன்
றன்னை மறந்து தளர்வேனே
சிறைபோய்த் தெளிய மிகவிரங்காய்
தீனே தேவர் சிகாமணியே (357)

தேவர்க் கரிய குலக்கொழுந்தே
தெளிவே புவியிற் றிருமறையோர்
தோவற் றரிய சுடரொளியே
துணையே யடியேன் வினையாலுன்
னேவற் கிசைந்து மொழுகாம
லெளியேன் மெலிவ தறிந்துனது
காவற் பெறநின் னருள்தருவாய்
ஹக்கே ககனர் சிகாமணியே (358)

ககன மதினக் தரமேழுங்
கைலா சத்தோ டாள்பவனே
சிவனென் றியம்ப வரமளித்த
தெளிவே யடியேன் றீவினையாற்
புவனி லுனைத்தொ ழாக்கொடிய
பொல்ல னென்று பிழைபோக்கி
மவுனக் தாவக் தருள்புரிவாய்
வடிவே வானோர் சிகாமணியே (359)

வானோ ரறியா வடிவுருவாய்
மறைநான் குச்சி பழுத்திரஸமில்
தீனே விளங்கு மெய்ஞ்ஞானச்
சென்னி பழுத்தொ ழுகுங்கனியே
யானே யுனக்குப் பிழைசெய்தே
னெனவும் நகையா துனதருளீ
மானி லானோ ரவர்பொருட்டால்
வழிசே ரமரர் சிகாமணியே (360)

அமரர்க் கரிய கிருபைவினைத்
தருளா னந்தச் சுடரொளியாய்த்
திமிர்தத் திரைக்குள் ளொளித்துநின்ற
தெளிவே யடியேன் றீவினையாற்
குமுத பனிரண் டெழுத்திலொரு
கோணி லுனைக்கண் டிலனென்றே
யமிர்தக் கலசத் தமுதடியேற்
கருள்வா யண்டர் சிகாமணியே (361)

அண்டர்க் குனது சேவடியை
யளித்தா யெவர்க்கு மறிவிலதாய்த்
தொண்டர்க் கரிய பதம்விளைத்த
துணையே யடியேன் றீவினையால்
வண்டர்க் கொல்கி யுனைமறந்து
வணக்கா துலகில் மெலிவதறிந்
தென்று மெளியேற் கிரங்கியருள்
தருவா யிமையோர் சிகாமணியே (362)

இமையோ ருனது திருவுளத்துக்
கிசையு மஹாஉம துக்கிரங்கிச்
சமையா சமையம் வடிவாயென்
றனக்குள் ளுறைந்த தானவனே

அமையா தேட்டி லெழுதிமுடி
யாமதன் றுயர மறிந்துலகி
லமைகா ணரிய பதவிவிளைத்
தருள்வா யும்பர் சிகாமணியே (363)

உம்ப ரினத்துக் கடங்கரிய
வொளிவா னக்தச் சுடர்விரிந்தே
எம்பரி டத்தி லெழுந்தமணிக்
கிறஸூ லெனும்பே ரீந்தோனே
வம்பர் தமக்குன் னருள்பரவ
வழங்கு மதுகண் டடியனுளம்
வெம்பு தெனக்குன் னருள்தருவாய்
வேந்தே விண்ணோர் சிகாமணியே (364)

விண்ணோ ருளத்தி லடங்காத
வெளியாய் வெளிக்குள் ளொளியுருவாய்
மண்ணோ ருளத்தில் நிறைந்திலங்கும்
வடிவே யடியேன் றீவினையால்
உண்ணு ருளத்திற் படுமதனை
ஆலுத்தர் தமைப்பின் செல்லாம
லெண்ணு தெனக்குன் னருள்தருவா
யிறைவா வெவர்க்குஞ் சிகாமணியே (365)

எவர்க்கு மனத்தி லடங்காத
வெழுத்தி னிறங்கா ரிருளுக்குமுன்
சிவக்குங் கறுக்கும் பசித்துனக்குட்
சேர்ந்து வெளுத்து மஞ்சனித்து
மவணி லஹதென் றவ்வலில்நின்
ருகி றஹுமா தானவுன்னை
இவணி லறியக் கிருபைசெய்வாய்
வேந்தே மேலோர் சிகாமணியே (366)

மேலோ ரறிவா லறிந்துதொழு
மெய்யா சனத்தி லெழுஞ் சுடரே
காலோ டெழுப்பிக் கனல்மூட்டிக்
கருது மவாக்கொன் றூனவனே
காலா றெழுத்துக் குடலுயிரு
கடுவுக் தெரியா தெமக்கமுதம்
பரலோ டரிய பலன்றருவாய்
பரமே பரம சிகாமணியே (367)

பரம விளக்கே பார்த்திபனே
　　பழையோர்க் குதவும் பழம்பொருளே
கரமத் துணையைக் காண்பவர்கள்
　　கமல விளக்கே காவலனே
உரமப் பொருளே யுனைத்தொழுவோர்க்
　　குதவும் பொருளே யுலகிலுன்றன்
தரும வடியேற் கிரங்கியருள்
　　தருவாய் சருவ சிகாமணியே (368)

கலி விருத்தம்.

சருவகுரு வாய்ச்சருவ சமயவடி வாய்நின்
றுறுவருனைத் தெரிசிப்பவர்க் குறுந்துணைசெய் வோனே
சிறுவன்மனப் பீடையுமென் றீவினையும் போக்கி
உறுகரும முரைசெய்தெனக் குண்மையருள் வாயே (369)

உண்மைதரு மேலவெளிக் குள்ளோசை பரந்தே
செம்மையுறு முள்ளொளிதி ரண்டிடும தற்குள்
நன்மைதரு நான்மறைக் கின்றமுக நான்கும்
என்னளவில் வைத்துநகின் றிரங்குறஹு மானே (370)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மானுரு குங்கலை மாசுக என்றுனை வந்துதொ டர்க்ததைநீ
தானறி யும்படி யாரறி வாற்குறை சற்று மிலாதவனே
தேனுரு குங்கனி பேசிய நான்மறை தேடிய தீனபியை
யானறி யும்படி நீதரு வாயிக மூதெனை யாள்பவனே (371)

ஆளுவை யென்றுனை யாருமவ ணங்கிட ஆலம டங்கலையும்
வாழுவை யென்றுயி ரானதெ லாம்நீவ குத்தெமை யாள்பவனே
மீளுவை யென்றுரை பேசிய நான்மறை விண்டமு கங்களையான்
கோரமையெ னக்கறி விக்தருள் நீமொரு குற்றமி லாதவனே (372)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

குற்றமில்லா தலிபையுமூன் றலிப தாக்கிக்
　　குதறத்தா லஹுமதுக்கன் பாக நீயும்
அற்றமில்லா தளித்தபெருஞ் சிறப்ப னைத்து
　　மாரறிவ ருனையொழிந்தென் னருமை யோனே
பித்தனெல்லாம் பகர்வனென்று மறியேன் பாரிற்
　　பெரியோர்கள் பொருட்டாலென் பிழைகள் போக்கிச்
சித்தமுன்னாய் மகிழத்திரு வடியைக் காட்டேன்
　　றீவினைகண் டிரங்கியிடேற் றெவர்க்குந் தீனே (373)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

எவர்க்குந்தீ னெனஅலிபு மூன்றிலங் கோரெழுத்தி
லெவையு மாய்வின்
ணவர்க்குந்தா னறியாம லொளித்தஹூம தோடருளு
மருமை யோனே
துவர்க்கத்தா னில்லையென வுற்றடியேன் மண்ணில் தொழு
துனைக்கேட் பேனத்
தவக்கத்தா னகற்றியுயர் பதவிதரு வாயெவர்க்குந்
தலீலுள் ளோனே (374)

கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உள்ளநாயனே யென்னை நீயெனக் குள்ள வாண்மை யளித்திலாய்
ஒளிக்கண்ணால்நீ யெனைத்தெரிந்து மென்விழிகள் கொண்டிட
[நின்றிலாய்
வெள்ளமாரி விலக்கில்விட்டு மென் விழிக்கண்பார்வை விலக்கிலாய்
வெறியருக்குநீ பவுசளித்தவன் மிடியனுக்கருள் தருகிலாய்

வள்ளனீதி யெவர்க்குமீந்தவன் வரிசைநீதி வழங்கிலாய்
மாலெழுந்துயர் வானிறைந்தவன் மாலளித்தெனை யாள்கிலாய்
அள்ளுநாயகர்க் கமுதளித்தவ னடியானுக்கருள் தருகிலாய்
அன்பனேநீ நடத்துநீதி யநீதியாக விருந்ததே (375)

இருந்தகாளி னுறைந்தமாய்கைமூ டென்னுங்காரிரு ளாகநின்
றெழுந்தராசத முள்ளதில்லையென் றியங்கிடாதுனை யாய்ந்துநீ
அருந்தகாலி லெழுந்தநின்றிரு வானதூக்கமென் னுள்ளகத்
தருவரூப சொருபமாதி யநாதிசோதியொன் றாகவே

வருந்துமாஷிக் கெழுந்தகாம மனக்கண்ணூடி னூடுபோய்
மாவுந்தேனொடு பாலுங்கூட்டி வளர்த்ததீப முஹம்மதாய்
முருந்து ஞானந் தெளிந்துன் னுச்சியில் முங்கி வெம்பனி யானதை
மூடனென்றெரி சித்திலேனெனை முழுதிரங்கிடென் னித்தனே

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நித்தனுள துட்டெளிவில் நிற்பவர்தம் மெய்ப்பத
நினைப்பவ ருனைத்தெ ரிவதென்
றெத்தனை மலக்குக ளெனக்குனக் கெனத்தருக
வென்றுனக்குள் மற்பொ ருதல்கண்
டுத்தம மனிதர்க ளுளத்தினி லிருப்பதலா
லுங்கட்குள் நிற்ப திலையென்
றத்தநீ செப்புமொழி தப்பிலைப காவுன்ற
னடியனுளத் தெழுந்த ருள்கவே (377)

பேயவிபு சீனுக்குமுன் னேபிறகோ காபதில்
விளைக்கதெனே யாளுமிறையே
காயடியே னிவ்வுரை கவிலவல னேமுற்று
நாவெழுமோ நல்லோர் கள்முன்
போயவர்கள் மெய்ப்பதம் பணிக்தவ ரெனக்குரைத்த
புத்திகொ டுனைத்தெ ரிக்துகல்
ஆயபுக ழாதியுக்தீ தாறடியேற் கிக்திடுன்
காவல்கொண் டேவல் செயவே (378)

ஏவல்வில கல்குபிரி டேற்றமிகு பாவமின
தென்றுன் னிதயத்தி லுறையும்
காவலர் தாமுங்கம லத்துளிஷாக் கின்றது நீ
ஹக்கவிபு லாமீ மெனமுன்
ஆவலுற் மாதமுள் ளோவுமி ரடைக்ததுஹவ்
வாவி னுக்குள் ளோவி ளைக்கதென்
காவி லுறை போலுமனக் கண்குளிர நின்றருணல
லோர்தொழும் நமக்கிறைவனே. (379)

வேறு.

இறையவ னிறையுன தடிதொழ வருமவ
ரிருதய மிலுறை பவனே
மறையவ ருனதருள் தெரியவரென் றவரடி
வருடிய திருட னுளமே
லுறைவது மஹகரே மறையர்வக் துறுகிகொ
டுதவுமென் றனையு மூணராக்
குறையது பெறுசேவி குருபர னருள்பயல்
கொடுவர நினைவு ளருளே (380)

அருளிறை வனேமறை தருமுக மறுவகை
யதிலொரு முகமஞ் சுடராய்
இருளொரு முகம்வெளி யொருமுக மிருதய
மெனுமொரு முகம தெனதுள்
வெருலற வருமலு கறைனயுணர்க் துனதடி
விரும்பிடி லுறக்து ணேயே
மருளற வருமுயர் மவுனமோ டெமக்குகல்
வரிசைதக் தருளு வாயே. (381)

வேறு.

தருகல வுறுகதி தலீ லுயர் பதவியுக்
தலைமையும் வெகுபல னுக்
திருமுக மெழுதிய கிருபைகொ டிருவிழி
தெரியுகல் மஹகறெனுக்

குருபர னிருதய கமலமுள் ளுறைவதென்
குணமதை நினைவி லுறக்
கருவினைக் துனதடி தெரியநீ கிருபைசெய்
ககனர்கள் தொழுமிறையே (382)

இறையனை யலதுவே றிலையெனு மிலைளஹினி
லெழுதிய கலமெனதுள்
அறைதனி லுருகிநின் றருவமோ டுருவினைக்
தரிஹரி சிவகமவென்
றுறைவினில் மனுகறங் கொருகோடி தனில்விரைக்
துனதருள் தெரிபவனே
தறையினி லெனதள விரங்குன தடிதலை
தருமன தொளிபெறவே (383)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பேயெனநா ருயிரமவின் ஞேர்புகழ நின்றவுனை
மேல்வெளியங் கின்ற தல்லால்
காயிலைகள் பூமரமில் லாதிருளி யங்கரிய
கானகமங் கின்ற தல்லால்
சாஹிபுவி லுன்னறைநீ தானுறையுஞ் சட்டையது
தானறியச் சற்கு ரென்னுள்
ஆவிதரும் நுனியில்விளக் காகவிரைக் தோடிநீவக்
தாளுவையெக் காளு மாசே. (384)

வேறு.

அரசடிமை யாளுமதற் கழகுளநா லடியவருக்
கணிக்கதிரு வாய முதமீக்
திரசமா லெளுக்துகில்தக் திரணப்பொலி வுறஹ்மத்தோ
டெனைமுழுதும் மருவு மிறையே
பரிசறவெக் காளும்வெகு பதவிதர வேணுமுயர்
பரிபுரண மாக வருகல்
துரிசஹுஉம தோடுபயல் துதிபெறவிண் ணோரளவுக்
துணைமனுக நீக்த ருள்கவே. (385)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஈக்தகற் குடையு மூலத் தெழுஞ்சுட ரொளியே காவில்
பாய்க்தருள் தருமெய்ஞ் ஞானப் பராபர சக்தி தானும்
ஆய்க்தகல் லாதி சோதி யகாதியென் றடியேற் கின்பக்
தோய்க்தமு தொழுகுங் காமத் தொளிசொரிக் தருள்வல் லோனே.

வல்லப மதற்கு மேலோர் மனதுக்கு மிடைமி னுள்ளா
டில்லற வெவர்க்கு மெட்டா திருக்குமொன் றிங்கு வாய்த்த

கல்லற மதற்கொப் பாக கான்மறை தனி லுங் காணுச்
சொல்லற மதற்கு ளின்பஞ் சொரிந்தரு ளருந்துய் யோனே. (387)

துய்யகற் கமல மீன்ற சுடரொளி யதனிற் பாய்ந்து
வையக மதனி லோடி வான்கடந் தறுஷின் மேலோன்
உய்யகற் பதத்துக் காளா யுலாவிகின் றிமைக்கு முன்வந்
தய்யனென் றுனது தீதா றடியவர்க் கருளல் லாவே (388)

கலித்துறை.

அல்லா வெனுமெழுத் தெங்குதித் தேதி லடைந்தனெஞ்
சொல்லா மறைபடித்தென்பய ஞெஞ்சூ லறிசுற்றியே
வல்லான் மணிமந் திரமீன் றுவந்த மலுகறெனு
கல்லா தரவீந் தருள்வா யெமக்கென் றும் காயகனே (389)

காயன்மே லாயிர மாலறு கான்கிலொன் றுகத்திரு
ஆயிரம் வாழ்வக லாதவ னேயெம்மை யாள்பவனே
காயமு மாவுயி ரோடுனைக் காண்பதற் குன்னுதவி
கேயனே நீதரு வாயடி யேற்கெந்த கோமுமே (390)

மேலரம் பதம்விட் டறுஷுக்கு மேல்மிகு றுஜிவுன்றன்
காலாம் பதந்தெரி சித்துரை பேசிய கம்மிறஸுல்
பூலாம் பசிந்தசெந் தேனும் புசித்ததில் மிச்சமதைக்
காலோ டெமக்குண வீந்தருள் நீகலங் காதவனே (391)

கலங்கா திருதயக் கண்ணுடிக் குள்வருங் காரணங்கண்
டலங்கார மாயெங்கு மாள்பவ னேயெனக் காதரவாய்
மலங்காதே நீயென் றும் வந்தெனக் கேவலக் கைதருநற்
பலங்காண்ப தென்னைவிட் டேகாமல் தந்தருள் பார்த்திபனே 392

பார்த்திப னேபர மானவ னேபடைத் தெவ்வுயிர்க்கும்
பூத்துமி ரானதெல் லாமறி யப்பொது வானவனே
ஆர்த்தெழும் பாவமோ டரபத்து கோயணு காமலென்னைக்
காத்தவ னேபிழை தீர்த்தருள் வாயுன்னைக் காண்பதற்கே (393)

கண்டதெல் லாங்கன வென்றுண ராதென்கடுஞ்சலிப்பை
விண்டமு தேற்றியுன் னோடுரைப் பேனந்த விண்ணப்பங்கேள்
வண்டரென் னோடு பகை செய்திடாமல் வணங்கிட கல்
தொண்டர்கள் தேடுந் துணையெனக் கீந்தருள் துய்யவனே. (394)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வினைமிடைகள் தீர்ந்துமிடி வெகுபிழைகள் பாவம் நீ
விலகுருபி ராபத் துங்காத்
தனைவருமென் னேடுபகைத் தணுஹுமதை நீவிலகென்
றடியவர்கள் தொழுமி றைவனே

உனைமிகுதி தேடியெனக் குளசலிப்பும் கோவுமுன்
னேடுரைசெய் தேத்திப் புகழ்வேன்
எனைமிகுதி நீதெரிசித் திறஹூமத்தொ டாபியத்து
மிரணப்பொலி வுந்தந் தருளே (395)

வேறுங்கான கத்திடைவி ளைந்தூச விட்டுநீ
விரைந்தாடி நின்றுறையுமா
சறுங்கால தற்கிடையெ மூந்தேயி ஸூக்குணவு
தண்டாம ரைக்குள் ளுருவாய்
உறுங்காம ராசதமு னைத்தொழு முனநீயுன்
னுள்ளத்தே யுனைத்தொ ழுமாதலால்
நறுங்காத லைத்தருமந மக்கார மீந்தருள்
நலத்தோடெமக்கி றைவனே (396)

எனக்காக நின்றவ ருளைக்காண்ப ரென்றுநீ
யிசைத்தா யெழுத்தா ணியோ
டனக்காதல் கொண்டு நீ யமைத்தா யனைத்துயி
ரதற்கான நல்ல றிவையீந்
துனக்கான நற்றவ மினித்தேடு மென்றுநீ
யுரைத்தா யெவர்க்கு மிறையே
மனக்காவல் தந்தெனை வகுத்தாய் நமக்கார
வாசலி லுனைத் தெரியவே (397)

வேறு.

தெரிவுறு மலிபெழுந்து திருமன மதிலுறைந்த
சிவகுரு வடிவனந்தமென்
றரியமறை யுஞ்சிவந்த கலமெழுதி லதிலென்று
னஹூமதோ டணுகி நின்றுலாம்
விரிவுறு முன துசந்தம் விளங்குநல் மனுகறென்முன்
விரையவந் தணுக விண்டு தன்
புரியுறு விழிகளுன்றன் புதுமைகள் தெரியவென்றன்
பிழைபொறு பெரிய நாயனே (398)

பெரியவ ரகவகிந்த பெருமைகொ டுனதுசெல்வம்
பெருகுதொண் ணூறே டன்பதும்
அரியதிரு நாமமென்று மஹூமதுயி ராகவந்து
மடியவர் தெரிய நின்றதால்
வரியிரு வகையுமென்றன் மனதினி லெழுந்துமந்த
வரிசைகோ டமைசெய் துன்பதாம்
பரிதரு மனுகறென்றண் பதுமமீந் திடநில்லென்று
பழையவர் புகழு மன்பனே (399)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

அன்பனென் றுனைவிண் ணோர்க ளடிபணிக் தேத்து மக்கா
ளென்படு முனது காம மேயொடு ஹேயும் லாமும்
இன்பமென் றெழுகிப் பாய்ந்தெம் மிருதயக் கமலக் கண்ணால்
கம்பிவந் துன்னைக் காண கடுவனே துணைச்செய் வாயே (400)

துணைநீயென் றுயர்மெய்ஞ்ஞானத் தூக்கத்தோடொளிகண்டுள்ளத்
தணையென்ன ரூப ரூபத் தருஞ்சிலை வளைத்த காமக்
கணைவிடுத் துயர்மெய்ஞ் ஞானக் காயமில் லாகி மகானில்
பிணைமுனின் றுனையான் காணப் பிழைபொறு சமதுல் லாவே ()

வெண்பா.

சமதெனுமூ டவ்விருளாய்த் தானே ரணுவி
லஹறெதன அவ் வல்நா றஹம—தபறெனநீ
வித்தாகி இறுமரமாய் விரிந்துபூத் துக்காய்மேல்
கொத்தா யிரங்கனியே கூ (402)

கலித்துறை.

கூவென்ற ராகங் குறையாமல் நின்றுன் குதுறத்தினல்
கஃவென்ற காமத் துயரம்பொ ருமற் கமலத்தினுள்
இயென்ற ராகங் கிளர்ந்திற ஸூலுன்னைக் கிட்டியபின்
கோவென்ற தாலெமக் வாயுயர் கற்கொடையே (403)

கொடையா லுயர்ந்திற ஸூல்கபி னுரைக் குதுரத்தினற்
படையாத பேரதொன்றை யும்படை யேனென்ற பாரசத்தம்
அடையா தறபத்து காலாறு காண திலொன்றடியேன்
சடையாமல் தந்தரு ளீமான் தலையடி தானவனே (404)

அவனென் றுனைநீ யறிவா லறியுமுன் னவ்விருளாய்ச்
சிவனென் றெழுந்தூக்கத் துள்ளோ ரொளியே தெரிசித்தபின்
பவனென் றெழுநீ ஹகிகத்து கின்பர மத்தில் கின்
றெவனென் றுயர்ந்து தெளிந்தோனே தந்திட மானெமக்கே (405)

என்னை வந் தாதரித் தோருனைக் காண்பதென் றெம்மிறஸூல்
தன்னைவந் தாதரித் தேமொழிந் தாயது தப்பிலையென்
றுன்னைவந் தாதரித் தோர்க்குமென் னேடுற வானவர்க்கும்
பொன்னேவந் தண்டுறற் பேறெமக் கித்தருள் புண்ணியனே (406)

புண்ணிய னேபொறை யுள்ளவ னேபுவி யோர்கள்மனத்
தெண்ணிய காமத் தெழுஞ்சுடரே நிறைந் தெவ்வகையுந்
கண்ணிமை யோடுருக் காண்பது போர்கலக் தாள்பவனே
தண்ணிய பாவிக் கிரங்கியுன் னற்பதந் தந்தருளே (407)

வேதத் துவக்கம் விரிவா யனைத்தும் விளங்குமுதல்
ஆதத் துவக்க மஹாமத ரோடுயி ரண்ணுமுன்றன்
பாதத் துவக்க மறிந்தரி யாப்பஞ்ச பாதகனுக்
கேதுக் கிடுக்க ணினித்தர வேணும்றஹ் மத்திரையே (408)

இரவந்த மானுக் கிருகண்பொ ரூக்கலைக் கும்மிறஸூல்
உரவந்த வாளர்க் குயிரிந்த மானிடர்க் குள்ளுடலுங்
கருவிந்த மாதிக் கருள்தரு ஹக்கனே நின்னடியேன்
சொருவெந்த காளுந் துணையன்றி வாழ்கவென் றுய்யவனே (409)

துய்யவ ராவி துலங்குமெய்ஞ்ஞானச் சுடரொளிக்கென்
னுய்யிரு காதை வளைத்துப தேசித்த வுள்ளுயிர்க்கென்
றய்யரு ளாவிக் கஹாமதுள் ளாவிக் கருளடியேன்
வெய்யிரு பார்வைக் குயிரினைத் தந்திடென் மேலவனே (410)

மேலத் திசையி லெழுங்காற் றுதிர வெயிலுமெடுத்
தாலைக் கடந்தெழு மக்கினி யீரலு மந்த்ரகிணம்
மூல மணிப்பித்து மப்பினில் மூளையுஞ் சேர்ந்துனது
காலைப் பிடிக்கத் தலையெனக் நீத்திடென் காவலனே (411)

காப்போ ரழகுங் கடலதி னோசை ககனமதின்
ஆர்ப்போ டனலெலும் புஞ்சசி வேருமி தஞ்சுமொன் றாய்ப்
பார்ப்போ ருளத்தில் பனுவாய்த் தெரியும் பரா பரத்தின்
தேர்க்கா லருளைத் தருவா யெமக்கொரு தீங்கிலியே (412)

இல்லையென் றெண்ணு மியங்கரி தான விடையிலொரு
தொல்லையென் றெண்ணு மியங்கா தெழுந்த சுபசொருபத்
தெல்லைகண் டுன்னை வணங்கா தெளியர்க் கிரங்கிகெடுக்
தில்லையென் றுள்பவ னேதரு வாய்நின்றி தாறெமக்கே (413)

எனக்குயர் ஞானச் சுடரொளி யீந்தரு ளெம்மிறையென்
றுனக்கொரு காம மறிந்துதொ ழாம னுழன்றடியேன்
சினத்திடு மாந்த ரிடத்தேகை யேந்திச்செல் லாமலுள்ளத்
தனப்புறுங் காத லினைத்தர வேணுமென் னுண்டவனே (414)

வினையச்சம் பாவ மிடிமைகண் ணேறு மெலிகுறையுந்
தனையச்ச மானோர்க் கணுகாமல் நீயுந் தவிர்த்து மண்ணில்
எனையச்ச மாமவ ருக்குமென் னோடுற வானவர்க்கு
முனையச்சம் பூணவுதவிசெய் வாயென்று முள்ளவனே (415)

உள்ளெழுத் தஞ்சு முடலெழுத் தேழுசம் முள்ளுயிரில்
எள்ளெழுத் தேக சொருபமென் றோங்கு மிருதயக்கண்
வெள்ளெழுத் தஞ்சும் விழலெழுத் தென்றதை நீக்கிவரும்
வள்ளலுக் கஞ்சு வடிவீந் தெமக்கருள் வல்லவனே (416)

வல்லப மென்ற தனைத்துமெய்ஞ்ஞான வடியுருவத்
தில்லெழுந் தேக சொரூபமென் றீதர் இழிவுரைத்தோர்
புல்லரென் றுன்னைத் தொழுதாலும் பொய்யிரு ளேகிவரும்
கல்லற மென்றதெற் கீந்தருள் வாயுயர் காயகனே (417)

காயக மாயெவ் வுலகுக்கெல் லாம்வரு கல்லுயிரென்
றேய்வொரு காளுமில் லாகந்தி யோதுனருள்வெளிக்குள்
மாயவன் காவல்கொ டாள்பவ னேமதி யாமலுன்னைப்
பேயனெந் தேது சொன்னாலும் பிழைபொறேன் புண்ணியனே

புண்ணிய பாவப் பிரளய முற்றும் பொருளுளத்தில்
எண்ணிய காமத் தாளத் தொளியி லெவர்க்குமனத்
தெண்ணிமெய்ஞ் ஞானத் தெரிசனைக் குள்ளுனைத்தேடியிரு
கண்ணிமை யாதறிந் தெற்கிரங் காய்நீஹுக் கானவனே (419)

ஹக்கா மனித்த ருளத்தே யுறைந்தகென் காரணத்தால்
கக்கா தினித்த கறுமாம் பழக்கை கவின்றெவரும்
சிக்கா தருந்தக் கடனைக் தீங்கிலே தேறுமனச்
சக்கா னதைவிட் டுனைக்காண நின்றருள் தானவனே (420)

தானா யெழுந்து தவத்தால் நிறைந்துநின் தற்சொருபத்
தேனா றெழுந்து திருவாய்ச் சுரந்தகற் றெள்ளமுதை
கானாரு காத கபிதான் மொழிந்துன்னை காடிவந்தேன்
ஆனாலு மந்த மணமீந் தெனக்கரு ளாண்டவனே (421)

கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆளுநின் னருமை யாரறிந்திடு வராலமென்றுலதெவ் வுயிர்கள்கண்
டசையா துன்னருள்கோ டஹுமதஞ்சுரு வாணியானதை யறிந்து
ருள்நி றைந்துதவ ருமலெங்குமர சாளுநின்தலீ லாகவே [நின்
தலைமேலுவந்தறி வாயுவந்துநீ தயவாக நின்றெள தயிருடம்
பேழுபங்கிலுநீ யுறைந்தவெங்கதி ரெழுந்தரூபசொ ரூபந்தெரிந்
தேழைவந்து நினேடிறைந்ததென் றிக ழாமல்நின்றெனள விரங்கிநீ
வாழுமுன்றனிரு பாதமும்வடிவும் வரிசைநின்றிரு வமுதமும்
மனமுஞ்செங்கமலத் தருளுந்தந்தென்னை மருவவந்தரு ளன்பனே

வாவுகண்டடியன் மன துகொண்டுனது வடிவுகண்டுபல வரிசையால்
வளையநின்றரிய பழையகன்றிதரு மலரலர்ந்துனடி வருடியே
உகவுநின்றபொருளுனையொழிந்துவே றுலகிலில்லையென்றுளமகிழ்ந்
தொளிதிரண்டருவரூபமென்றதையுள் ளுயிரறிந்துடலம்வெருவிட
இரவுகந்தம்வெயி லிருவர்சந்தமதி லெழுமிரண்டினை டுடுவினம்
இருகணைந்தவெளி தெரியுமந்தவிருள்தெரியுஞ்செங்கமலத்திருவிழி
விரைவோ டெங்கு மொளி தெரியநின்றுபல விபரமென்ற றிந்துநீ
மிகுதியென்றனெடுமருவவந்துனருள் விரைவொடீந்தருள் வேந்
தனே

கட்டளைக் கலிப்பா.

பிஸ்மில் லாஹிர்றஹ் மானிர்ற ஹீமென்றும்
வேத காயக னஹம தொளியதில்
கொசுவிற் பாதி பகுக்திறை யோனக்தக்
குவலை யம்பதி னெண்ணா யிரங்கொடு
வசும் னும்பதி னெண்ணா யிரமகத்
தண்ட ரும்பய காம்ப ரடங்கலுக்
துசும னனவ ராளு முலகையும்
சொர்க்க மும்மதில் மெய்ப்பொடுண் டாகையால் (424)

ஆவென் றுஷிக் கெழுக்திடு மாழிபி
லன்பு கொண்டொரு யேஅலி பாகுமுன்
ஏக னயன் கிருபை கொண் டாழ்கட
லில்லல் லாவென் றெழுக்திரை யோசையால்
ஹீயென் றேகன் கிருபைபெ றும்மொலி
கேட்டு ஸீயென் றெழுஞ்சுட ராகையால்
தாவென் றேவருஞ் சங்கினி டத்தொரு
தாள மோங்கித் தனியனைத் தேடுமே (425)

வெளி விருத்தம்.

சேகன கற்பெரி யோர்களி மானொடு சென்னத்தை தெரிதல்
சாலிகு வானவர் கட்குப தேசித்த சற்குருவைத் தெரிதல்
சூபிக ளுக்கொரு சோபன மெய்யிற றஸூல்கபியைத் தெரிதல்
யோகிக ளுக்குரு வானவ னேயெம துள்ளத் தெழுந்தருளே (426)

வேறு

சென்னத்துல கெட்டுமுயர் சிவலோகம தாறும்
மின்னத்துறு கயினொடு முஹியித்தீனுக் கும்நின்
றன்னத்திடு கடமாடிய வரசேயடி யேனுன்
உன்னைத் தெரி சனையுற்றகல் வுறவீக்தரு ளுகவே (427)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அருளுதற் கரிதாய் நின்றங் கவரவர்க் கடிமை செய்யும்
பொருளினைத் தருமெய்ஞ் ஞானப்புகழ்ச்சியின் மகிழ்ச்சி யானோர்க்
கிருளினை யகற்றி யுள்ளத் தெழுங்கண்ணாக யிரக்கண்ணாக
வெருளதை நீக்கி காலாம் விளக்கமீக் தருள்செய் வாயே (428)

செய்யினு மேவல் தக்தை செயலினைச் செய்யுக் தாயர்
சய்யிரு வைகையுங் கூடித்தரித்தொரு ருபமாகிப்
பொய்யிரு ளகன்று ஞானப் பொருளெனக் குபதேசித்த
அய்யரென் னுளத்தில் வாழ்க ஆமினல்லாஹு ஆமீன் (429)

வேறு.

ஆமினென்று னடிபணிந்துன் னருளைவேண்டு மவரைநீ
மூமினென்றுன் கிருபைநாம முழுதும்பேசி நின்றவா
பூமிவானுள் ளவர்கள்பேறும் பொலிவும்வாழும் றஹ்மத்தும்
காமியாது செய்ததுண்மை கழுகொணுதெக்காளுமே (430)

காளும்வன்னி ஞானமல்கி நவின்றவர்க்கைம் புலனுமாய்
மீளுமூலக் குகையிலேழுக் கோணுக்குள்ள வறிவுநீர்
கூழுசெய்யுங் கரைத்துக் காற்சிக்குறுக்கி வார்த்தோரெழுத்தையீக்
தாழுகத்தி யருளலாம லாருண்டெற்குன் தலீலல்லா (431)

கலித்துறை.

அல்லா வுனக்கு மெனக்குநின் னும மடியவர்க்கும்
பொல்லாதவர்க்கு நபிமக்கள் நாமம் புகழெனிற்பொன்
னில்லா தவர்க்கு மிறைவர்க்கு நாளொரு ராசிபென்று
சொல்லா தவர்க்கும் வருமோசெங் கோலென்றுந் துய்யவனே 432

துய்ய மனத்தைக் குருக்களை கோவித்த துர்ச்சனர்கள்
கய்யி லிருக்குஞ்சுண் ணும்பை மடிதனிற் கட்டிப்புனல்
தொய்ய நடக்க வெரித்திடு நீரக்தத் துர்ச்சனர்கள்
செய்யும் வருத்தந் தவிர்ப்பா யெமக்கொரு தீங்கிலியே (433)

தீங்குறுப் பாவங்கள் தேன்கனி யாம்நின் றிருவுளத்தின்
பாங்குறுஞ் சீர்வேம் பினுங்கசப்பாகும் பராசக்திசொல்
ஆங்குறுங் காயத்திலண்ணிடுஞ் சீவனுக் கன்புதரும்
வாங்குடன் காமத் தொழுகையு நீவழு வாதவனே (434)

வேறு

வழுவாநெறி யீமான்றிரு மனமானது நிருமத்
தொழுகானது நானம்மூயி ருடலாமுளத் தறிவின்
றெழுகாலொளி நபியாதமுள் ளிடங்கஃபதுல் லாவின்
புழுகாநறை தருமாமலர் புகழீந்திடல் லாவே (435)

பேயோடொளி சீனும்முயர் மீமோடுலா மலிபும்
ஹேயோடொளி றேநூயர் ஹேவொன்ப தெழுத்தும்
ஓயாதிசு முல்அஃலமென் றுனதன்புறு நாமத்
தாயும்பொரு ளேநீயெமை யாட்கொண்டருள் வாயே (436)

வேதாந்திகள் காணிலதை பிஸ்மிலென விள்வார்
போராய்ந்தறி யாதார்வெகு பிழையென்றதை யிகழ்வார்
சீராய்ந்துள ஞானிக்குயர் திருமந்திர மெனநல்
லாராய்ந்திடு மிறைவா வெமக் குன தன்புதந் தருளே (437)

அருள் தக்தெனை யடிமைகொளு மரசேயறு சுவையோ
டருள்தக்தடி தொழுமென்றரு ளெவனென்றறி யேனுன்
மருளுக்கிட மதிதக்தெழு மனமஞ்செயு மெனதுட்
பொருள்தக்திரங் கிடுகீபல புகழுக்குரி யவனே (438)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உரியவ னுனது காம முய்யுமா யிரத்தோன் றென்னும்
பெரியவ ருறுதி யாகப் பேசுவா ரிதயங் காணர்
அரியகின் ஞம மிஸ்முல் லஃலமென்றருளும் ஞானத்
தெரிவுறு பரமா னக்தத் தேசிகா துணைச்செய் வாயே (439)

மாறுலு கஃப துல்லா வாயலில் வளரு மன்னு
காலுறுங் காலத் தோங்கிக் கருதுமுண் டகத்தால் வென்றிப்
பாலுறும் வலப்பா கேக்திப் பசுபதி பாமனீன்ற
கால்மறை தருமெய்ஞ் ஞான கடுவனே துணைச்செய் வாயே (440)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

யாமன்சி வாக்கென விள்ளாயி ரமாகவா
றெழுதின மகலா மல்கின்
றேயன்சி வாலையமுள் ளாடுங்கண் ணுடியிரு
ளேகும்வி யாதி களறும்
யோகஞ்செ லாதரசோ டாருமு வக்திடுவ
ருலகில்முக வசிக மாமென்
றீவஞ்சி லாவுமிது தானென்றென் னேடருளு
மிறைவா ஜெயக்த ருகவே (441)

தருமெக்த காளுமுன தரவிக்த மானதுயர்
தவீலென்றுன் னருள்பெ ருககீ
வருமக்த ஞானவடி வுருவக்த மாயெனது
மனவிக்தை காத மெழுகல்
குருவக்து லாவியொரு குறையன்றி வாழ்ககபி
குறிகண் டெமக்கிறைவனே
திருகக்தி வாசமுள் ளருளென்று காணவுயிர்
திருமக்தி ரக்த ருகவே (442)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தக்தவேத கான்குமாறு சாத்திரங்க ளானதும்
வக்துபேசு காதரும் வழங்குதேவ ளைக்துங்கண்
டுன்றன்சேர்மை யின்னதென் றுரைக்கொணுதென் னெருவனே
எக்தநாளும் ஹுப்புகொண்டென் னளவிரங்கெக் காளுமே (443)

காணாமைம்பு லங்கள் கம்பொ ணாதபஞ்சு பூதமும்
வாழுமஞ்சு அரவையும் மனத்தினா லொடுக்கிநின்
றாளிதென் றிறைஞ்சகல் தலீல்தந்தீ டேற்றிநின்
றாணாகத்தி யருள்கொடென்ற னளவிரங்கெக் காதனே (444)

இரங்கெக்காணா மென்றுன்னை டிரக்தபேரி னாட்கறந்
துரங்கண்ணாடிக் குள்ளெழுக் துயர்க்தபட்ட ணத்திலோ
அரங்குமாட கூடம்பள்ளி யறையுங்கண் டுன்னஹுமதர்
சிரங்கண்ணாடி யானாயர்க்த தெளிவுதந்தி டொருவனே (445)

ஒருவனன்பு பெருகவென்று மூலகைசேர்செய் திடுமிசன்
முருககண்பு கொடுவணங்கு முதலவாகின் மலரடி
தருவனென்று பெருககம்பி தளர்வர்சேர்வி டாமல்நீ
வருவனென்று குருமொழிக்த வரிசைதந்தி டிறைவனே (446)

வெண்பா.

இறையென் றெவருமுன்னை யேத்தா துனக்கோர்
குறைகளென்ன நன்னிறைவே கோமான்—மறையவர்கள்
வார்த்தை வழாது வழுவா துளத்திலெழுங்
காற்றையணா காதிருந்தக் கால் (447)

கலித்துறை.

காணாங் காமு மரக்தனக் கேன்விழி கள்வனாக்கேன்
பாலும் பழமும் பசும்பிள்ளைக் கேன்பசி யாதெமக்கேன்
பூவு மதுவுங் குரங்கினாக் கேன்பொறி வண்டுக்கல்லால்
ஆலு மரசும் பணிக்கேன் யெமக்கரு ளாண்டவனே (448)

நெடியவ னேநின் றிருப்பாத மென்னாளம் நின்றதனால்
அடியனாக் காதா வீக்தரு ளென்றுன் னளவிரக்த
கொடியே னுன்னைப்போற்றி லன்மிடை யாலக் குறைகளற
முடிவேது மற்றவ னேதரு வாயருள் முக்கியமே (449)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

முக்கிய மானது போறி வாழுயர் முப்பொ ருளைத்தருகல்
எக்கின் மரத்தி லெழுக்தொரு மாமயி லீன்ற பசுங்கிளிமுன்
நக்கிய தேனமு துச்சியில் கெற்றி கடுப்பட நின்றுதரும்
மக்கிய மானாருத் தங்கிடெ மக்கொருமாசனா காதவனே (450)

மாசனா காதவ னேவடி வேவரி சைப்பொரு ளானவனே
ஆசனா காதவ னேயர சேநீ யனைத்தையு மாள்பவனே
ஏசனா காதவ னேயிறை வாயுல கெங்கு நிறைந்தவனே
ஊசனா காதெமை யாரறி வார்நீ யுவக்தருள் மன்னவனே (451)

மன்னவ னேவழு வாதவனேவடி வாமல நபிக்கரசே
தென்னவ னேதெளி வானவ னேதெளி யாரறி யாதவனே
முன்னவ னேமுத லானவ னேயெழு முச்சுட ரானவனே
என்னவ னேதரு வாயெளி யேற்குன்றீ தாறெனை துத்தமனே (452)

கலித்துறை.

உத்தம னேயுனை யாராலுந் தேடி யுழன்றழன்றால்
எத்தல மேதிலென் றெண்ணப்ப டாதென் னிறையவனே
நித்தலு நானுன்னைத் தேடிய நிய்யத்தை நீகபுல்செய்
தத்தலம் நீயெனக் கிந்தருள் வாயுவந் தாள்பவனே (453)

ஆறு மறைக்கா விந்த மஞ்செழுத் தாய்கிளை
ஏழுண் டறுசுக் கெதிர்த்தல மேலவ ரெண்ணத்திலும்
வாழு மரசர் முகத்திலு நூலிலும் வாசத்திலும்
நாளும் வரிசைப் பொருளெனக் கிந்திடென் னயகனே (454)

நாயக னேநழு வாதெமக் கிந்திடு நற்கொடைநீ
தோயவன் வெள்ளை யுடுப்பது மாமணஞ் சூட்டுவதின்
றூயநின் னேவல்கொ டால நபியரு ளாலென்றனுழிக்
கியும் றஹூமத்தும் நீதரு வாயென் னிறையவனே (455)

சந்த விருத்தம்.

இறையுனக்கோ ரலைவுதுக்க மிலையெனக்குள் ளிருவினைக்
கறையகற்றி யறமெரித்த கசடு பொய்த்த குபிறெனுங்
குறையகற்றி யருள்பொதித்த குருமணித்தர் வடிவுகண்
டிறையதற்குள் ளுறெயுமுத்தைநிகரமைத்த கெடியனே (456)
கெடிமைநீதி கெறிகல்லோர்கள் நிலைமைஞான மௌனமே
அடிமைநானின் னளவிரந்துன் னடிபணிந்து புகழ்வனீ
மிடிமைகோவு பிழைகண்ணேறு முழுதும்போக்கி யெனையுவந்
திடுமென்னுவல் தெளியவந்தேன் னிருகண்பாரென் னிறைவனே
இறையுனன்பு தருமுஹம்ம திருதயத்துள் ளொளிதிரண்
டுறையுநான்கு மறைகளோதி யலையுமாந்த ரறியொணுக்
குறைகண்ணுடி தெளிவிடாது குவளையேகுங் கதிரலாற்
கறையகன்ற தெளிவுதந்தென் கவலைபோக்கென் னிறைவனே 458
இறையுனக்குள் ளொளிமனித்த ரிதயமொக்க நிலைவிடா
துறைவதற்கு ளுயிரனைத்து முயர்பனிக்கோ டமைசெய்தே
மறைவெனக்கு ளிருளடித்த மதிமயக்க மணுகிடா
தறையுனைக்கண் டறியமுற்று மருள்விளைத்தி டன்பனே (459)

கலி விருத்தம்.

உன்பிழை யுலகெலா மொழிக்கப் பாரமோ
தன்பிழை கைபடத் தனக்கு கோவுமோ

கண்பிழை மனதினிற் காண நீதியோ
என்பிழை நீபொறு இலாஹி நாயகனே (460)

வெண்பா.

1 அஊதுபில் லாஹியென்ற டைக்கலமா னேனடியே
னெவருமிட றாமறக்கா ரிறையோனே—முதல்வோனே
பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீ மேயுலகில்
துஷ்மனைத்து ராக்கியருள் துஞ்சானே—பசுபாசத்
தாதிமுத லோனே யநாதியே அல்லாவே
சோதியிறை யோய்துணை யானவனே—நீதியாய்
வந்தடிய வர்க்குறுதி மாறாமல் நல்லிரணம்
தந்துதவி செய்தருளுந் தானவனே—சிந்தையுறும்

5 பழையவடி யார்க்குதவும் பழம்பொருளே பாரிலங்கள்
பிழைகள் பொறுத்தருளும் பெரியோனே—விளைவுதரும்
மெய்யடியார்க் கென்றுமுள்ள மெய்யனே மெய்ம்மறந்த
பொய்யடியார்க் கென்றுமுள்ள பொய்யனே—நோய்யடியும்
தூறுந் துலையுந் துவக்கமுடி வுந்நடுவும்
வேருமொரு வித்துமில்லா வேந்தனே—பேரும்
பிறப்புமொரு வர்க்குரையாப் பெரியோனே பேசினுனக்
கிறப்பொருகா லும்மணுகா திருப்பவனே—சிறப்புடைய
அண்டர்தொழு தேத்துமெங்க ளல்லாவே யன்புறுநல்
தொண்டரிட மாகின்ற துல்லிபமே—நன்றிதரும்

10 துய்யபெரி யோனேபல் துக்கமணு காதவனே
வையமுழு தாளுமுயர் வான்பொருளே—பொய்யருனைக்
காணவரி தாகியொரு காலந்துயி லாதவனே
சேணிலடி யார்க்கிரங்குஞ் சீமானே—வீணர்
தவத்தை வெறுப்பவனே தற்பரனே யெவ்வுயிர்க்கும்
பகுத்தறி வீந்துதவும் பார்த்திபனே—செகத்தில்வரும்
நல்லார்க்கு நல்லவனே நாயகனே நின்னடியா
ரெல்லார்க்கு மொன்றா யிருப்பவனே—வல்லபங்கள்
என்றுமழி யாதவனே யேகனே யெப்பொழுதுங்
குன்றாத வாழ்வுடைய கோமானே—தென்டமுறும்

15 ஏழையடி யார்க்கிரங்கு மில்லல்லா வேயெங்கள்
வேளை யறிந்துதவும் மேலோனே—கோழையுடன்
குற்றமணு காத குறைபழுதொன் றற்றவனே
யெத்திசையுந் தானா யிருப்பவனே—வெற்றி பெறும்
மூமினோர்க் கென்றுமுயர் முத்திதரு முப்பொருளே
ஆமீனென் றார்க்குந்தலீ லானவனே—பூமிதனில்

உன்னைத் தொழுதவர்க்கு முன்னமறந்த வினைக்குகல்
மின்னத்துச் செய்தருளு மேலோனே—ஜென்னத்தில்
அறப்பெரிதாய் வந்துதவு மல்லாவே யெங்களுக்குஞ்
சிறப்புடைய வாழ்வுதருஞ் சீமானே—உறப்புடையோர்

20 செங்கமலத் துட்பொருளே திண்ணையில் லானேயுல
கெங்குங்கலக் தீடேற்று மிறையோனே—அங்கம்
உறுப்பில்லா வுத்தமனே யுவமைபழு தற்றோனே
நிறப்பமுற வெங்கு நிறைந்தோனே—விருப்பமுள்ளோர்
இருதயத்தில் நிற்பவனே யெவர்க்குத்துணை யேயென்று
முறுதிகுறை யாதவெங்க ளுடையோனே—அறுதியுடன்
போதமக லாதவனே புண்ணியனே புத்திதரும்
வேதமுத லாகநின்ற மெய்ப்பொருளே—ஆரும்
அறியா தகப்பொருளேயன்பனே நின்னடியார்
நெறிகளாய்க் துணரும் நெடியோனே—குறியான

25 மூலப் பொருளே முகவசீகர மேயுவந்து
காலத் தெழுமடியார் காண்பவனே—மேலத்
தவத்தி விருப்பவனே தம்பிரா னேகுபிரை
அவத்தமதி லாக்குமெங்க ளல்லாவே—தொகுத்துயிர்கள்
அனைத்தும் படைத்திரண மருள்பவனே—யடியவர்கள்
நினைத்ததுதந் தீடேற்றும் நித்தனே—உனைத்தொழுது
கேட்டோர் நினைவைக் கிருபைசெய்வோ னேயடியார்
காட்ட மறிந்துதவும் காயகனே—யேட்டி
லெழுதரிய கோமானே யெவ்வுயிர்க்கு மேலோய்
முழுதுமென் னளவிரங்கு முன்னவனே—பழுதுபல

30 வினைகளணு காதவனே மேலோனே மெய்யோர்
அனைவருநீ தானு யடுத்தே—யுனையெவரும்
போற்றப்பா மானவனே புண்ணியனே புத்தியுள்ளார்க்
கேற்றமுற நட்சித்திரங் கும்பொருளே—தோற்ற
மொடுக்கமுள்ளோ னேயுனக் கூணுறக்க மற்றோ
யிடுக்கமணு காத விறையே—நடுக்கமுடன்
ஈனம் பழுதுபல விடையூறில் லானேமெய்ஞ்
ஞானமொரு காலகழு வாதவனே—வானவர்கள்
நாடிப் புகழுமவர் நாவிலெழுக் தெங்களுடன்
கூடிக் கலந்திருக்குங் கோமானே—தேடிலொரு

35 திக்கிலுநில் லாதவனே சீமானே யெப்பொழுதும்
மிக்கமிடை சற்றுமில்லா வேந்தனே—தர்க்கமுறும்
ஆரணத்துக் கெட்டா வகப்பொருளே யாண்டபரி
பூரணமா யெங்குநின்ற புண்ணியனே—காரணஞ்சேர்

ஏவல் விலகல்குபி ரீடேற்றம் பாவமனக்
காவல்தரு மெய்ஞ்ஞான காரணனே—ஆவலுறுக்
திருவினைக்குந் தீவினைக்குஞ் சேர்ந்துபொது வாகிநின்ற
இருவினைக்கு மெட்டா திருப்பவனே—குருவெனக்குச்
சொல்லுமுப தேசமதில் தோன்றும்பொரு ளேகுபிறை
வெல்லுமில் லாமில் விளக்கொளியே—அல்லுமெழு

40 பகலுமில்லாப் பட்டணத்திற் பாங்குபெற வாழ்வோனே
கவலுகிற மொன்றினுங்கா ணாதவனே—புவனிலெங்கள்
வல்லோனே யாரும் வணங்க வுரியோனே
நல்லோர் புகழவரு நாயகனே—யெல்லா
மருந்துயர மாயணுகுஞ் சிற்றின்ப மேயறிந்தோர்
பெருந்துயர மாயணுகும் பேரின்பமே—வருந்துமலர்த்
தெரிசனைக்குள் நிற்பவனே தெளிவே சுவைநாவில்
உரிசைரச கந்தரூபப் பரிசோசையே—வரிசைதரும்
அவ்வெழுத்தா யவ்வி லடங்காது டந்தைமாய்
உவ்வெழுத்தி லோங்கிநின்ற வுத்தமனே—யெவ்வெழுத்தும்

45 ஒன்றாகி ரண்டா யுருவாயென் னுள்ளமதில்
நின்றாவி யெங்கு நிறைந்தோனே—கண்டாலும்
இன்னநிற மின்னவடி வென்றொருவ ரேத்தரிய
வன்னநிற மாயுயர்ந்து வாழ்வோனே—உன்னுமுள்ளத்
தாதார மாறுங்கடந் தப்பாலுக் கப்பால்நின்
றோதாம லோசைதரு முட்பொருளே—யீராறு
கல்லாக் கயவர்கண்ணிற் கனவிலும்மெட் டானேநிலை
நில்லாரை நீங்கி நிறைந்தோனே—பொல்லானை
காடேற்ற மாகவரு கபிஷபா அத்துடன்சேர்த்
தீடேற்று மெங்க ளிறையோனே—கோடாமல்

50 உன்னைத்தொழு தேத்து முரியவடி யாரோடு
வென்னைத்தெரி சித்துணரு மேகனே—மின்னத்தால்
அப்புமுத லானபடைப் பத்தனையும் போற்றதரும்
ஒப்புவமை யில்லா வொருவனே—கற்பலிதன்
புத்திக்கட லேபற புகழ்ச்சிக் குரியவனே
சற்றுங்குறை யற்றுநின்ற தற்சொருபே—யெத்திசைக்கும்
மூலமணி மந்திரமே முஹம்மதுர் றஸுல்மொழிந்த
காலமுத லாய்ந்துதவுங் காவலனே—ஆலம்பதி
னெண்ணுயிர மும்புகழ்ந் தேத்துமிறை யோயுவந்
தண்ணு மலயன்றொழு மல்லாவே—உண்ணுமல்

55 உதரப் பசியுமனத் துட்பசியு முள்ளவர்க்குன்
குதுறத் தமுதளிக்குங் கோமானே—சதமுற்

றறியகலை யாகறங்க ளாராய்ந்து தேடினுநீ
தெரிவரிதாய் நின்றனைத்துந் தேர்பவனே—உரியபுக
ழூற்றஷரீ ஹத்தி லொழித்தெவருங் காணரிய
வெற்றிதரீ கத்தில்விளங் கும்பொருளே—முத்தொளிசேர்
நீதிஹகி கத்தில் நிறைந்தோசை கொண்டரிய
வாதிமஃரி பத்தில்வழங் கும்பொருளே—வேதியர்கள்
ஹூப்புமஃரி பத்தில் குறையாமல் நின்றடியேற்
கெப்பொழுது நன்மைகலை மீபவனே—யொப்பரவோ
டஞ்செழுத்து மைம்புலனு மஞ்சுபஞ்ச பூதமுமே
தஞ்சமென நின்றருளுந் தானவனே—நெஞ்சகத்தில்
உன்னினைவ றிந்துட் கலந்தெங் களுக்குமுயர்
மின்னும் பதவிதரும் வேந்தனே—பின்னுமுயர்
அண்டர்முனி பேயரக்க ரறியாமல் நின்றுலகில்
தொண்டர்தெரி சித்துணருந் துய்யவனே—கண்டருளே
யெண்ணு வகைகண் டிளிவுவகுத் தோய்மனக்
கண்ணு லொளிதெரியக் காண்பவனே—விண்ணோர்கள்
விசுவாசி யானவனே மேலோனே மெய்யடியார்
பசுபாச மீதுறையும் பார்த்திபனே—நசுகாபுக்
கினமணு காமலிரங்கும்பொரு ளேவசுவா
சானவனே டன்புபொருந் தாதவனே—தீனவர்கள்
கல்பதனுக் குள்ளுறையுங் காவலனே யாங்கள்செய்த
வல்வினைகள் போக்கிவர மீபவனே—தொல்லுலகில்
எறும்புகடை யெண்பத்து நான்குநா றுயிரத்தி
லுறும்பொருளா யெங்குமுண வானவனே—வெறும்பயனும்
ஆறுறு தத்துவமா யைரண்டு வாய்வுவதாய்
வேறுக வெவ்வுயிர்க்குமேலோனே—கூறுங்
கருவிகரு ணதிகளால்க் கைகலந்துங் காணரிய
பெரியதொரு மாய்கைப் பெரும் பொருளே—தெரிவரிய
சோதிப் பெருங்கடலே தொலைவொடலை வற்றவனே
லைதியெவர்க்குமுத லானவனே—நீதிசேர்
அப்புமுத லானபடைப் பத்தனைக்கு முன்னவனே
யெப்பொழுது நீகுறையில் லாதவனே—தப்பறவென்
சிந்தைக்கமலத் திலெழுந் தீபப்பெருஞ்சுடரே
தந்தைக்குமுன் பிறந்தார்க்குத் தாபரமே—உந்திக்
கமலத் திருவிளக்கே காண்பவர்க்குக் காண்பவனே
அவலச்ச மர்த்தரரி யாதோய—கவலரிய
எட்டெழுத் துள்வந் திருப்பவனே யெட்டெழுத்தில்
ஒட்டுப்படா வெங்கா ளொருவனே—வெட்டவெறும்

மேலவெளிக்குள் விளைந்தினித்த செந்தேனே
நாலுமுகப்பணியும் நாயகனே—ஆலமதி
லுள்ளவர்க ளோடு முயிர்க்குயிராய் நிரம்பியொரு
எள்ளளவ நீகுறையில் லாதவனே—விள்ளரிய
ஆங்கார மேல்வெளிக்குள் ளாருமன்றி நிற்பவனே
நீங்காம லெங்கு நிறைந்தோனே—பாங்காக
முக்கோணத் துள்ளுறையு முப்பொருளே யீரிரண்டாம்
சற்கோணத் துள்ளுறையுஞ் சற்குருவே—மிக்கபுக
ழனைத்தும் படைப்பதன்முன் னனல்ஹையுல்கையுமென்
றனைத்திருநா வாற்புகழு முத்தமனே—நினைத்துமகிழ்ந்
தெவ்வுயிரு மெவ்வகையு மெல்லாநீ தானாய்
அவ்விலெடுத் தவ்வி லமைத்தோனே—செவ்விலெழும்
ஈரா ரெழுத்தி லிருப்பவனே யீராறும்
ஓதாத மந்திரத்தி னுட்பொருளே—தீதாலுங்
காண்பவருக்குக் காணத்தெரிபவனே கசடருக்குஞ்
சோம்பருக்கு மெட்டாச் சுடரொளியே—வெம்பரிய
பஞ்சபூ தங்கள்தொழும் பார்த்திபனே பார்முழுதுந்
தஞ்சமது வாக நின்ற தானவனே—செஞ்சொல்மறை
சொல்லே பொருளே சுவையே சுவையிலெட்டா
தலைப் பகலாய்நின் றுள்பவனே—நல்லவொரு
நீராக்கி யுற்றநெருப் பாய்நிமைக்கு முன்னெய்யப்
பாரைப்பலவாப் படைத்தோனே—சீர்மேவும்
அலையாத பேரின்ப வானந்த வெள்ளத்தில்
நிலையா யுருவிருந்து நின்றோனே—கலைமேவும்
அருளுக்கரு ளாய் நிறைந்தோ ரணுவுமயங் காமலெழுந்
திருளுக்கிரு ளாகி நின்ற வேகனே—வெருளுக்குமுன்
கௌவென்ற சப்தம் சதருமற் காரிருளி
லவ்வென்ற சத்தமுத லானவனே—யௌவென்றாக
தானகி நின்றுயர்கள் சகலமுநீ தான்படைத்துக்
கோனா நபிக்குளுருக் கொள்வோனே—தேனூறல்
பாய்ந்தினித்த மாவும் பதவியுஞ்சேர்த் துன்னருளை
ஆய்ந்துணரு மேலோர்க் களிப்பவனே—யோக்தமனக்
காபிர்களும் பேய்களுநற் கமலநா ரணனும்பல்
தேவர்களும் போற்றநின்ற சீமானே—மேவநிதாய்
மேற்பட்டங் கூடுருவி மெய்ப்பாக நின்றடியார்
ஆர்ப்பனத்துக் குள்ளுறையு மல்லாவே—சீர்பெற்ற
பஞ்சகு ணத்துறையும் பழம்பொருளே யடியவரை
அஞ்சாமற் காத்ததுவு மல்லாவே—மஞ்செலவயுங்
குன்னென்றமை செய்துபய கூனென் றரும்பொருளே
யென்னென் றெவர்க்குமியம் பாதவனே—முன்னின்ற

95 தில்லை விளக்கவருந் திருநபியைத் தேடியுள்ளத்
தெல்லை யிலக்கத் தெழுஞ்சுடரே—வில்லைவிளைத்
தோங்காரத் தெய்தகணை யுட்கமலத் துள்ளுருகிப்
பாங்காய் வணங்கப்பர மானவனே—நீங்காத
வாசிக்குள் வாசியெனும் வலம்புரிச்சங் கின்றமணி
யோசைக்கு ளோசைதரு முட்பொருளே—நாசிக்குள்
ஈரெட் டெனவக் கிலங்குமென மந்திரத்தின்
றீதாறு தத்தருளுஞ் சீமானே—யோராறும்
கொடிக்குளமை செய்தெவையு நோக்காமல் நோக்கிவிண்ணே
முடுக்கில்கலம் பூத்தலறு மல்லாவே—கடுக்கிவரும்

100 ஹறுபுனது காமமுய ரிஸ்முல் அகுலமென்
றறுபதறு நான்குழுவஞ் சானவனே—சர்வமுநீ
தானு யெழுத்து சமையவடி வாயெவர்க்கும்
நோனைப் படியளக்குங் கோமானே—தீனபிதங்
காலைப் பிடிக்கத் தலையெவர்க்குங் கைவருமென்
ஞாலத் தடங்கலையு மாள்பவனே—மேலத்தெரு
விண்ணுலா மண்டபத்தில் வீற்றிருக்கு மேலோனே
மண்ணுள்ளா ரென்றும்வடி வானவனே—கண்ணி
லொளிமணியி ரண்டாயென் னுட்கமலக் கண்ணாடி
வெளிதெரிய நின்றருளு மேலோனே—தெளிவுதரும்

105 முத்தரள மொன்றாய் முளைத்த சிவமரத்தின்
வித்தாக வந்து விளைந்தோனே—சித்துகவ
கோடியமை செய்தடிமை கொள்பவனே மௌனமதுள்
ஓடிவிளையாடிவரு முத்தமனே—தேடியமூச்
செட்டெழுத்துங் கண்ணு யிரண்டெழுத்தி னூடுகூத்த
வட்டெழுத்துக் குள்ளுறைந்து வாழ்வோனே—விட்டகலா
மூன்றெழுத்தை நோக்கி முதலெழுத்தாய் நின்றடியேற்
கின்றெடுத்த தாய்போ லிருப்பவனே—ஆண்டவர்தம்
கால்பிடித்துத் தூங்கியிரு கண்விழித்தோரு க்குத்திரு
மால்கொடுத்துக் காணவரும் வல்லோனே—வேல்பிடித்துக்

110 கோத்தணிந்த கோவை குலையாக் குருபரனே
பார்த்தறிந்து போற்றப்பர மானவனே—சேர்த்தெழுந்த
அய்மகவுங் கூடென் றதிற்கலந்த தேனஹூம
திய்யாரி லொன்றி லிருப்பவனே—நீயாதம்
சபியுல்லா வுக்குயிர்நீ தானும்ஹௌ வாவுக்குங்
ஹபீபுல் லாக்குரிய காவலனே—புவியுள்ளோர்க்
காதிஷரீ ஹத்தோ டனுதிதரீ கத்தெனவுஞ்
சோதிஹகீ கத்தில்வருந் துய்யோனே—நீதியிவை

முச்சுடருந் தானாய் முளைத்துவரு மஃரிபத்தில்
எச்சுடருந் தானா யிருப்பவனே—அச்சுடரி

115 லொன்றுரைநீ யொன்றஹறூம தொன்றுபே ரொன்றுடனும்
ஒன்றுயிரோ டுட்கலந்த வுத்தமனே—பண்டுவரும்
மானைப்புலி யாயு மயிலையுமுன் னீன்றபெரு
மானைத்திரு வாசமுறும் வல்லோனே—ஞானமுறு
தௌஹீ தாய் நின்றுலகில் தூலகா யத்திலுறு
மாவிகால் மண்ணழலப் பானவனே—மேவியா
ரஞ்செழுத்து மூன்றெழுத்து மல்லா தகப்பொருளாய்
நெஞ்சகத்தில் வாழ்வுதரு நித்தனே—உன்செயல்கோ
டருள்பெருகி நின்றகவு துல்லகுலங் காகியிநா
டிருளகலுங் காலோ டெழுஞ்சுடரே—மருள்பெருகும்

120 மாய்கைமூன் றதனிலொன்று மன்புவியு நம்முடலொன்
றுகையால் வத்துமமைத் தாள்பவனே—சோகையால்
திருப்பதியிற் செல்லாமல் தீங்குபல பாவமுஞ்செய்
துருப்பெரிய மாந்தர்க்குத வாதவனே—இருப்பவர்கள்
எண்ணமதி னூடெழுந்து மீவோர் தமக்கிரங்கி
உண்ணும்பல பாங்கருளு முத்தமனே—யெண்ணுக்
தகுத்துக் குரியவனே தம்பிரா னேயெவர்க்கும்
பகுத்தரிய வாழ்வுதரும் பார்த்திபனே—தொகுத்தரிய
பேசுமறை நான்குமுன்னைப் பேரரியா தென்றுபல
வோசையுறு மாந்தர்க் குணர்பவனே—நேசமுறு

125 மெஞ்ஞானத் துள்ளுறையும் வேந்தனே மெய்யுள்ளார்க்
கஞ்ஞானம் போக்கிநிறைத் தாள்பவனே—துஞ்சானஞ்
சொல்லு மடியவரைத் தூடணித்து மேலோர்கள்
கல்பதனுக் குள்ளுறையுங் காவலனே—இல்லெனவக்
தெல்லா வுயிர்க்குமிர ணப்பொலிவு றஹ்மத்தோ
டல்லா வெனப்பெருமை யானவனே—வல்லானே
எண்ணு மெழுத்தி லொளியுருவா யெவ்வுயிர்க்கு
மன்னன் சிவமயமென் றுள்பவனே—குன்னென்றுல
கனைத்தோ டுயிர்க்கு மருபரு பத்திலும்
உனைத்திருநா வாற்புகழு முத்தமனே—நினைத்துவரு

130 மச்சமா ஷிக்கு மதையன்பு மன்ஷூக்கென்
றிச்சையிஷூக் காகநின்றவேகனே—பச்சையொன்று
சுட்டதுவுங் கூட்டியே தூலகா யத்திலும்
எட்டுநிறம் நான்குடற் கீபவனே—வெட்டவெறும்
பாழான துக்குளுரு வானபய காம்பர்க்கரு
ளேழா றுடெழுத்தி லீபவனே—நாளாறி

லோரிரவின் னுள்ளெழுந்த வுற்றபெருங் காலைப்பிடித்
தீரிரவி னுள்ளத் தெழுஞ்சுடரே—ஆராரும்
காணரிய சிந்தைக் கமலத்தெழுந் திப்புவியில்
ஊனுருவாய் நீ அஹமத தானவனே—பூணரிய
காரிருளில் கானகத்தில் காரிகையைக்கைப்பிடித்தங்
காருமறி யாமலர சாள்பவனே—பாரிலெழுந்
தெண்மை தரும்வேதப் பொருளே யெழுஞானத்
தன்மைதரும் வித்தி லுறும்பொருளே—நன்மைநலம்
கூடேற்றம் பாவ மெழுங்குபிரோ டிப்புவியிற்
கூடேற்ற மார்க்குங்குறை யாதவனே—காடேற்றம்
இல்லா தவர்க்கு மெளியவர்க்கு நன்மைநலம்
சொல்லாம லீந்தருளுந் துய்யவனே—யெல்லார்க்கும்
பாசத்தாற் பூட்டிப் பசுவால் பதவிவிளைத்
தாஷிக்காய் நீயணைத்து மாள்பவனே—நேசத்தால்
நசுகசென்று மூலக் கருத்திலெழுந் தஹ்மதொடு
நசுகசென்ற போதமணு காதவனே—விசுவ. சன்று
சொல்லுந் தொழுகைக் கிடையில்வருஞ் சுபசொரூபத்
தில்லென் றெழுந்துதவு மேகனே—கல்பிலொன்றுங்
காணு துறைந்ததற்குங் காரணத்துக் கும்மிடையி
லானுர்கா னென்ற ருளுபவனே—வாணுளெட்
டாதமொடு ஹௌவாவை ஆவென்றுரு வாயமைத்துப்
போதமக லாதுறையும் புண்ணியனே—காதமெழும்
ஈயென் றஹமதையுன் னிருதயத்தி லெவ்வுயிர்க்கும்
ஊவென் றொளிபரவு முத்தயனே—யோவென்றே
யானந்த ரூபமதா யவ்வென் றடியவர்க்குத்
தானந்த ரூபந் தருபவனே—தேனந்தப்
பாற்கடலும் பச்சைப் பவளக்கட லுந்தாளப்
பூக்கடலும் நாலும்பொலி வானவனே—காற்கடமுன்
அவ்விருளா யங்கோ ரணுவுமியங் காமலெழுந்
தெவ்வுயிருந் தாணு யிருப்பவனே—உவ்வென்றெழும்
வான வடிவுருவாய் மறைநான்கி னுச்சிபழுத்
தான கனியாய்நின் றாள்பவனே—ஞான
மருவுருவாய் மண்ணில் வடிவுருவாய்த் தானவர்நின்
னடியுருவ மேதென்றறி யாதவனே—படியுருவம்
பாய்ந்தெழுமெய்ஞ் ஞானப் பராபரனே பதுமத்தரு
ளாய்ந்துணரு மேலோர்க்கொன் றானவனே—தேய்ந்துவம்
சங்கரனுக் கன்பு தருபவனே தாமரைக்குள்
அங்கரனுக் காதார மானவனே—வெங்கதிர்முன்
சிவகாமத் துளியையுருச் செய்ததைவிள் ளரிதார்க்கும்

சுவகாமத் தொளிசிதறுந் துய்யவனே—முகமாறில்
மின்னிடையு மனுகரொடு வெய்யவனு முஹியித்தீனு
முன்னும்லைலத் துல்கதுருய் வாழ்வோனே—யென்று
முயிருக்குயிராகி யுள்ளொளிக்குள் மேலொளியென்
றயிருக் கறுசுவைகா வானவனே—பயிரதற்
கப்புதவுங் காலைப்பிடித் தழலெழுப்பிக் காண்பவரோ
டெப்பொழுது நட்பகலா தேகனே—முப்பொருளின்
சிகரக் கலையறிவாய் ஜீமினுறுந் தலையோட்டி
லிகாகிலை யீமானென் றிருப்பவனே—அகரமுதல்
ஆன பெருஞ்சுடரா யனேகனேக ரூபமதாய்த்
தீனவர்களோடுறையுஞ் சீமானே—ஞானபரன்
ஈண்டுவரு மூமினொர்க் கென்னுடனென் பெம்மானே
வேண்டுஞ் ஷபா அத்தருளு மேலோனே—மூன்றெழுத்தில்
ஆதிஜமால் சந்திரன னதிஜலால் வெய்யவனும்
சோதி றகிமுடுவாந் துய்யவனே—நீதியிவை
யெண்ணு யிரங்கோடி யிமையோ ருளத்திலெழுந்
துண்ணு துடலுக்குயி ருள்ளோனே—கண்ணுடி
மாரிபத்தஞ் செனப்பார்வை மனுகறுள் ளத்துதிப்
போரனைத்தும் பதியானொர்க் கருள்பவனே—காரியத்தால்
மனத்திடையில் கின்றதிரு வாளுக் குறைகழித்தும்
இனத்திடைநீ ரண்டறவே சென்றோனே—கினைத்தகுறிப்
புருவாகக் கண்டதற்பின் னுலகுயிர னைத்துக்குநீ
குருவாகு மென்றுரைத்த கோமானே—திருவாழும்
முண்டகத்தி னுள்ளிருக்கு முழுக்கருவைத் தெரிசிப்பவர்
என்று முயிர்க்கரசா மென்றோனே—நன்றிபல
காரணமுந் தீதாறுங் காணவென துட்கமலம்
பூரணமா யெங்குகின்ற புண்ணியனே—ஆரணநா
லேதுமிலை நீயலா தென்றியம்பி யெவ்வுயிரும்
ஓதுமுனைத் தானென் றுரைப்போனே—வேதவுரை
கற்றவர்க்குங் கேட்டவர்க்குங் கல்புதிறந் துன்னருளை
உற்றவர்க்கு மென்னேடுற வுள்ளவனே—பெற்றவர்க்கு
எழுதிப் படித்தவர்க்கு மேகாம லுண்மகிழ்ந்து
பழுதெனக் காணார்க்கும் பார்த்திபனே—முழுதும்பல்
வல்வினையுந் தீங்குகளும் வாராமற் காவல்செய்து
தொல்லுலகில் வந்துதவுந் துய்யோனே—கல்லவர்கள்
மெய்யில் மிடைவருத்த மிக்கபிழை காவுளத்துச்
செய்யு மிடையகற்றுஞ் சீமானே—உய்யும்பல்
சொல்லுறுதி மாறுயெழுந் தோஷத்தா லாபத்தும்
வல்வினையும் போக்கிவர மீபவனே—கல்பதனுள்

வஞ்சகமும் பொய்யறுதி மாறிச்சதி செய்வதுவும்
கஞ்சுபிஞ்சு போக்கிலலை மீபவனே—மிஞ்சும்பல்
சாத்திரத்தி லெட்டார் பதுர்ஞானத் தவக்குறைசெய்
தேத்துமதற் கப்பா விருப்பவனே—வேற்றுறக்கம்
வாராமற் காத்து மனப்பிடை தீர்த்துனக்கொன்
றேரூப் பிழைபொறுக்கு மேகனே—ஓராமல்

175 பேயர்போல் நின்று பிதற்றுமடி யார்க்குவெகு
பாயிதா வீந்தருளும் பார்த்திபனே—யேதுவரச்
செய்யுமனச் சூடும்பல் தீவினையு மாபத்தும்வந்
துய்யுமதைக் காத்தருளு முத்தமனே—மெய்யடியார்க்
கினம் யழுதுபல விடையூ றிழிவுமது
தானென் றணுகாத தானவனே—ஞானமதில்
முப்பொருளு மொன்றாய் முடிந்த முழுக்குருவென்
றெப்பொழுது மெய்ப்போ டிருப்பவனே—தப்பறநல்
லேக சமுத்திரமென் றில்முல்யகீ னென்னுமுள்ளத்
தாகத்தரு மைனுல்யகீ னைவனே—யோகத்தரும்

180 ஹக்குல்யகீ னென்னுங் கடலிலெழுங் காரணமூன்
றுக்குல்யகீ னாகவரு முத்தமனே—திக்றுல்யகீன்
ஓர்பங் கணிகியற லோசையதற் கப்பால்நின்
றீர்பங் கொலியில்லா தேங்கிறையே—காரோங்கும்
பேச்சைச் செயிக்குமொரு பேதங்க ளற்றிறையோன்
ஆச்சாச் செனுமாரு மறியானே—மூச்சாச்சென்
றேடிமலக் காவியைவந் துரைகடத்து முன்னுமெனைத்
தேடி யலங்கரிக்குஞ் சீமானே—நாடிக்
குறித்தமணி மந்திரத்தைக் கூடுவிட்டங் குயிர்செலுங்கா
லெறித்தமணி நாவிலெமக் கிபோய்—பறித்தமலர்

185 பிண்டத்தில் வார்த்தவுயிர் பிடிக்குமந்தக் கசப்பையறுத்
தண்டத் தமுதளிக்கு மல்லாவே—கண்டத்தில்வாழ்
ஆத்துமா வென்னும்புக ழாதிகா ரணத்திலுயிர்
காற்றுவா கனத்திலுறுங் காவலனே—பாத்திமா
அஞ்சுமுலைப் பால்குடித் தயருமுனக் காளாகக்
கஞ்சமலர் கொண்டுவருங் காவலனே—செஞ்சொற்
புறுகானை அஹ்மதுள்ளம் பொருந்துகலை நான்குமொரு
மறுக்காணு தென்று வசனிப்போய்—வறக்கான
கனது முறையோடு தலைகிழ்மே லாய்ஹதீ
துனதுறு ஹானியத்துநான் குரைப்போய்—கனதிநபி

190 பாதநிலந்தோயாப் பதவியுமே கக்குடையென்
றோதுஞ் சனத்தையுவந் தருள்வோனே—வேதமுறை

கண்டுதோமா ரீமானைக் காண்பதற்கு றூஹானி
யென்றுறுங்குருன் ஹபூபுக் கிபவனே—நன்றியஃதைப்
பற்றியறியா வீணர் பகைவோர்வந் தோறுமுறை
சுற்றுதலை கீழ்மேலாய்ச் சொல்வோனே—அற்றகுபிர்
ஈனமிடை யூராணுகா ரிஸ்லாமி லுள்ளவர்கள்
கானமறை ஹதீதுதலீ லானவனே—ஊனமறும்
மூசா நபிக்கரிய மொழியுக்தௌ ரூத்ததனில்
கூசா நவுஹறுபின் கோமானே—யீசாவுக்
கிந்தமறை யிஞ்சீலுக்கேய்ந்தஹறு பானபத்தஞ்
சால்ந்தசபூ றக்கஞ்சுபத்தொன் றானவனே—தோய்க்திறஸூல்
உள்ளத் துறும்புக்கா னுற்றபதி னொலெழுத்தும்
விள்ளத்தொலை யாதிசைத்த மேலோனே—நள்ளனுனை
விண்ணஞ்சே ருலகில் விரிந்தமறை நான்கிலெழுக்
தெண்ணஞ்சு மூன்றுமதற் கிபவனே—கண்ணஞ்சிப்
பேசரிய காமப் பிரளயத்தி லேயிறங்கி
ஓசைக்கிருபைகள்கான் குள்ளோனே—தேசமதில்
ஓதுமறை நான்கும்விண்ணி லுறுமமையும் பொன்னம்பல்
போதரவோ டும்புகழும் புண்ணியனே—ஆதரவோ
டன்புதருங் காமத் தருள்சிறப்பு மெய்ஞ்ஞானத்
தன்பமுறுக் தலைமை தருவோனே—வெம்பதவு
மவ்வல் கலி மாதிக்குரு மல்லவென் றுங்கிருபை
யெவ்விலுறு நான்குமிலைசக் தீபவனே—செவ்விருளாய்
மூந்துமெழுத்து முதலெழுத்துக் தானாகித்
தந்தையென்றித் திக்குழுக்கிளை தானவனே—சந்தமுறும்
விண்ணவர்க்கு மாதமுஹ யித்தீனுக் தாய்தந்தையென்
றுன்மைசிவ ஞானத் துறைவோனே—யென்னும்
அகிலொடு புத்தியதற் கன்னைபிதா கல்பெருலென்
றெகினபி யோடுரைத்த வேகனே—ஹக்கனே
அல்ஹம்து லில்லாஹி யனைத்தும்புகழ் வதைக்கபூல்செய்
தெல்லாதிக் றுள்ளுறையு மேகனே—சொல்லந்த
மேலும்றப் பில்ஆல மீனென் றிறைவனீ
ஆல மனைத்தும்படைத் தாள்வோனே—கோலமுடன்
அர்றஹ்மா னென்றுலகி லனைவர்க்கும்ஷ பாஅத்திலொரு
குறைபகராக் கிருபைதருங் கோமானே—இறைவனுன்னை
நின்றுதெரி சிப்பவர்க்கு நிர்றஹீ மெனும்பழைய
நன்றிக் கிருபைதரு நல்லோனே—யென்றுமுயர்
ஏவலுறு மாலிக்கி யௌமித்தீ னென்றயார்க்
காவலுறுங் கூலிகொடுத் தாள்பவனே—காவல்தரும்
நிய்யாகு மென்றலகில் நின்சரணந் தொழுமவரோ

டிய்யாக் கலகுபுது வென்றூத்திறையே—இய்யாக்க
கஸ்தயீனென்றுமிக கல்லுதவி தேடுமவர்
கஸ்திபோக் கிப்பதவி காண்போனே—விஸ்திகலம்
எட்டமனுகும் பெரியோர்க்கிஹ்றி கஸ்ஸிரூத்தல்முஸ்தகீமென்
றொட்கடும் பாலத்துத வும்பொருளே—பட்டுடையோர்க்
கிரங்கிசிரூத் தல்லதீனுவென்றருளு மெய்ஞ்ஞானத்
துரங்களறிந் திடேற்றுக் துய்யோனே—வரங்கள்தரும்
அன்அம்த வென்றூேவிமார்க் காகவரு கிஃமத்திலோன்
றுன்னக்த மீர்தருளு முத்தமனே—அன்அம்த
அலைஹிமென வேஅவுலி யாக்களொடு மெங்களை
சஹுகையுடன் கூட்டியருள் தருவோனே—பலவிதமாய்ச்
சதிகளனி யாயஞ் செய்வோர் தம்முடன் கூட்டாமலே
கைரில்மகு ஊப்பியென்றுங் காப்பவனே—தெரியுகல
வாமவுலி யாக்களுடனடியேனை யுஞ்சேர்த்து
கேமகபி யோடமதுள் நிற்பவனே—யோமதனுள்
ஒளிகள்தெரி சித்துணரா ஒலல்லா வீனென்றுன்
வழிபிழைத்தா ரோடுவருத் தாதவனே—தெளிவுறுகல்
மூமின் களையும்பல் முஸுலிமோ டெங்களையும்
ஆமீனென்ற வழிதனிலாக் கல்லாவே—ஹாமீமதில்
பொங்குகிகு மத்திரணப் பொலிவும்றஹூ மத்துமுவக்
தெங்கு முரர்பறக்கத் திவோனே—யங்கையோடு
எரிகொடுசுட் டேபுகைத்தோர்க் கிடறுவருத் தாதெமக்கு
மரியகல வருளாமீ னல்லாவே—கதிபலவும்
விக்காமல் கல்லவர்க்கு மேலவர்க்கு மெற்குக்தொண்ட
னுக்கனுகா தருளாமீ னல்லாவே—புக்காமல்
பாசத்துறும் பசுவும்பதி யுக்தெரிந்தோ ராவெமக்கு
ஆஷிக் கருளாமீ னல்லாவே—பேசக்கென்றும்
வாராமற் காவல்செய்துன் வடிவுதெரி சித்திடகல்
ஆதார மருளாமீ னல்லாவே—தீதாறை
மூமினல்லபேர் முஸ்லீமோ டெமக்குமருள்
ஆமினல்லா ஹூம்மஆமி னல்லவே—பூமிதனில்
தந்தைதா யொஸ்தாது தருமவுனக் குருமவொடக்
கெந்தகல முந்தருக் றப்பி லாலமீன்—உந்திதரும்
மறுஹபா வுன்னையுண ராவன்பிழை போக்கெமக்குப்
பிறஹ்மத் திக்கயா அறுஹமர் ருஹிமீன்

ஞானப்புகழ்ச்சி முற்றுப்பெற்றது.

ஆகத்திருப்பாடல்—687

Printed at Shahul Hameedia Press, Madras.